பள்ளிக் கல்வித் துறை

# பத்தாம் வகுப்பு மாணாக்கர்களுக்கான கற்றல் கையேடு

# தமிழ்

தலைவர்

**திரு.ப.மதுசூதன் ரெட்டி இ.அ.ப.,**

மாவட்ட ஆட்சியர், சிவகங்கை மாவட்டம்.

கல்வி ஆலோசகர்

**திரு.அ.பாலுமுத்து**

முதன்மைக் கல்வி அலுவலர்

சிவகங்கை மாவட்டம்.

ஒருங்கிணைப்பாளர்

**முனைவர்.அ.ஆனந்தி, முதல்வர்(பொ),**

மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,

காளையார்கோவில், சிவகங்கை மாவட்டம்.

| | | |
|---|---|---|
| **திரு.பா.சங்கு முத்தையா,** மாவட்டக் கல்வி அலுவலர் திருப்பத்தூர். | **திருமதி.கோ.அமுதா** மாவட்டக் கல்வி அலுவலர் சிவகங்கை. | **திரு.செ.சண்முகநாதன்** மாவட்டக் கல்வி அலுவலர் தேவகோட்டை |

| | |
|---|---|
| | **உருவாக்கம் :** **மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம், சென்னை.** |

# தமிழ்

**பாட வல்லுநர்**
**முனைவர்.கு.மனோன்மணி ,**
முதுநிலை விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
காளையார்கோவில், சிவகங்கை மாவட்டம்.

**பாட ஒருங்கிணைப்பாளர்கள்**
**திரு.ப.தொல்காப்பியன்**
தலைமையாசிரியர்
அரசு உயர்நிலைப்பள்ளி
தவத்தாரேந்தல்

**வரைவுக் குழு உறுப்பினர்கள்**

**பட்டதாரி ஆசிரியர்கள் (தமிழ்)**

| | | | |
|---|---|---|---|
| 1 | **திருமதி.பி.மாலதி** | ஆலங்குடியார்வீதி நகராட்சி உயர்நிலைப்பள்ளி | காரைக்குடி |
| 2 | **திரு.ரெ.புகழேந்தி** | அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளி | பீர்க்கலைக்காடு |
| 3 | **திருமதி.கி.இந்திராணி** | அரசு உயர்நிலைப்பள்ளி | தென்மாப்பட்டு |
| 4 | **திருமதி.கு.கிருஷ்ணவேணி** | அரசு உயர்நிலைப்பள்ளி | சாக்கோட்டை |
| 5 | **திரு.மு.குமார்** | அரசு உயர்நிலைப்பள்ளி | ஜெயங்கொண்டான் |

**பத்தாம் வகுப்பு**
**தமிழ்**
**வினாத்தாள் வடிவமைப்பு**

| வினா எண் | வினா பகுதி, பிரிவு | மொத்த வினாக்கள் | விடையளிக்க வேண்டிய | மொத்த மதிப்பெண்கள் |
|---|---|---|---|---|
| 1-15 | பகுதி 1 பலவுள் தெரிக கவிதைப்பேழை 5, உரைநடை உலகம் 5,கற்கண்டு(இலக்கணம்)5 | 15 | 15 | 15*1=15 |
| 16-21 | பகுதி 2 பிரிவு 1 குறுவினா கவிதைப்பேழை 3, உரைநடை உலகம்-3<br>வினா எண் 21 திருக்குறள் (கட்டாய வினா) | 6 | 4 | 4*2=8 |
| 22-28 | பகுதி 2 பிரிவு 2 குறுவினா மொழியை ஆள்வோம், கலைச்சொல்<br>அறிவோம், நிறுத்தக்குறி, கற்கண்டு (இலக்கணம்) | 7 | 5 | 5*2=10 |
| 29-31 | பகுதி 3 பிரிவு 1 சிறுவினா உரைநடை உலகம் 2, உரைப்பத்தி வினா1 | 3 | 2 | 2*3=6 |
| 32-34 | பகுதி 3 பிரிவு 2 சிறுவினா கவிதைப்பேழை-2<br>வினா எண் 34 மனப்பாடப் பாடல் (கட்டாய வினா) | 3 | 2 | 2*3=6 |
| 35-37 | பகுதி 3 பிரிவு 3 கற்கண்டு (இலக்கணம்)சிறுவினா 1,அலகிட்டு வாய்பாடு-1, அணி-1 | 3 | 2 | 2*3=6 |
| 38-42 | பகுதி 4 கவிதைப்பேழை<br>நெடுவினா-1(2) கடிதம்-1(2) படம் உணர்த்தும் கருத்து-1<br>படிவம் நிரப்புதல் -1<br>நிற்க அதற்குத்தக அல்லது மொழிபெயர்ப்பு-1(2) | 8 | 5 | 5*5=25 |
| 43-45 | பகுதி 5 நெடுவினா<br>உரைநடை உலகம் அல்லது நயம் பாராட்டல் -1(2) விரிவானம் 1(2)<br>பொதுக்கட்டுரை-1(2) | 6 | 3 | 3*8=24 |
|  | மொத்தம் | 51 | 38 | 100 |

## வினா எண் 1 - 11

### பலவுள் தெரிக

1. ‘ காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்’ நிலத்துக்கு நல்ல உரங்கள் இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது
   அ)இலையும் சருகும் ஆ)தோகையும் சண்டும் இ)தாளும் ஓலையும் ஈ) **சருகும் சண்டும்**

2. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் எவ்வாறு வரும்
   அ) எந்+தமிழ்+நா ஆ) எந்த+தமிழ்+நா இ) **எம்+தமிழ்+நா** ஈ) எந்தம்+தமிழ்+நா

3. ‘ கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது’ — தொடரில் இடம் பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே
   அ) பாடிய : கேட்டவர் ஆ) பாடல் : பாடிய இ) கேட்டவர் : பாடிய **ஈ) பாடல் : கேட்டவர்**

4. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர் வகை
   அ) குலை வகை ஆ) **மணி வகை** இ) கொழுந்து வகை ஈ) இலை வகை

5. “ உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம்
   உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்” - பாரதியின் இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள நயங்கள் யாவை?
   அ) உருவகம், எதுகை ஆ) **மோனை, எதுகை** இ) முரண், இயைபு ஈ) உவமை, எதுகை

6. ‘ **பெரியமீசை’ சிரித்தார்** - வண்ணச் சொல்லுக்கான தொகையின் வகை எது?
   அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை இ) **அன்மொழித்தொகை** ஈ) உம்மைத்தொகை

7 . பின்வருவனவற்றுள் முறையான தொடர்
   அ) தமிழர் பண்பாட்டில் தனித்த வாழை இலைக்கு இடமுண்டு
   ஆ) தமிழர் வாழை இலைக்குப் பண்பாட்டில் தனித்த இடமுண்டு
   **இ) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு**
   ஈ) தமிழர் வாழை பண்பாட்டில் தனித்த இலைக்கு இடமுண்டு

8. அறிஞருக்கு நூல் , அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது
   **அ) வேற்றுமை உருபு** ஆ) எழுவாய் இ) உவமஉருபு ஈ) உரிச்சொல்

9. ‘உனதருளே பார்ப்பன் அடியேனே’ — யாரிடம் யார் கூறியது?
   அ) குலசேகராழ்வாரிடம் இறைவன் **ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்**
   இ) மருத்துவரிடம் நோயாளி ஈ) நோயாளியிடம் மருத்துவர்

10. குலசேகர ஆழ்வார் ‘வித்துவக்கோட்டம்மா’ என்று ஆண் தெய்வத்தை அழைத்துப் பாடுகிறார். பூனையார் பால்சோற்றைக் கண்டதும் வருகிறார் ஆகிய தொடர்களில் இடம் பெற்றுள்ள வழுவமைதி முறையே
    அ) மரபு வழுவமைதி, திணை வழுவமைதி ஆ) இடவழுவமைதி, மரபு வழுவமைதி
    **இ) பால் வழுவமைதி, திணை வழுவமைதி** ஈ) கால வழுவமைதி, இட வழுவமைதி

11. அருந்துணை என்பதைப் பிரித்தால்
    **அ) அருமை+துணை** ஆ) அரு+துணை இ) அருமை+இணை ஈ) அரு+இணை

12. “இங்கு நகரப் பேருந்து நிற்குமா?” என்று வழிப்போக்கர் கேட்பது --- வினா
    “அதோ, அங்கே நிற்கும்.” என்று மற்றொருவர் கூறியது ---- விடை
    அ) ஐயவினா, வினாஎதிர் வினாதல் ஆ) அறிவினா, மறை விடை
    **இ) அறியாவினா, சுட்டு விடை** ஈ) கொளல்வினா, இனமொழி விடை

13. “அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
    மருளை அகற்றி மதிக்கும் தெருளை” — என்று இவ்வடிகளில் குறிப்பிடப்படுவது எது?
    அ) தமிழ் ஆ) அறிவியல் **இ) கல்வி** ஈ) இலக்கியம்

14. குளிர் காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள் ----
அ) முல்லை, குறிஞ்சி, மருத நிலங்கள் ஆ) குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள்
**இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள்** ஈ) மருதம், நெய்தல், பாலை நிலங்கள்

15. ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடுகின்றனர். - இத்தொடரின் செயப்பாட்டு வினைத்தொடர் எது?
அ) ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடுவர்
ஆ) ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடப்படுகிறது
**இ) ஒயிலாட்டம் இருவரிசையில் நின்று ஆடப்படுகிறது**
ஈ) ஒயிலாட்டம் இருவரிசையில் நின்று ஆடப்படுகின்றனர்

16. கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன?
அ) நல்ல உள்ளம் இல்லாதவர்கள் இல்லாததால் ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்
இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால் **ஈ) அங்கு வறுமை இல்லாததால்**

17. ‘மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்’
மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் முறையே-
**அ) திருப்பதியும் திருத்தணியும்** ஆ) திருத்தணியும் திருப்பதியும்
இ) திருப்பதியும் திருச்செந்தூரும் ஈ) திருப்பரங்குன்றமும் பழனியும்

18. ‘தன் நாட்டு மக்களுக்குத் தந்தையும் தாயும் மகனுமாக இருந்த அரசன்’ என்னும் மெய்க்கீர்த்தித் தொடர் உணர்த்தும் பொருள்
அ) மேம்பட்ட நிருவாகத்திறன் பெற்றவர் ஆ) மிகுந்த செல்வம் உடையவர்
இ) பண்பட்ட மனிதநேயம் கொண்டவர் **ஈ) நெறியோடு நின்று காவல் காப்பவர்**

19. இருநாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம் ---
அ) நாட்டைக் கைப்பற்றல் ஆ) ஆநிரை கவர்தல் **இ) வலிமையை நிலைநாட்டல்**
ஈ) கோட்டையை முற்றுகையிடல்

20 தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி. கருதியது ---
அ) திருக்குறள் ஆ) புறநானூறு இ) கம்பராமாயணம் **ஈ) சிலப்பதிகாரம்**

21. மேன்மை தரும் அறம் என்பது ---
**அ) கைம்மாறு கருதாமல் அறம் செய்வது**
ஆ) மறுபிறப்பில் பயன் பெறுவோம் என்ற நோக்கில் அறம் செய்வது
இ) புகழ் கருதி அறம் செய்வது
ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது

22. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும் பொருள்களின் இருப்பைக்கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர்
அ) உதியன் : சேரலாதன் **ஆ) அதியன் : பெருஞ்சாத்தன்**
இ) பேகன் : கிள்ளிவளவன் ஈ) நெடுஞ்செழியன் : திருமுடிக்காரி

23. காலக்கணிதம் கவிதையில் இடம்பெற்ற தொடர் ---
**அ) இகழ்ந்தால் என்மனம் இறந்துவிடாது**
ஆ) என்மனம் இகழ்ந்தால் இறந்துவிடாது
இ) இகழ்ந்தால் இறந்துவிடாது என்மனம்
ஈ) என்மனம் இறந்துவிடாது இகழ்ந்தால்

24. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம் ---
**அ) அகவற்பா** ஆ) வெண்பா இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா

25. சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது
அ) அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்தல் **ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காத்தல்**
இ) அறிவியல் முன்னேற்றம் ஈ) வெளிநாட்டு முதலீடுகள்

26. பூக்கையைக் குவித்துப் பூவே புரிவொடு காக்க என்று -----,------வேண்டினார்
**அ) கருணையன் எலிசபெத்துக்காக** ஆ) எலிசபெத் தமக்காக
இ) கருணையன் பூக்களுக்காக ஈ) எலிசபெத் பூமிக்காக

27 வாய்மையே மழைநீராகி - இத்தொடரில் வெளிப்படும் அணி
அ) உவமை ஆ) தற்குறிப்பேற்றம் **இ) உருவகம்** ஈ) தீவகம்

28. கலையின் கணவனாகவும் சமுதாயத்தின் புதல்வனாகவும் இருந்து எழுதுகிறேன் - இக்கூற்றிலிருந்து நாம் புரிந்துகொள்வது
அ) தம் வாழ்க்கையில் பெற்ற விளைவுகளைக் கலையாக்கினார்
**ஆ) சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே எழுதினார்**
இ) அறத்தைக் கூறுவதற்காக எழுதினார்
ஈ) அழகியலுடன் இலக்கியம் படைத்தார்

**இயல் 1 (வினா எண் 12 முதல் 15 வரை)**

பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க

1. தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!
இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!
மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!

1.இச்செய்யுள் இடம்பெற்ற நூல் எது?
அ. உலகியல் நூறு ஆ. பாவியக்கொத்து இ.நூறாசிரியம் ஈ. கனிச்சாறு
2. 'மன்னுஞ் சிலம்பே' - இத்தொடரில் வரும் இலக்கியம் -------------
3.தென்னன் என்ற சொல்லின் பொருள்------------
4.செந்தமிழின் வடிவம் எது என்று ஆசிரியர் கூறுகிறார்?
**விடைகள்: 1 ஈ.கனிச்சாறு 2. சிலப்பதிகாரம் 3.பாண்டிய மன்னன் 4. மணிமேகலை**

**இயல் 4**

2. வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்
மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்
மீளாத் துயர்தரினும் வித்துவக்கோட்டம்மா! நீ
ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே.

1. இந்நூலின் ஆசிரியர் -------------
அ. கீரந்தையார் ஆ. குலசேகராழ்வார் இ. பாரதியார் 4பெருஞ்சித்திரனார்
2. இப்பாடல் வழி அறியவரும் சிகிச்சை முறை---------
3.இச்செய்யுளில் இறைவன் எவ்வாறு உருவகப்படுத்தப்படுகிறார்?
4. "மாயம்" என்பதன் பொருள் ----------
**விடைகள்: 1. ஆ.குலசேகராழ்வார் 2. அறுவைச்சிகிச்சை 3. அன்னையாக 4. விளையாட்டு**

**இயல் 5**

3. அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை
அருத்துவதும் ஆவிக்கு அருந்துணையாய் இன்பம்
பொருத்துவதும் கல்வியென்றே போற்று.

1. இச்செய்யுளைஇயற்றியவர்-------------
2. பிரித்துஎழுதுக - அருந்துணை
3. செய்யுளில் **மதி** என்ற சொல்லின்பொருள்----------
4. இச்செய்யுளின் மையப்பொருள்----------

**விடைகள்: 1. செய்குதம்பிப்பாவலர் 2. அருமை + துணை .3.அறிவு 4. கல்வி**

**இயல் 6**

4. வண்மையில்லை யோர்வறுமை யின்மையால்
திண்மையில்லை நேர்செறுந ரின்மையால்
உண்மையில்லை பொய்யுரை யிலாமையால்9 வெண்மையில்லை பல்கேள்வி மேவலால்

1. இச்செய்யுள் இடம்பெற்ற நூல் ------------
2. வண்மை என்ற சொல்லின் பொருள் -----------
3. பொய்யுரை – பிரித்தெழுதுக
4. கோசலநாட்டில் அறியாமை இல்லை. ஏன்?

**விடைகள்:1. கம்பராமாயாணம் 2, கொடை 3. பொய் + உரை 4.கேள்விச்செல்வம் மிகுதல்**

**இயல் 7**

5. “பகர்வனர் திரிதரு நகரவீதியும்;
பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்;
தூசும் துகிரும் ஆரமும் அகிலும்”

1. இச்செய்யுள் இடம்பெற்ற நூல்-------------
2. பாடலில் அமைந்த எதுகை,மோனையை எடுத்து எழுதுக.
3. 8றகல¡ffகாருகர் - பொருள் தருக.
4. ற8னஇப்பாடலில் குறிப்பிடப்படும் நறுமணப் பொருள்கள் யாவை?

**விடைகள்:1. சிலப்பதிகாரம் 2. பட்டினும் - கட்டு, பகர்வனர்- பட்டினும் 3. நெசவாளர் 4.அகில், சந்தனம்.உ**

**இயல் 8**

6. கவிஞன் யானோர் காலக் கணிதம்
கருப்படு பொருளை உருப்பட வைப்பேன்!
புவியில் நானோர் புகழுடைத் தெய்வம்
பொன்னினும் விலைமிகு பொருளென் செல்வம்!

1. பாடலின்ஆசிரியர் யார்?
2. கவிஞன், கருப்படு சொற்களில் வரும் நயம்-----------
3. புவி என்ற சொல்லின் பொருள் -------------பிரித்து எழுதுக நானோர் ண

**விடைகள்:1. கண்ணதாசன ̇ 2. மோனை 3. பூமி 4. நான் +ஓர்**

**இயல் 9**

7. பூக்கையைக் குவித்துப் பூவே

புரிவொடு காக்கென்று அம்பூஞ்
சேக்கையைப் பரப்பி இங்கண்
திருந்திய அறத்தை யாவும்
யாக்கையைப் பிணித்தென்று ஆக
இனிதிலுள் அடக்கி வாய்ந்த
ஆக்கையை அடக்கிப் பூவோடு
அழுங்கணீர் பொழிந்தான் மீதே

1. இச்செய்யுள் இடம்பெற்ற நூல்--
2. யாக்கை என்ற சொல்லின் பொருள் -----------
3. பூக்கையை, சேக்கையை – என்ற சொற்களல் இடம்பெறும் நயம்---------
4. பிரித்து எழுதுக - பிணித்தென்று

**விடைகள்: 1. தேம்பாவணி 2. உடல் 3. அடிஎதுகை 4. பிணித்து + என்று**

## பகுதி 2 பிரிவு 1 மற்றும் பிரிவு 2 (வினாஎண் 16 முதல் 21 வரை)

### இரண்டு மதிப்பெண் வினாக்கள் ( வினா எண்:21 கட்டாய வினா)

### உரைநடை உலகம் குறுவினாக்கள்

**இயல் 1.**

1. ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன
ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன
ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன. – மேற்கண்ட தொடரிலுள்ள பிழைக்கான காரணத்தை எழுதுக.

1) ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன – சரி
2) ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன – சரி
3) ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன – பிழையான தொடர். ஏனெனில் தாற்றில்தான் சீப்புகள் இருக்கும்.

**இயல் - 2**

2. ‘ நமக்கு உயிர் காற்று
காற்றுக்கு வரம் மரம் - மரங்களை
வெட்டி எறியாமல் நட்டு வளர்ப்போம்’ - இது போன்று உலகக் காற்று விழிப்புணர்வுக்கான இரண்டு முழக்கத் தொடர்களை எழுதுக. *

உயிர்களின் சுவாசம் காற்று
காற்றின் சுவாசம் மரம்
மரத்தின் சுவாசம் மனிதர்
மரங்களுக்கு சுவாசம் கொடுப்போம் மரங்களை வளர்ப்போம்

**இயல் - 7**

3. வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி. என்பதற்குச் சான்று தருக.
வறுமையில் பசியால் வாடிய போதும் புத்தகங்கள் வாங்கிப் படித்தார்.

**இயல் - 8**

4 குறிப்பு வரைக — அவையம்

அவையம் - மன்றம்.
அவையம், அரசனின் ஆட்சிக்குத் துணை புரிந்தது.
உறையூரிலும் மதுரையிலும் அவையம் இருந்தது.

**இயல் - 9**

5. நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும் அதற்குரிய காரணமும் உண்டு- இத்தொடரை இரு தொடர்களாக ஆக்குக.

1. நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும் உண்டு.
2. நான் எழுதுவதற்கு ஒரு காரணமும் உண்டு.

**கவிதைப்பேழை குறுவினா**
**இயல் - 1**

1. **“ மன்னும் சிலம்பே! மணிமே கலைவடிவே!**
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!”- இவ்வடிகளில் ஐம்பெரும் காப்பியங்களில் இடம்பெற்றுள்ள காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள காப்பியங்களின் பெயர்களை எழுதுக.

1. சீவக சிந்தாமணி 2. வளையாபதி 3. குண்டலகேசி

**இயல் - 2**

2. வசன கவிதை — குறிப்பு வரைக.
யாப்புக்கட்டுக்கு அப்பாற்பட்டு உரைநடையும் கவிதையும் இணைவது.

3 . பெற்றோர் வேலையிலிருந்து திரும்பத் தாமதமாகும் போது அழும் தம்பிக்கு நீங்கள் கூறும் ஆறுதல் சொற்களை எழுதுக. *

தம்பி அழாதே! விளையாடு! நாம் விளையோடுவோமா!
திண்பண்டம் தருகிறேன். சாப்பிடு. அம்மா, அப்பா இப்போது வந்து விடுவர்

**இயல் - 3**

4. ‘**நச்சப் படாதவன்**’ செல்வம் - இத்தொடரில் வண்ணமிட்ட சொல்லுக்குப் பொருள் தருக.
நச்சப்படாதவன் - பிறருக்கு உதவி செய்யாமல் ஒருவராலும் விரும்பப்படாதவர்

5. கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய
கோடிஉண் டாயினும் இல். - இக்குறளில் வரும் அளபெடைகளை எடுத்து எழுதுக.

கொடுப்பதூஉம் - இன்னிசை அளபெடை
துய்ப்பதூஉம் - இன்னிசை அளபெடை

6.பொருளுக்கேற்ற அடியை பொருத்துக.

| | |
|---|---|
| உயிரைவிடச் சிறப்பாகப் பேணிக் காக்கப்படும் | ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை |
| ஊரின் நடுவில் நச்சுமரம் பழுத்தது போன்றது | உயிரினும் ஓம்பப் படும் |
| ஒழுக்கத்தின் வழி உயர்வு அடைவர் | நடு ஊருள் நச்சு மரம் பழுத்தற்று |

**விடை**

| | |
|---|---|
| உயிரைவிடச் சிறப்பாகப் பேணிக் காக்கப்படும் | உயிரினும் ஓம்பப் படும் |
| ஊரின் நடுவில் நச்சுமரம் பழுத்தது போன்றது | நடு ஊருள் நச்சு மரம் பழுத்தற்று |
| ஒழுக்கத்தின் வழி உயர்வு அடைவர் | ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை |

7. எய்துவர் எய்தாப் பழி—இக்குறளடிக்குப் பொருந்தும் வாய்பாடு எது? கூவிளம்- தேமா - மலர்

**இயல் - 4**

8. மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக?
   1. மருந்தால் மட்டும் நோய் நீங்கி விடாது.
   2. அன்போடு நோயாளிக்கு மருத்துவம் செய்வதும் பயன் தரும்.
9. 'நீஆளா உனதருளே பார்ப்பன் அடியேன்' என்று யார் யாரிடம் கூறினார்?

   குலசேகர ஆழ்வார், இறைவனிடம் கூறினார்.

**இயல் - 5**

10. செய்குதம்பிப் பாவலரின் கல்வி பற்றிய கருத்தினை முழக்கத் தொடர்களாக்குக.

    அருளைப் பெருக்கி, அறிவைத் திருத்தி அறியாமை அகற்று.

**இயல் -6**

11. உறங்குகின்ற கும்பகன்ன 'எழுந்திராய் எழுந்திராய்'
    காலதூதா் கையிலே 'உறங்குவாய் உறங்குவாய்' - கும்ப கர்ணனை என்ன சொல்லி எழுப்புகிறார்கள்? எங்கு அவனை உறங்கச் சொல்கிறார்கள்?

    பொய்யான வாழ்வெல்லாம் அழியத் தொடங்கி விட்டது.
    எழுந்திராய்! எழுந்திராய்! என எழுப்பினா்.
    எமனுடைய தூதா் கைகளிலே உறங்கச் சொல்கிறார்கள்.

12. கரப்பிடும்பை இல்லாா் - இத்தொடரின் பொருள் கூறுக.
    பொருளை மறைத்து வைத்தல் என்னும் துன்பத்தைச் செய்யாதவா்.

13. வறுமையின் காரணமாக உதவி கேட்டு வருபவரின் தன்மானத்தை எள்ளி நகையாடுவது குறித்த குறளின் கருத்து என்ன?
    ஏளனம் செய்யாமல் பொருள் கொடுப்பவரைக் கண்டால் உதவி கேட்டு வருபவரின் உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும்.

14. பின்வருபவற்றுள் கூரான ஆயுதம் எது என்று செந்நாப்போதாா் கூறுகிறாா்? ஏன்?
    1.கூரான ஆயுதம் உழைத்ததால் கிடைத்த ஊதியம். 2.அது பகைவரை வெல்லும்.

**இயல் -7**

15. மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கம் யாது?
    1. அரசா்கள் தங்கள் வரலாறும் பெருமையும் காலம் கடந்து நிற்க விரும்பினா்.
    2. அவற்றைக் கல்லில் செதுக்கினா்

**இயல் -8**

16. 'கொள்வோர் கொள்க குரைப்போர் குரைக்க
உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது' — அடி எதுகையை எடுத்தெழுதுக.
இலக்கணக் குறிப்பெழுதுக: கொள்க,குரைக்க

அடியெதுகை — கொ<u>ள்</u>வோர், உ<u>ள்</u>வாய்
இலக்கணக்குறிப்பு — கொள்க, குரைக்க — வியங்கோள் வினைமுற்று

**இயல் - 9**

17. "காய்மணி யாகி முன்னர்க் காய்ந்தெனக் காய்ந்தேன்" - உவமை உணர்த்தும் கருத்து யாது?
இளம்பயிர் வளர்ந்து நெல்மணியாய் ஆவதற்கு முன் காய்ந்தது போல்
கருணையன் வளர்ந்து ஆளாகும் முன்னரே தாயை இழந்து வாடுகின்றான்.

பிரிவு 2
(எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க)
**வினா எண் 22 முதல் 28 முடிய**

1. "வேங்கை" என்பதைத்தொடர் மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்திக்காட்டுக.
   - வேம்+கை – வெந்த கை - தொடர்மொழி
   - வேங்கை - மரம் - பொதுமொழி
2. "உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்
   வடுககாண் வற்றாகும் கீழ்: - இக்குறளில் அமைந்துள்ள அளபெடையின் வகையைச் சுட்டி,அதன் இலக்கணம் தருக.
   - இக்குறளில் அமைந்துள்ள அளபெடை இன்னிசை அளபெடை
   - இலக்கணம்: செய்யுளில் ஓசை குறையாத இடத்திலும் இனிய ஓசைக்காக அளபெடுப்பது
3. தண்ணீர் குடி, தயிர்க்குடம் ஆகியதொகைச்சொற்களை விரித்து எழுதுக. தொடரில்அமைக்க.
   - தண்ணீர் குடி – தண்ணீரைக்குடி - இரண்டாம் வேற்றுமைத்தொகை
     காலை எழுந்தவுடன் தண்ணீரைக்குடித்தல் நல்ல பழக்கம்.
   - தயிர்க்குடம்- தயிரை உடைய குடம்-இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்த தொகை
     கமலா தயிர்க்குடத்தை எடுத்துச்சென்றாள்.
4. 'எழுது என்றாள்' என்பது விரைவு காரணமாக 'எழுது எழுது என்றாள்' என அடுக்குத்தாடரானது. 'சிரித்துப் பேசினார்' என்பது எவ்வாறு அடுக்குத்தொடராகும்?
   சிரித்துப் பேசினார் என்பது **மகிழ்வின் காரணமாக** சிரித்து சிரித்துப் பேசினார் என அடுக்குத்தொடராகும்.
   சிரித்து சிரித்து – அடுக்குத்தொடர்.
5. பாரதியார் கவிஞர், நூலகம் சென்றார்,அவர் யார்? ஆகியதொடர்களில் எழுவாயுடன் தொடரும் பயனிலைகள் யாவை?
   - கவிஞர் -பெயர்ப்பயனிலை
   - சென்றார் -வினைப்பயனிலை
   - யார்?- வினாப்பயனிலை

6. வருகின்ற கோடைவிடுமுறையில் காற்றாலை மின் உற்பத்தியைநேரில் காண்பதற்கு ஆரல்வாய்மொழிக்குச் செல்கிறேன் -இத்தொடர் கால வழுவமைதிக்கு எடுத்துக்காட்டாக அமைவது எவ்வாறு?

இத்தொடரில் ‘வருகின்ற கோடை விடுமுறையில் காற்றாலை மின் உற்பத்தியை நேரில் காண்பதற்கு ஆரல்வாய் மொழிக்குச் செல்வேன் என அமைதல் வேண்டும். மாறாக செல்வேன் என்னும் உறுதித்தன்மை நோக்கிக் காலவழுவமைதியாக அமைகிறது.

7. “சீசர் எப்போதும் என் சொல்பேச்சைக் கேட்பான். புதியவர்களைப் பார்த்துக்கத்துவானே தவிர கடிக்கமாட்டான்” என்று இளமாறன் தன்னுடைய வளர்ப்பு நாயைப் பற்றிப் பெருமையாகக் கூறினார்- இதில் உள்ள திணை வழுக்களைத்திருத்தி எழுதுக.

   - வழுதிருத்தம் - சீசர் எப்போதும் என் சொல்பேச்சைக் கேட்கும் புதியவர்களைப் பார்த்துக் கத்துமே தவிர கடிக்காது

8. இந்த அறை இருட்டாகஇருக்கிறது.மின்விளக்கின் சொடுக்கி எந்தப் பக்கம் இருக்கிறது? இதோ…. இருக்கிறதே!சொடுக்கியைப் போட்டாலும் வெளிச்சம் வரவில்லையே!மின்சாரம் இருக்கிறதா, இல்லையா?

மேற்கண்ட உரையாடலில் உள்ள வினாக்களின் வகைகளை எடுத்தெழுதுக.

   - மின்விளக்கின்சொடுக்கி எந்தப்பக்கம் இருக்கிறது? – அறியாவினா
   - சொடுக்கியைப் போட்டாலும் வெளிச்சம் வரவில்லையே?- ஐயவினா
   - மின்சாரம் இருக்கிறதா, இல்லையா? - அறியாவினா

9. காட்டில்விளைந்த வரகில் சமைத்த உணவுமழைக்கால மாலையில் சூடாகஉண்ணச் சுவை மிகுந்திருக்கும். இத்தொடரில் அமைந்துள்ள முதற்பொருள், கருப்பொருள்களை வகைப்படுத்தி எழுதுக.

   - முதற்பொருள் - காடு (நிலம்)
   - கருப்பொருள் - வரகு (உணவு)

10. கீழ்வரும் தொடர்களில் பொருந்தாத கருப்பொருளைத் திருத்தி எழுதுக

உழவர்கள் மலையில் உழுதனர்

முல்லைப்பூச் செடியைப் பார்த்தவாறே பரதவர் கடலுக்குச் சென்றனர்.

   - உழவர்கள் வயலில் உழுதனர்
   - முல்லைப் பூச்செடியைப் பார்த்தவாறே ஆயர்கள்காட்டிற்குச் சென்றனர்

11. புறத்திணைகளில் எதிரெதிர்த் திணைகளை அட்டவணைப்படுத்துக

| | |
|---|---|
| வெட்சித்திணை-நிரைகவர்தல் | கரந்தை – நிரை மீட்டல் |
| வஞ்சித்திணை –போருக்குச் செல்லல் | காஞ்சி – எதிர்த்துப் போரிடல் |
| நொச்சித்திணை –கோட்டையைக்காத்தல் | உழிஞை - கோட்டையை வளைத்தல் |

12. குறள்வெண்பாவின் இலக்கணத்தை எழுதி எடுத்துக்காட்டுத் தருக.

   - வெண்பாவின் பொது இலக்கணம் அமையப்பெற்று இரண்டு அடிகளாய் வரும்.
   - முதலடி நான்குசீராகவும் இரண்டாம் அடி மூன்று சீராகவும் வரும்.

13. வஞ்சிப்பாவிற்கு உரிய ஓசை தூங்கல் ஓசை ஆகும். துள்ளல் ஓசை கலிப்பாவுக்கு உரியது. இத்தொடர்களை ஒரே தொடராக இணைத்து எழுதுக.

   - வஞ்சிப்பாவிற்கு தூங்கல் ஓசையும் கலிப்பாவிற்கு துள்ளல் ஓசையும் உரியன

14. தீவக அணியின் வகைகள்யாவை?

- தீவக அணி 3 வகைப்படும்

1. முதல்நிலைத் தீவகம் 2. இடைநிலைத்தீவகம் 3. கடைநிலைத்தீவகம்

15. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது --இக்குறளில் பயின்றுவந்துள்ள அணியின் இலக்கணம் யாது?

- **நிரல் நிறை** அணி,
- விளக்கம்: சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி பொருள்கொள்வது **பகுபத உறுப்பிலக்கணம்**

| | |
|---|---|
| பதிந்து - பதி + த்(ந்) + த் + உ<br>பதி - பகுதி<br>த் - சந்தி, ந் ஆனது விகாரம்<br>த் இறந்தகால இடைநிலை<br>உ வினையெச்ச விகுதி | மயங்கிய மயங்கு + இ(ன்) +ய் + அ<br>மயங்கு - பகுதி<br>இ(ன்) - இறந்தகால இடைநிலை 'ன்' புணர்ந்துகெட்டது<br>ய் - உடம்படுமெய்<br>அ பெயரெச்ச விகுதி |
| அறியேன் - அறி + ய்+ ஆ +ஏன்<br>அறி - பகுதி<br>ய் - சந்தி<br>ஆ எதிர்மறைஇடைநிலைபுணர்ந்துகெட்டது<br>ஏன் தன்மை ஒருமை வினைமுற்று | ஒலித்து - ஒலி + த் + த் + உ<br>ஒலி - பகுதி<br>த் சந்தி<br>த் - இறந்தகால இடைநிலை<br>உ - வினையெச்ச விகுதி |

**கலைச்சொல் அறிவோம்**

| | | | |
|---|---|---|---|
| Vowel | உயிரெழுத்து | Land Breeze | நிலக்காற்று |
| Consonant | மெய்யெழுத்து | Sea Breeze | கடற்காற்று |
| Homograph | ஒப்பெழுத்து | Whirlwind | சுழல்காற்று |
| Monolingual | ஒருமொழி | Classical literature | செவ்விலக்கியம் |
| Conversation | உரையாடல் | Epic literature | காப்பிய இலக்கியம் |
| Discussion | கலந்துரையாடல் | Devotional literature | பக்திஇலக்கியம் |
| Storm | புயல் | Ancient literature | பண்டையஇலக்கியம் |
| Tornado | சூறாவளி | Regional literature | வட்டார இலக்கியம் |
| Tempest | பெருங்காற்று | Folk literature | நாட்டுப்புற இலக்கியம் |
| Nanotechnology | மீநுண்தொழில்நுட்பம் | Modern literature | நவீன இலக்கியம் |
| Biotechnology | உயிரித்தொழில்நுட்பம் | Symbolism | குறியீட்டியல் |
| Ultraviolet rays | புறஊதாக்கதிர்கள் | Aesthetics | அழகியல்,முருகியல் |
| Space technology | விண்வெளித்தொழில்நுட்பம் | Artifacts | கலைப்படைப்புகள் |
| Cosmicrays | விண்வெளிக்கதிர்கள் | Terminology | கலைச்சொல் |
| Infrared rays | அகச்சிவப்புக் கதிர்கள் | Myth | தொன்மம் |
| Emblem | சின்னம் | Consulate | துணைத்தூதரகம் |
| Thesis | ஆய்வேடு | Patent | காப்புரிமை |
| Intellectual | அறிவாளர் | Document | ஆவணம் |
| Guild | வணிகக்குழு | Revivalism | மீட்டுருவாக்கம் |
| Irrigation | பாசனம் | Humanism | மனிதநேயம் |
| Territory | நிலப்பகுதி | Cabinet | அமைச்சரவை |
| Belief | நம்பிக்கை | Cultural Boundaries | பண்பாட்டு எல்லை |

| | | | |
|---|---|---|---|
| Renaissance | மறுமலர்ச்சி | Cultural values | பண்பாட்டு விழுமியங்கள் |
| Philosopher | மெய்யியலாளர் | | |

## மொழியை ஆள்வோம் பகுதி

1. **சந்தக் கவியில் வந்த பிழைகளைத் திருத்துக.**
   "தேணிலே ஊரிய செந்தமிழின் -சுவை
   தேரும் சிலப்பதி காறமதை
   ஊனிலே எம்முயிர் உல்லலவும் - நிதம்
   ஓதி யுணர்ந்தின் புருவோமே"

   விடை: தேணிலே - தேனிலே
   ஊரிய - ஊறிய
   தேரும் - தேறும்
   சிலப்பதிகாறம் - சிலப்பதிகாரம்
   உல்லலவும் - உள்ளளவும்
   ஓதியுனர் - ஓதியுணர்

2. **கீழ்க்காணும் சொற்களின் கூட்டப் பெயர்களைக் கண்டுபிடித்து எழுதுக.**
   (குவியல், குலை, மந்தை, கட்டு)

| **சொல்** | **கூட்டப்பெயர்** | **சொல்** | **கூட்டப்பெயர்** |
|---|---|---|---|
| கல் | குவியல் | பழம் | குலை |
| புல் | கட்டு | ஆடு | மந்தை |

3. **வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றித் தொடர்களை இணைத்து எழுதுக.**

   அ. கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறார். அவரை அழைத்துவாருங்கள்.
   விடை: கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறவரை அழைத்து வாருங்கள்.
   ஆ. ஊட்டமிகு உணவு உண்டார். அவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.
   விடை: ஊட்டமிகு உணவு உண்டவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.
   இ. நேற்று என்னைச் சந்தித்தார். அவர் என் நண்பர்
   விடை: நேற்று என்னைச் சந்தித்தவர் என் நண்பர்.
   ஈ. பொது அறிவு நூல்களைத் தேடிப் படித்தார். போட்டித் தேர்வில் வென்றார்.
   விடை: பொது அறிவு நூல்களைத் தேடிப் **படித்தவர்** போட்டித் தேர்வில் வென்றார்

4. **தொடர்களில் உள்ள வண்ணச்சொற்களுக்குப் பதிலாக அதே பொருளுடைய வேறு சொற்களைப் பயன்படுத்தித் தொடர்களை மீள எழுதுக.**
   அ. உலகில் வாழும் மக்களில் சிலர் கனியிருப்பக் காய்புசித்தலைப் போல இன்சொல் இருக்க வன்சொல் பேசி இன்னற்படுகின்றனர்.

   **விடை:** அண்டத்தில் வாழும் மாந்தரில் சிலர் பழமிருக்கக் காய் உண்ணலைப் போல இன்சொல் இருக்க வன்சொல் பேசி துன்பப்படுகின்றனர்.

   ஆ. வள்ளல் குமணன் வறுமையால் வாடிவந்த புலவனுக்குத் தன் தலையைக் கொடுத்து மங்காப் புகழ் பெற்றார்.
   **விடை:** வள்ளல் குமணன் ஏழ்மையால் வாடிவந்த பாவலனுக்குத் தன் தலையைக் வழங்கி மங்காப் பெருமை பெற்றார்.

இ. நளனும் அவனது துணைவியும் நிடத நாட்டுக்கு வந்ததைக் கண்டு, அந்நாட்டு மக்கள் மழை முகில் கண்ட மஞ்ஞை போல் களி கொண்டனர்.

**விடை**: நளனும் அவனது துணைவியும் நிடத நாட்டுக்கு வந்ததைக் கண்டு, அந்நாட்டு மக்கள் கார்மேகம் கண்ட மயில் போல் மகிழ்ச்சி கொண்டனர்.

ஈ. சோலையில் பூத்த மணமலர்களில் கரும்புகள் மொய்த்துப் பண்பாடி மதுவுண்டன.
**விடை**: காவில் பூத்த மணமலர்களில் வண்டுகள் மொய்த்துப் பண்பாடி தேன் உண்டன.

உ. பசுப்போல் சாந்தமும் புலிபோல் தீரமும் யானை போல உழைப்பும் மனிதனுக்கு வேண்டும்.
**விடை**:ஆப்போல் அமைதியும் வேங்கைபோல் வீரமும் களிறுபோல உழைப்பும் மனிதனுக்கு வேண்டும்.

5. **சொற்களில் மறைந்துள்ள தொகைகளை அடையாளம் கண்டு தொடரில் அமைக்க.**

அ. இன்சொல்

**விடை**: பண்புத்தொகை -இன்சொல் கூறுதல் சான்றோர்க்கு அழகு

ஆ. எழுகதிர்

**விடை**: வினைத்தொகை - எழுகதிர் உதிக்கும் முன் எழு

இ. கீரிபாம்பு.

**விடை**: உம்மைத்தொகை - கணவனும் மனைவியும் கீரியும் பாம்புமாய் இருந்தனர்.

ஈ. பூங்குழல்:

**விடை**: அன்மொழித்தொகை - பூங்குழல் பூரிப்போடு வந்தாள்.

உ. மலை வாழ்வார்.

**விடை** வேற்றுமைத்தொகை - மலைவாழ்வார் மகிழ்ச்சியுடன் வாழ்வார்

ஊ. முத்துப்பல்

**விடை** உவமைத்தொகை - அந்தக்குழந்தை முத்துப்போன்ற பல்லைக்காட்டிச் சிரித்தது.

6. **இருதொடர்களை ஒரே தொடராக மாற்று**

மலர் உண்டு. பெயர் உண்டு

**விடை**: மலரும் பெயரும் உண்டு.

7. **தொடரில் பொருந்தாப் பொருள் தரும் மயங்கொலி எழுத்துகளைத் திருத்துக**.

இலுப்பைப் பூக்கள் இனிப்பானவை. கரடிகள் மறத்தின் மீதேறி அவற்றைப் பரித்து உண்ணும். பாதிரிப் பூ குடிநீருக்குத் தன் மனத்தை ஏற்றும்.

**விடை**: இலுப்பைப் பூக்கள் இனிப்பானவை. குரடிகள் மரத்தின் மீதேறி அவற்றை பறித்து உண்ணும். பாதிரிப்பூ குடிநீருக்குத்தன் மணத்தை மாற்றும்.

8. **பழமொழிகளை நிறைவு செய்க**

அ. உப்பில்லாப் ------------

**விடை**: உப்பில்லாப் பண்டம் குப்பையிலே

ஆ. ஒரு பானை ------------

**விடை**: ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்

இ. உப்பிட்டவரை ------------

**விடை**: உப்பிட்டவரை உள்ளளவும் நினை

ஈ. விருந்தும் ------------

**விடை:** விருந்தும் மருந்தும் மூன்று வேளைக்கு

உ. அளவுக்கு ------------

**விடை**: அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு

9. **வல்லின ஒற்றை இட்டும் நீக்கியும் எழுதுக.**

காகத்திற்கு காது உண்டா? அதற்கு காது கேட்குமா? எல்லா பறவைகளுக்கும் காது உண்டு. செவி துளைகள் இறகுகளால் மூடி இருக்கும். மற்றபடி பாலூட்டிகளில் உள்ளதுபோல் புறசெவிமடல் இருக்காது. காகத்திற்கு காது உண்ட. காதுக் கேட்கும்.

பறவைகளுக்கு பார்த்தல், கேட்டல் உணர்வு நன்றாக வளர்ச்சிப் பெற்று இருக்கும். சுவைத்தல் உணர்வுக்குறைவாகவும் நுகர்தல் உணர்வு இல்லையென்றேக் கூறலாம்.

**விடை:** காகத்திற்குக் காது உண்டா? அதற்குக் காது கேட்குமா? எல்லாப் பறவைகளுக்கும் காது உண்டு. செவித்துளைகள் இறகுகளால் மூடி இருக்கும். மற்றபடி பாலூட்டிகளில் உள்ளதுபோல் புறச்செவிமடல் இருக்காது. காகத்திற்குக் காது உண்டு. காது கேட்கும்.

பறவைகளுக்குப் பார்த்தல், கேட்டல் உணர்வு நன்றாக வளர்ச்சி பெற்று இருக்கும். சுவைத்தல் உணர்வு குறைவாகவும் நுகர்தல் உணர்வு இல்லையென்றே கூறலாம்.

10. **இருசொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க**.

அ. இயற்கை – செயற்கை

பாதை தெரியாத இயற்கைக் காடுகளில் பயணிக்கச் செயற்கைக் கருவிகள் பயன்படுகின்றன.

ஆ. கொடு – கோடு

வறியவருக்குக் கொடுப்பதற்கு எல்லைக்கோடு ஏதும் இல்லை.

இ. கொள் - கோள்

பெற்றுக்கொள் என்று சொன்னதற்குக் கோள் பார்த்துக் கொடு என்று கூறினார்.

ஈ. சிறு – சீறு

சிறு பாம்பு கூடச் சீறும்.

உ. தான் - தாம்

தான் என்றும் தாம் என்றும் எண்ணுவது அகந்தையாகும்.

ஊ. விதி – வீதி

விதி விளையாடியதால் அந்தக்குடும்பம் வீதிக்கு வந்தது.

11. **தொடரை மாற்றி எழுதுக.**

அ. எழுவாய்த்தொடரைப் பெயரெச்சத் தொடராகமாற்றுக.

அம்மா சொன்னார்.

**விடை:** சொன்ன அம்மா

ஆ. எழுவாய்த்தொடரை விளித் தொடராகமாற்றுக.

அருணா ஓடினாள்

**விடை:** அருணா ஓடாதே

இ. வேற்றுமைத்தொடராக மாற்றுக.

கதை சொன்னார்.

**விடை:** கதையைச் சொன்னார்.

12. **தொடர்களில் உள்ள எழுவாயைச் செழுமை செய்க**

அ. கடம்பவனத்தை விட்டு இறைவன் நீங்கினான்.

**விடை:** அழகிய குளிர்ந்த கடம்பவனத்தை விட்டு இறைவன் நீங்கினான்.

ஆ. மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்.

**விடை**: உயர்ந்த பசுமையான மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்.

இ. வாழ்க்கைப் பயணமே வேறுபட்ட பாடங்களைக் கற்றுத் தருகிறது.

**விடை**: நீண்ட நெடிய வாழ்க்கைப் பயணமே வேறுபட்ட பாடங்களைக் கற்றுத் தருகிறது.

ஈ. கல்வியே ஒருவருக்கு உயர்வு தரும்.

**விடை:** சீரிய ஒழுக்கமான கல்வியே ஒருவருக்கு உயர்வு தரும்.

உ. குழந்தைகள் தனித்தனியே எழுதித் தரவேண்டும்.

**விடை**:செல்லச்சுட்டிக் குழந்தைகள் தனித்தனியே எழுதித் தரவேண்டும்.

13. **ஒரு தொடரை மற்றொரு தொடராக மாற்றுக.**

**அ.** அழைப்பு மணி ஒலித்தது. கயல்விழி கதவைத் திறந்தாள்.(தனிச் சொற்றொடரைக் கலவைச் சொற்றொடராக மாற்றுக)
அழைப்பு மணி ஒலித்ததும் கயல்விழி கதவைத் திறந்தாள்.

**ஆ.** இன்னாசியார் புத்தகங்களை வரிசைப்படுத்தினார். அவற்றைப் புத்தக அடுக்கங்களில் அடுக்கி வைத்தார். புத்தகங்களைக் கேட்டவர்களுக்கு எடுத்துக்கொடுத்தார். (தொடர் சொற்றொடராக மாற்றுக)
இன்னாசியார் புத்தகங்களை வரிசைப்படுத்தி, புத்தக அடுக்கங்களில் அடுக்கி வைத்து, கேட்டவர்களுக்கு எடுத்துக்கொடுத்தார்.

**இ.** ஒயிலாட்டத்தில் குழுவினர் ஒரே நிறத் துணியை முண்டாசு போலக் கட்டிக்கொண்டு, காலில் சலங்கை அணிந்து கொண்டு, கையில் சிறுதுணியை இசைக்கேற்ப வீசியும் ஆடுவர். (தொடர் சொற்றொடரைத் தனிச் சொற்றொடராக மாற்றுக)
ஒயிலாட்டத்தில் குழுவினர் ஒரே நிறத் துணியை முண்டாசு போலக் கட்டிக்கொள்வர். காலில் சலங்கை அணிந்து கொள்வர். கையில் சிறுதுணியை இசைக்கேற்ப வீசியும் ஆடுவர்.

**ஈ.** தொடர்களை அறிந்து எழுதுக.
மழை கொட்டிக்கொண்டிருந்தாலும் பகலவன் பள்ளிக்கு நடந்து வந்தான்.
பகலவன் பள்ளிக்கு நடந்து வந்தான். – முதன்மைத்தொடர்
மழை கொட்டிக்கொண்டிருந்தாலும் - துணைத்தொடர்.

**உ.** கூத்துக்கலைஞர் பாடத் தொடங்கினார். கூடியிருந்த மக்கள் அமைதியாயினர். (கலவைச் சொற்றொடராக மாற்றுக)
கூத்துக்கலைஞர் பாடத் தொடங்கியதும் கூடியிருந்த மக்கள் அமைதியாயினர்.

**ஊ**. ஓடிக்கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றவுடன் அறையில் உள்ளவர்கள் பேச்சு தடைபட்டது. (தனிச்சொற்றொடராக மாற்றுக)
ஓடிக்கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றது. அறையில் உள்ளவர்கள் பேச்சு தடைபட்டது.

14. **பிறமொழிச் சொற்களைத் தமிழ்ச் சொற்களாக மாற்றுக.**

உங்களிடம் ஏழு கோல்டு பிஸ்கட் உள்ளது. அதில் ஒன்று மட்டும் எடை குறைவானது. உங்களிடம் உள்ள ஒரு தராசை இருமுறை மட்டுமே யூஸ்பண்ணி வெயிட் குறைந்த கோல்ட் பிஸ்கட்டைக் கண்டு பிடிக்கவும்.

| **பிறமொழிச்சொல்** | **தமிழ்ச்சொல்** |
|---|---|
| கோல்ட் பிஸ்கட் | தங்கக்கட்டி |
| தராசு | எடைக்கருவி |
| யூஸ் | பயன்படுத்தி |
| வெயிட் | எடை |

15. **பேச்சு வழக்கினை எழுத்து வழக்காக மாற்றுக.**

தம்பீ! எங்க நிக்கிறே?
நீங்க சொன்ன எடத்துலதாண்ணே!
எதிர்த்தாப்புல ஒரு டீஸ்டால் இருக்குது
அங்னனக்குள்ளயே டீ சாப்பிட்டு
பேப்பரப் படிச்சிக்கிட்டு இரு .... நா வெரசா வந்துருவேன்.
அண்ணே! சம்முவத்தையும் கூட்டிக்கிட்டு வாங்கண்ணே!

**விடை**: தம்பீ! எங்கே நிற்கிறாய்?
நீங்கள் சொல்லிய இடத்தில் தான் அண்ணே!
எதிரில் ஒரு தேநீர்க்கடை இருக்கிறது.
அங்கேயே தேநீர் சாப்பிட்டு
நாளிதழ் படித்துக்கொண்டு இரு ….நான் விரைவில் வந்து விடுவேன்.
அண்ணே! சண்முகத்தையும் கூட்டிக்கிட்டு வாருங்கள் அண்ணே!

**16. உவமையைப் பயன்படுத்திச் சொற்றொடர் உருவாக்குக.**

அ).தாமரை இலை நீர் போல
**விடை**: உறவுகள் எல்லாம் தாமரை இலை நீர் போல உள்ளன.
ஆ). மழைமுகம் காணாப் பயிர்போல
**விடை**: தாயைக் காணாத குழந்தைகள் மழைமுகம் காணாப் பயிர்போல வாடினர்.
இ). கண்ணினைக் காக்கும் இமை போல
**விடை**: எனது பெற்றோர் என்னைக் கண்ணினைக் காக்கும் இமைபோலக் காத்தனர்.
ஈ) சிலைமேல் எழுத்து போல
**விடை**: பாட்டி கூறிய அறிவுரை என் மனதில் சிலைமேல் எழுத்து போல ஆனது.

**17. பொருத்தமான நிறுத்தக் குறியிடுக.**

சேரர்களின் பட்டப்பெயர்களில் கொல்லி வெற்பன் மலையமான் போன்றவை குறிப்பிடத்தக்கவை மலையை வென்றவன் கொல்லிவெற்பன் எனவும் பிற மலைப்பகுதிகளை வென்றவர்கள் மலையமான் எனவும் பெயர் சூட்டிக்கொண்டனர் இதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன

**விடை**: சேரர்களின் பட்டப்பெயர்களில் கொல்லி வெற்பன், மலையமான் போன்றவை குறிப்பிடத்தக்கவை. மலையை வென்றவன் கொல்லிவெற்பன் எனவும், பிற மலைப்பகுதிகளை வென்றவர்கள் மலையமான் எனவும் பெயர் சூட்டிக்கொண்டனர். இதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன.

**1.மொழியோடு விளையாடு, பகுதிகள்.**

1. சொற்களை இணைத்துப் புதிய சொற்கள் உருவாக்குக (தேன், மேகலை, மணி, மழை, விலங்கு, வான், பூ)
   **விடை**:1. தேன்மழை 2. மணிமேகலை 3. பூவிலங்கு 4. வான்மழை
2. குறிப்புகளைக் கொண்டு வினாவிலேயே விடை இருப்பது போன்று வினாத்தொடர் அமைக்க.
   அ. குறளின்பம் ஆ) காப்பியச்சுவை இ) விடுமுறைநாள் ஈ) சுவைக்காத இளநீர்
   **விடை**: அ. குறளின்பத்தில் திளைக்காத தமிழன் உண்டா?
   ஆ)காப்பியச்சுவை அறியாத புலவன் உண்டா?
   இ) மேதினம் தொழிலாளர் அனைவருக்கும் விடுமுறை நாளாகுமா?
   ஈ) இலக்கியம் பயிலாமலிருப்பது சுவைக்காத இளநீர் போலாகுமா?

2. **எண்ணுப்பெயர் கண்டு தமிழ் எண்களில் எழுதுக.**

| வ.எண் | செய்யுள் அடி | எண்ணுப்பெயர் | தமிழ் எண் |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| 1 | நாற்றிசையும் செல்லாத நாடில்லை | நான்கு | ச |
| 2 | எறும்புந்தன் கையால் எண்சாண் | எட்டு | அ |
| 3 | ஐந்து சால்பு ஊன்றிய தூண் | ஐந்து | ரு |
| 4 | நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி | நான்கு இரண்டு | ச உ |
| 5 | ஆனை ஆயிரம் அமரிடை வென்ற மன்னவனுக்கு வகுப்பது பரணி | ஆயிரம் | க000 |

**3.சொல்லைக் கண்டுபிடித்துப் புதிரை விடுவி**

(காடு, புதுமை, விண்மீன், காற்று, நறுமணம்)

1. முதல் இரண்டை நீக்கினாலும் வாசனை தரும். நீக்காவிட்டாலும் வாசனை தரும்.
   **விடை**: நறுமணம்
2. பழமைக்கு எதிரானது. எழுதுகோலில் பயன்படும்.
   **விடை**: புதுமை
3. இருக்கும்போது உருவமில்லை. இல்லாமல் உயிரினம் இல்லை.
   **விடை**: காற்று
4. நாலெழுத்தில் கண்சிமிட்டும். கடையிரண்டில் நீந்திச்செல்லும்.
   **விடை** விண்மீன்
5. ஓரெழுத்தில் சோலை. இரண்டெழுத்தில் வனம் **விடை**: காடு

**4.நயமிகு தொடர்களைப் படித்து ஏற்ற தலைப்புகளை எடுத்து எழுதுக.**

**(விடைகள்: இருண்ட வானம், வனத்தின் நடனம், நீரின் சிலிர்ப்பு)**

தொடர்: நின்று விட்ட மழை தரும் குளிர், சொட்டுச்சொட்டாக விளிம்புகளிலிருந்தும் மரங்களிலிருந்தும் விழும் மழைநீர் பட்டுச் சிலிர்க்கும் உயிரினம்.

**விடை**: நீரின் சிலிர்ப்பு

தொடர்:குயில்களின் கூவலிடை, புள்ளினங்களின் மேய்ச்சலும் பாய்ச்சலும் இலைகளின் அசைவுகள் சூறைக்காற்றின் ஆலோலம்.

**விடை**: வனத்தின் நடனம்.

**5.குறிப்பைப் பயன்படுத்தி விடை தருக**

குறிப்பு: எதிர்மறையான சொற்கள்.

| வ.எண் | குறிப்பு | எதிர்மறை |
|---|---|---|
| 1 | மீளாத் துயர் | மீண்ட இன்பம் |
| 2 | கொடுத்துச் சிவந்த | கொடாமல் கருத்த |
| 3 | மறைத்துக்காட்டு | மறைக்காமல் திற |
| 4 | அருகில் அமர்க | தொலைவில் நிற்க |
| 5 | புயலுக்குப் பின் | தென்றலுக்கு முன் |
| 6 | பெரியவரின் அமைதி | சிறியோரின் ஆரவாரம் |

**6.தொழிற்பெயர்களின் பொருளைப் புரிந்துகொண்டு தொடர்களை நிறைவு செய்க.**

1. அ. நிலத்துக்கு அடியில் கிடைக்கும் --------- யாவும் அரசுக்கே சொந்தம்.
   ஆ. நெகிழிப் பொருள்களை மண்ணுக்கு அடியில் ----- நிலத்தடி நீர் வளத்தைக் குன்றச் செய்யும்.(குறிப்பு: புதையல், புதைத்தல்)
   **விடை:** அ. புதையல், ஆ. புதைத்தல்.
2. அ. காட்டு விலங்குகளைச் -------------- தடை செய்யப்பட்டுள்ளது.
   ஆ. செய்த தவறுகளைச் ------------ திருந்த உதவுகிறது.
   (குறிப்பு: சுட்டல், சுடுதல்)
   **விடை**: அ.சுடுதல், ஆ. சுட்டல்

3. காற்றின் மெல்லிய ---------------------- பூக்களைத் தலையாட்ட வைக்கும் கைகளின் நேர்த்தியான -------------- பூக்களை மாலையாக்குகிறது.
   (குறிப்பு: தொடுத்தல், தொடுதல்)
   **விடை**: அ. தொடுதல், ஆ. தொடுத்தல்
4. பசுமையான அ. -------------- ஐக் (ஆ) ----------------- கண்ணுக்கு நல்லது.
   (குறிப்பு:காணுதல், காட்சி)
   **விடை**: அ. காட்சி ஆ. காணுதல்.
5. பொது வாழ்வில் அ) -------------- கூடாது. (ஆ) அவரை மிஞ்ச ஆள் கிடையாது.
   (குறிப்பு: நடித்தல், நடிப்பு)
   **விடை**: அ. நடித்தல், ஆ. நடிப்பு

**7.தொடர்களில் விடுபட்ட வண்ணங்களை எண்ணங்களால் நிரப்புக.**

1. வானம் ------------ தொடங்கியது. மழை வரும் போலிருக்கிறது. (விடை: கருக்கத்)
2. அனைவரின் பாராட்டுகளால் வெட்கத்தில் பாடகரின் முகம் ---------- (விடை: சிவந்தது)
3. ---------மனம் உள்ளவரை அப்பாவி என்கிறோம். (விடை: வெள்ளை)
4. கண்ணுக்குக் குளுமையாக இருக்கும் -----------(விடை: பச்சை)
5. கதிரவனின் ------வெயில் பரவிக் கிடக்கிறது. (விடை: மஞ்சள்)
6. வெயிலில் அலையாதே: உடல் ------------- (விடை: கருத்துவிடும்)

**ஊர்ப்பெயர்களின் மரூஉ எழுது**

| | | | |
|---|---|---|---|
| புதுக்கோட்டை | புதுகை | திருச்சிராப்பள்ளி | திருச்சி |
| மன்னார்குடி | மன்னை | உதகமண்டலம் | உதகை |
| மயிலாப்பூர் | மயிலை | கும்பகோணம் | குடந்தை |
| கோயம்புத்தூர் | கோவை | சைதாப்பேட்டை | சைதை |
| புதுச்சேரி | புதுவை | திருநெல்வேலி | நெல்லை |
| நாகபட்டினம் | நாகை | ராமநாதபுரம் | முகவை |

**8.சொற்களைப் பிரித்துப் பொருள் தருக**

அ) கானடை – கான் + அடை – காட்டைச்சேர்
கால் + நடை - காலால் நடத்தல்

ஆ) வருந்தாமரை - வரும் + தாமரை – வருகின்ற தாமரை
வருந்தா + மரை – வருந்தாத மான்

இ) பலகையொலி - பல + கையொலி – பலரின் கைதட்டல்
பலகை + ஒலி – மரப்பலகையின்ஓசை

**இலக்கணம்: (கற்பவை கற்றபின் பகுதி முழுவதும்)**

1. வண்ணமிட்ட தொகைச் சொற்களை வகைப்படுத்துக.
   அ. அன்புச்செல்வன் திறன்பேசியின் தொடுதிரையில் படித்துக்கொண்டிருந்தார்.
   **விடை:** அன்புச்செல்வன் - உருபும்பயனும்உடன் தொக்க தொகை
   தொடுதிரை – வினைத்தொகை
   ஆ. அனைவரும் மோர்ப்பானையைத் திறந்து மோர் கொடுக்கவும்
   **விடை**: மோர்ப்பானை - இருபெயரொட்டுப் பண்புத்தொகை
   மோர் கொடுக்கவும்: வேற்றுமைத்தொகை
   இ. வெண்டைக்காய்ப்பொரியல் மோர்க்குழம்புக்குப் பொருத்தமாகஇருக்கும்.
   **விடை:** வெண்டைக்காய் - இருபெயரொட்டுப்பண்புத்தொகை
   மோர்க்குழம்பு: உம்மைத்தொகை

ஈ. தங்கமீன்கள் தண்ணீர்த்தொட்டியில் விளையாடுகின்றன.

**விடை**: தங்க மீன்கள்: உவமைத்தொகை

தண்ணீர்த்தொட்டி: இருபெயரொட்டுப்பண்புத்தொகை

2. **பத்தியில் உள்ள தொடர் வகைகளை எழுது**

மாடியிலிருந்து இறங்கினார் முகமது. அவர் பாடகர் பாடல்களைப் பாடுவதும் கேட்பதும் அவருக்குப் பொழுதுபோக்கு, அவரது அறையில் கேட்ட பாடல்களையும் கேட்காத பாடல்களையும் கொண்ட குறுந்தகடுகளை அடுக்கு அடுக்காக வைத்திருப்பார்.

**விடை**: இறங்கினார் முகமது – வினைமுற்றுத் தொடர்

அவர் பாடகர் - எழுவாய்த்தொடர்

பாடுவதும் கேட்பதும் - இடைச்சொல் தொடர்

அடுக்கு அடுக்காக-அடுக்குத்தொடர்

3. **வண்ணச்சொற்களின் தொடர்வகைகளை எழுதுக**

அ. பழகப் பழகப் பாலும் புளிக்கும்

**விடை**: அடுக்குத்தொடர்

ஆ. வடித்த கஞ்சியில் சீலையை அலசினேன்

**விடை**: பெயரெச்சத்தொடர்

இ. மேடையில் நன்றாகப பேசினான்

**விடை**: இடைச்சொல் தொடர்

ஈ. வந்தான் அண்ணன்.

**விடை**: வினைமுற்றுத்தொடர்

உ.அரிய கவிதைகளின தொகுப்பு இது

**விடை**: வேற்றுமைத் தொகை

4. **கீழ்க்காணும் தொடர்களில் வழுவமைதி வகைகளை இனங்கண்டு எழுதுக.**

அ. அமைச்சர் நாளை விழாவிற்கு வருகிறார். **(காலவழுவமைதி)**

ஆ. அவனும் நீயும் அலுவலரைப் பார்க்க ஆயத்தமாகுங்கள் **(இட வழுவமைதி)**

இ. "இந்தக்கண்ணன் ஒன்றைச் செய்தான் என்றால் அனைவரும் ஏற்பர்", என்று கூறினான்.**(இடவழுவமைதி)**

ஈ. சிறிய வயதில் இந்த மரத்தில் தான் ஊஞ்சல்கட்டி விளையாடுவோம் **(காலவழுவமைதி)**

உ. செல்வன் இளவேலன் இந்தச் சிறுவயதிலேயே விளையாட்டுத்துறையில் சாதனை புரிந்திருக்கிறார். (**காலவழுவமைதி)**

5. **தொடர்களை மாற்றுக(அடைப்பில் உள்ளவாறு)**

அ. தந்தை, "மகனே நாளை உன்னுடைய தோழன் அழகனை அழைத்துவா" என்று சொன்னார். (ஆண்பால் பெயர்களைப் பெண்பாலாக மாற்றித்தொடரை எழுதுக)

தாய்," மகளே நாளை உன்னுடைய தோழி அழகியை அழைத்துவா" என்று சொன்னாள்.

ஆ. அக்கா நேற்று வீட்டுக்கு வந்தது. அக்கா புறப்படும்போது அம்மா வழியனுப்பியது. (வழுவை வழா நிலையாக மாற்றுக)

அக்கா நேற்று வீட்டுக்கு வந்தாள். அக்கா புறப்படும்போது அம்மா வழியனுப்பினாள்.

இ. "இதோ முடித்து விடுவேன்" என்று செயலை முடிக்கும் முன்பே கூறினார். (வழா நிலையை வழுவமைதியாக மாற்றுக)

"இதோ முடித்துவிட்டேன்" என்று செயலை முடிக்கும் முன்பே கூறினார்

ஈ. அவன் உன்னிடமும் என்னிடமும் செய்தியை இன்னும் கூறவில்லை.(படர்க்கையை முன்னிலையாக, முன்னிலையைத் தன்மையாக, தன்மையைப் படர்க்கையாக மாற்றுக)

நீ என்னிடமும்அவனிடமும் செய்தியை இன்னும் கூறவில்லை.

உ. குழந்தை அழுகிறான். பார். (வழுவை வழாநிலையாக மாற்று)

குழந்தை அழுகிறது. பார்

6. **வினா வகைகளையும் விடை வகைகளையும் சுட்டுக.**

அ. "காமராசர் நகர் எங்கே இருக்கிறது? இந்த வழியாகச் செல்லுங்கள் - என்று விடையளிப்பது.

அறியா வினா, சுட்டுவிடை

ஆ. "எனக்கு எழுதித் தருகிறாயா? என்ற வினாவிற்கு எனக்கு யார் எழுதித் தருவார்கள்? என்று விடையளிப்பது.

ஏவல் வினா, வினா எதிர் வினாதல் விடை

7. **உரையாடலில் இடம்பெற்றுள்ள வினாவிடை வகைகளைக் கண்டு எழுதுக.**

பாமகள்: வணக்கம். ஆதிரை! ஏதோ எழுதுகிறீர்கள் போலிருக்கிறதே?

**அறியா வினா**

ஆதிரை: ஆமாம்: கவியரங்கத்திற்குக் கவிதை எழுதிக்கொண்டிருக்கிறேன்!

நேர்விடை

பாமகள்: அப்படியா! என்ன தலைப்பு?

**அறியா வினா**

ஆதிரை: கல்வியில் சிறக்கும் தமிழர் ----------

நேர்விடை

நீங்கள் கவியரங்கத்துக்கு எல்லாம் வருவீர்களா? மாட்டீர்களா?

**ஐயவினா**

பாமகள்: ஏன் வராமல்?

**வினாஎதிர்வினாதல் விடை**

## இயல் - 2

8. **சொற்களில் மறைந்துள்ள தொகைகளை அடையாளம் கண்டு தொடரில்**

அமைக்க. (இன்சொல், எழுகதிர், கீரிபாம்பு, பூங்குழல் வந்தாள், மலை வாழ்வார், முத்துப்பல்)

இன்சொல்: பண்புத்தொகை - இன்சொல் சொல் கூறுதல் சான்றோர்க்கு அழகு

எழுகதிர் : வினைத்தொகை எழுகதிர் காட்சி கண்களுக்கு நலம் சேர்க்கும்.

கீரிபாம்பு : உம்மைத்தொகை இரு நண்பர்கள் கீரிபாம்பு போன்று சண்டையிட்டனர்

பூங்குழல் வந்தாள் : அன்மொழித் தொகை நேற்று என் வீட்டிற்கு பூங்குழல் வந்தாள்.

மலை வாழ்வார் : வேற்றுமைத் தொகை மலைவாழ்வாரே உடல் உறுதி உடையவர்.

முத்துப்பல் : உவமைத்தொகை — கோதை முத்துப்பல் தெரிய சிரித்தாள்.

9. **சொல்லைக் கண்டுபிடித்துப் புதிரைவிடுவிக்க.**

(காடு, புதுமை, விண்மீன், காற்று, நறுமணம்)

1. முதல் இரண்டை நீக்கினாலும் வாசனை தரும்: நீக்காவிட்டாலும் வாசனை தரும். **(நறுமணம்)**
2. பழமைக்கு எதிரானது: எழுதுகோலில் பயன்படும் **(புதுமை)**
3. இருக்கும்போது உருவமில்லை: இல்லாமல் உயிரினம் இல்லை. **(காற்று)**
4. நாலெழுத்தில் கண் சிமிட்டும் — கடையிரண்டில் நீந்திச் செல்லும்**(விண்மீன்)**
5. ஓரெழுத்தில் சோலை - இரண்டெழுத்தில் வனம். **(காடு)**

**இயல் - 3**

**10.இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுதல்**

சிலை — சீலை : சிலையைத் திரைச் சீலையால் மறைத்திருக்கிறார்கள்.
தொடு — தோடு : மலர் தொடுக்கும் பொழுது தோடு கீழே விழுந்தது.
மடு — மாடு : மடுவில் நீர் அருந்திய மாடு இளைப்பாறியது
மலை — மாலை : மலைக்குச் சென்று இறைவனுக்கு மாலை சூடினாள். வளி
— வாளி : வளியின் வேகத்தில் வாளிகள் பறந்தன
விடு — வீடு : விடு என வீட்டிற்கு ஓடினான்.
கொடு — கோடு : எழுதுகோல் கொடுத்து கோடு போடச் சொன்னான்.
கொள் - கோள் : கோள்களைப் பற்றி அறிந்து கொள்.
சிறு — சீறு : சிறு பாம்பும் சீறும்.
தான் - தாம் : தாம் என்றால் தான் இதழ்கள் கூட ஒட்டும்.
விதி — வீதி : விதியினால் வீதிக்கு வந்தான்.

11.. **வல்லினம் மிகும் இடங்கள்:**

1. அ, இ, உ என்னும் சுட்டெழுத்துகளின் பின் வல்லினம் மிகும்.
   அ+ கிளை = அக்கிளை
2. ஓரெழுத்து ஒரு மொழியில் வல்லினம் மிகும்.
   தை + திங்கள் = தைத்திங்கள்

**12.வல்லினம் மிகா இடங்கள்:**

1. இரட்டைக் கிளவியில் வல்லினம் மிகாது

சல + சல = சலசல
பட + பட = படபட

2. வினைத்தொகையில் வல்லினம் மிகாது
   சுடு + சோறு = சுடுசோறு ,
   விரி + சுடர் = விரிசுடர்

13 **தொடரைப் படித்து விடையைக் கண்டறிதல்**

(சோறு, கற்றல், கரு, பூவில், எழுத்து)

1. நூலின் பயன் படித்தல் எனில், கல்வியின் பயன் .......... **(கற்றல்)**
2. விதைக்கு தேவை எரு எனில், கதைக்குத் தேவை..... **(கரு)**
3. கல் சிலை ஆகுமெனில், நெல் .......... ஆகும் **(சோறு)**
4. குரலில் இருந்து பேச்சு எனில், விரலில் இருந்து....... **(எழுத்து)**
5. மீன் இருப்பது நீரில், தேன் இருப்பது....... **(பூவில்)**

**விடைக்கேற்ற வினா அமைக்க:**

1. திராவிட மொழிகளின் ஒப்பியல் இலக்கணத்தை எழுதியவர் கால்டுவெல்.
   திராவிட மொழிகளின் ஒப்பியல் இலக்கணத்தை எழுதியவர் யார்?
2. தமிழ்த்தென்றல் திரு.வி.க. போல இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கற்றுக் கொண்டவர் இரா.இளங்குமரனார்.
   தமிழ்த்தன்றல் திரு.வி.க. போல இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கற்றுக்

கொண்டவர் யார்?

3. உலகிலேயே அதிகளவு காற்றை மாசுபடுத்தும் நாடுகளில் இரண்டாம் இடத்தில் இந்தியா உள்ளது.
உலகிலேயே அதிகளவு காற்றை மாசுபடுத்தும் நாடுகளில் இந்தியா எத்தனையாவது இடத்தில் உள்ளது?
4. இவ்வுலகை மிகுதியாக ஆளக்கூடிய ஒரு தொழில்நுட்பம் செயற்கை நுண்ணறிவு.
இவ்வுலகை மிகுதியாக ஆளக்கூடிய ஒரு தொழில்நுட்பம் யாது?
5. தமிழ் மக்களின் வீரத்தை சொல்லும் கலையாகத் திகழ்வது புலியாட்டம் ஆகும்.
தமிழ் மக்களின் வீரத்தை சொல்லும் கலையாகத் திகழும் ஆட்டம் யாது?
6 அறம் கூறும் மன்றங்கள் அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணைபுரிந்தன.
அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணைபுரிந்தவை யாவை?
7. ஒரு மனிதன் தன்னுடைய மகிழ்ச்சியை மறந்து மற்றவர் மகிழ்ச்சியை நாடுவதுதான் உண்மையான மகிழ்ச்சி.
உண்மையான மகிழ்ச்சி யாது?
8. கருத்தாழமும் வாசகச் சுவைப்பும் கலந்து இலக்கியங்கள் படைத்தவர் செயகாந்தன்.
செயகாந்தன் இலக்கியங்களை எவ்வாறு படைத்தார்?
9. தொல்காப்பியர், உலகம் என்பது ஐம்பெரும் பூதங்களால் ஆனது என்கிறார்?
உலகம் என்பது ஐம்பெரும் பூதங்களால் ஆனது என்கிறவர் யார்?
10. ஒரு நாட்டின் வளத்திற்கு தக்கபடியே, அந்நாட்டு மக்களின்அறிவொழுக்கங்களும் அமைந்திருக்கும்.
எதற்குத் தக்கபடி ஒரு நாட்டு மக்களின் அறிவொழுக்கங்கள்அமைந்திருக்கும்?
11. 1996ஆம் ஆண்டு நவம்பர் 1ஆம் நாள் கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டுடன் இணைந்தது.
கன்னியாகுமரி மாவட்டம் எப்பொழுது தமிழ்நாட்டுடன் இணைந்தது?

## பகுதி 3 பிரிவு 1, பிரிவு 2 (வினா எண்29 முதல் 34 வரை)
### மூன்று மதிப்பெண் வினாக்கள்

<u>வினா எண் 34 கட்டாய வினா மனப்பாடச் செய்யுள் பகுதி</u> **(உரைநடை உலகம்)**

**1.புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது இதுபோல் இளம் பயிர்வகை ஐந்தின் பெயர்களைத் தொடரில்**
**அமைக்க.**

1. நெல் நாற்றை நட்டான். 2.வாழைக்கன்றை நட்டான்
3. தென்னமபிள்ளை நட்டான். 4 கத்திரி நாற்றை நட்டான்.
5. மாங்கன்று நட்டான்.

**2. தலையைக் கொடுத்தேனும் தலைநகரை மீட்போம் - இடம் சுட்டிப் பொருள் விளக்குக.**

**இடம்:** சிற்றகல் ஒளி

**பொருள்**: சென்னையைக் காக்க ம.பொ.சி. அவர்கள் தலையைக் கொடுத்தேனும் தலைநகரை மீட்போம் என்று கூறினார்.

*** **இடம்**: சென்னை மாநகராட்சி சிறப்புக் கூட்டம் ஒன்றில் சென்னை பற்றிய தீர்மானத்தை முன்மொழிந்து ம.பொ.சி. அவர்கள் கூறியது.

**பொருள்:** சென்னையைக் காக்க ம.பொ.சி. அவர்கள் தலையைக் கொடுத்தேனும் தலைநகரை மீட்போம் என்று கூறினார்.

**விளக்கம்:** ஆந்திரத்தின் தலைநகராக சென்னை இருக்க வேண்டும் என்று கூறியபோது, சென்னையைக் காக்க ம.பொ.சி. அவர்கள் “தலையைக் கொடுத்தேனும் தலைநகரை மீட்போம்” என்று கூறினார். தீர்மானம் 25.03.1953 இல் நிறைவேற்றப்பட்டது.

**3. பத்தியைப்படித்து மையக்கருத்தை எழுதுக. (புத்தகம் பக்க எண்:179 – சிறுவினா 5)**

விடை: **மையக்கருத்து:** மெய்க்கீர்த்தி என்றால் என்ன என்பதையும் அது சாசனத்தில் அமையும் முறைப்பற்றியும், முதலாம் இராசஇராசனின் மெய்க்கீர்த்திப் பற்றியும் அதன் அமைப்பு, சிறப்பு எவ்வாறு அமைந்துள்ளது என்பதை மையக்கருத்தாகக் கொண்டுள்ளது.

**4. சங்க இலக்கியம் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.**

1.அறத்தில் வணிகம் கூடாது
கைமாறு கருதாத உதவியே அறம். இது இன்றைய காலத்தேவை.

2. கொடை
ஈகைக் குணம் குறைந்துவிட்டது. இது அதிகரிக்க வேண்டும்.
3.பொய்யாச் செந்நா — என்பது சங்க இலக்கியம். என்றும் பொய் சொல்லக் கூடாது.
***1.அறத்தில் வணிகம் கூடாது
கைமாறு கருதாத உதவியே அறம். இது இன்றைய காலத்தேவை.
2. கொடை
ஈகைக் குணம் குறைந்துவிட்டது. இது அதிகரிக்க வேண்டும்.
3.பொய்யாச் செந்நா — என்பது சங்க இலக்கியம். என்றும் பொய் சொல்லக் கூடாது.
4.போர்அறம்: தமிழர் போரிலும் அறநெறிகளைப் பின்பற்றினர். தம்மைவிட வலிமை குறைந்தவர்களோடு போர் செய்யக் கூடாது.

**5'சுற்றுச்சூழலைப் பேணுவதே இன்றைய அறம்' என்ற தலைப்பில் பெற்றோர் ஆசிரியர் கூட்டத்தில் பேசுவதற்கான உரைக்குறிப்பு ஒன்றை உருவாக்குக.**
**உரைக்குறிப்பு**:

சுற்றுச்சூழலின் சிறப்பு – சுனற்றுச் சூழலின் அவசியம் - மாசுபடுதலுக்கான காரணங்கள் - அரசின் திட்டங்கள் - விழிப்புணர்விற்கு நமது பணிகள்- தவிர்க்க வேண்டுவன – கடைபிடிக்க வேண்டுவன- நம்பிக்கை – உறுதிமொழி.

**6 .ஜெயகாந்தன் தன் கதைமாந்தர்களின் சிறந்த கூறுகளைக் குறிப்பிடத் தயங்குவதில்லை என்று அசோகமித்ரன் கூறுகிறார். இக்கூற்றை மெய்ப்பிக்கும் செயல் ஒன்றைத் தர்க்கத்திற்கு அப்பால் கதைமாந்தர் வாயிலாக விளக்குக.**

கதாசிரியருக்கு கிடைத்த வெற்றியைக் கொண்டாட நினைக்கிறார். பிச்சைக்காரனுக்கு இரண்டனா போடுகிறார். பயணச் சீட்டுக்கான பணம் குறைகிறது பிச்சைக்காரனுக்குப் போட்டதில் ஒரு அணா எடுக்கிறார். இது தர்மமா? என்று பிச்சைக்காரர் கேட்கிறார்.

1. **செய்திகளைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக. (வினா எண் 31)**

பூ உண்டு ஆனால் கண்ணிற்குக் காட்சி தராமல் காண்பதற்கு அரியனவாய் இருக்கும் மலர்கள் ஆலமலர், பலாமலர்.

மலர் உண்டு பெயரும் உண்டு ஆனால் இதுதான் அது என்று உறுதியாக அறிய இயலாதுள்ள நிலையில் இருக்கும் மலர்கள் சுள்ளிமலர், பாங்காமலர்.

அகவிதழ் முதலிய உறுப்புகள் இருந்து அவை புறத்தே காட்சிப்படாமல் உள்ளேயே பொதிந்திருக்கும் மலர்கள் அத்தி, ஆலம், கொழிஞ்சி, பலா.பயன்பாடு, நாற்றம், மக்களது விருப்பில் இடம் பெறாமை, பொதுவில் ஒதுக்கப்பட்டமை கொண்டு மலரில் சில எளியவை ஆகின்றன. அவையாவன நெருஞ்சி, எருக்கு, பூளை, குரீஇப்பூளை, வேளை, ஊமத்தம், கள்ளி, முருங்கை.

இலுப்பைப் பூக்கள் இனிப்பானவை. கரடிகள் மரத்தின் மீதேறி அவற்றைப் பறித்து உண்ணும். பாதிரிப்பூ குடிநீருக்குத் தன் மணத்தை ஏற்றும். மூங்கில் பூவில் காய் தோன்றிக் கனியாகி அதிலிருந்து ஒருவகை அரிசி தோன்றும். இது மூங்கில் அரிசி எனப்படும்.

- கோவை இளஞ்சேரன்

**வினாக்கள்:**

1. மலர் உண்டு, பெயரும் உண்டு - இரண்டு தொடர்களையும் ஒரு தொடராக்குக.
விடை மலரும் பெயரும் உண்டு.
2. அரும்பாகி மொட்டாகிப் பூவாகி... என்பதை ஒத்து அமைந்துள்ள தொடரைக் கண்டறிக.

விடை மூங்கில் பூவில் காய் தோன்றிக் கனியாகி அதிலிருந்து ஒருவகை அரிசி தோன்றும். இது மூங்கில் அரிசி எனப்படும்.

3. நீங்கள் அறிந்த இரு பூக்களின் பெயர்களையும் பயன்களையும் எழுதுக.

விடை 1. வாழைப்பூ சமைலுக்கு உதவும். பெண்களின் கருப்பைக்கு நல்ல பலமளிக்கும்.

2. வேப்பம்பூ - துவையல், ரசம் செய்து உணவாக அருந்த குமட்டல், வாந்தி, மயக்கம் குணமாகும்.

4. அரியமலர் இலக்கணக்குறிப்பு — பண்புத்தொகை

5. பிழைகளை நீக்குக. மறத்தின்

- மரத்தின் பரித்து —
பறித்து மனத்தை —
மணத்தை

## பகுதி 3 கவிதைப்பேழை சிறுவினா
## (வினா எண்:32 முதல் 34 வரை)

**1 .தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை? அல்லது செந்தமிழைத் தலை பணிந்து வணங்கக் காரணங்கள் யாவை?** 1.பழமைக்குப் பழமை 2. மண்ணுலகப்பேரரசி 3. பாண்டிய மன்னனின் மகள்: 4.திருக்குறளின் மாண்புகழ்.5. பத்துப்பாட்டு, எட்டுத்தொகை ஆனவள்

*** அன்னைத் தமிழ் பழமைக்குப் பழமையாய்த் தோன்றியவள்.2. குமரிக்கண்டத்தில் அரசாண்ட மண்ணுலகப் பேரரசி3. பாண்டிய மன்னனின் மகள்: 4.திருக்குறளின் மாண்புகழ்.5. பத்துப்பாட்டு, எட்டுத்தொகை ஆனவள் 6.நிலைத்தத் தன்மையும் வேற்றுமொழியார் புகழுரையும் கொண்டவள்.

**2. உயிராக நான், பல பெயர்களில் நான், நான்கு திசைகளிலும் நான், இலக்கியத்தில் நான், முந்நீர் நாவாய் ஓட்டியாக நான் ... முதலிய தலைப்புகளில் காற்று தன்னைப்பற்றிப் பேசுகிறது. இவ்வாறு நீர் தன்னைப் பற்றிப் பேசினால் ... உங்களுடைய கற்பனையில் தலைப்புகளை எழுதுக**.

நானே நீர் - உலகில் முக்கால் பாகம் நான் - நான் இன்றி உலகம் இல்லை - மேகமாய் நான்- மழையாய் நான் - அருவியாய் நான் - கடலாய் நான்

3.**நின** மழை

**றவுடன் புலப்படும் காட்சியை வருணித்து எழுதுக.**

குறிப்பு: இலைகளில் சொட்டும் நீர் - உடலில் ஓடும் மெல்லிய குளிர் - தேங்கிய குட்டையில் 'சளப் தளப்' என்று குதிக்கும் குழந்தைகள் - ஓடும் நீரில் காகிதக் கப்பல் 1.வானத்தை பிளந்து கொண்டு மழைக் கொட்டியது. 2.மழை மெதுவாக நின்றது. 3.இலைகளில் இருந்து மழைத்துளி சொட்டுச்சொட்டாக வடிந்தது.4. தேங்கிய குட்டைகளில் 'சளப் தளப் 'என்று குழந்தைகள் குதித்து விளையாடினர்.5. பைக்குள் இருந்த நோட்டுப் புத்தகங்கள் கப்பலாகின.6.மகிழ்ச்சியுடன் குழந்தைகள் குதித்து விளையாடினர்.

**4. மாளாத காதல் நோயாளன் போல் என்னும் தொடரிலுள்ள உவமை சுட்டும் செய்தியை விளக்குக அல்லது வித்துவக்கோட்டம்மானிடம் குலசேகரர் வேண்டுவன யாவை?**

மருத்துவர் உடலில் ஏற்பட்ட புண்ணைக் கத்தியால் அறுத்துச் சுட்டாலும் அது நன்மைக்கே அது போன்று இறைவா! நீ துன்பத்தை எனக்குத் தந்தாலும் உன் அருளை வேண்டுகிறேன். என்கிறார் குலசேகரர்.

**6 வள்ளுவம் சிறந்த அமைச்சருக்குக் கூறிய இலக்கணங்கள் நமக்குப் பொருந்துவதைக் குறள்வழி விளக்குக.**

1. காலம் அறிந்து செயல் செய்தல் 2. மனவலிமை 3. மக்களைக் காத்தல் 4. நூல்களைக் கற்றல் 5. விடாமுயற்சி

*** 1. காலம் அறிந்து செயல் செய்தல் 2. மனவலிமை 3. மக்களைக் காத்தல் 4. நூல்களைக் கற்றல்

5. விடாமுயற்சி இவை வள்ளுவர் சிறந்த அமைச்சருக்குக் கூறும் இலக்கணங்கள் ஆகும் இவை நமக்குப் பொருந்தும்.

உள்ளங்களையும் சுற்றங்களையும் அருகில் சேர்க்கவில்லை. அவருக்கு உணர்த்தும் நோக்கில் வள்ளுவர் 5.

**பலரிடம் உதவிப் பெற்று கடின உழைப்பால் முன்னேறிய ஒருவர் அவருக்கு உதவிய நல்ல குறிப்பிடும் கருத்துகள் யாவை?**

1.பகைவரின் வலிமையை எதிகொள்ள முடியாது. 2. எளிதில் பகைக்கு ஆட்பட நேரிடும்.

*** 1.உறவினர் அன்பு இல்லையெனில் உற்றத் துணையில்லாமல் பகைவரின் வலிமையை எதிகொள்ள முடியாது. 2. பிறருக்கு உதவி செய்யாமல் இருத்தல் என்பது எளிதில் பகைக்கு ஆட்பட நேரிடும. 3.மனதில் துணிவு இல்லாதவர்கள் அறியவேண்டியவற்றை அறியாதவராக இருப்பர்.

**7 எவையெல்லாம் அறியேன் என்று கருணையன் கூறுகின்றார்?**

உயிர் பிழைக்கும் வழி அறியேன், உடலின் தன்மை அறியேன்
உணவு தேடிக் கொணரும் வழிவகை அறியேன்
காட்டில் செல்லும் வழிகளையும் அறியேன் என்று கருணையன் கூறுகின்றார்.

**கற்கண்டு (இலக்கணம்) சிறுவினா**

**1. அறிந்தது, அறியாதது, புரிந்தது, புரியாதது, தெரிந்தது, தெரியாதது, பிறந்தது, பிறவாதது — வினைமுற்றுகளைத் தொழிற்பெயர்களாக மாற்றுக.**

| வினைமுற்று | தொழிற்பெயர் | வினைமுற்று | தொழிற்பெயர் |
|---|---|---|---|
| அறிந்தது | அறிதல் | அறியாதது, | ஆறியாமை |
| புரிந்தது | புரிதல் | புரியாதது | புரியாமை |
| தெரிந்தது | தெரிதல் | தெரியாதது | தேரியாமை |
| பிறந்தது | பிறத்தல் | பிறவாதது | பிறவாமை |

2. தேன், நூல், பை, மலர், வா இத்தனிமொழிகளுடன் சொற்களைச் சேர்த்து தொடர்மொழிகளாக்குக.

| தனிமொழி | தொடர்மொழி |
|---|---|
| தேன் | தேன்மொழி, தேன்தமிழ் |
| நூல் | நூல்சேலை, நூல் எழுதுக |
| பை | பை தா, பைந்தமிழ் |

4 . வினையடியைவிகுதிகளுடன் இணைத்துத் தொழிற்பெயர்களை உருவாக்குக.

காண் - காட்சி, காணுதல், காணல், காணாமை
சிரி - சிரிப்பு, சிரித்தல், சிரியாமை
தடு - தடுப்பு, தடுத்தல்,

5 கட்டு, சொட்டு, வழிபாடு, கேடு, கோரல் - இத்தொழிற்பெயர்களை வகைப்படுத்துக.

கட்டு - முதனிலைத்தொழிற்பெயர்
சொட்டு, கோரல் - விகுதி பெறாத தொழிற்பெயர்
கேடு - முதனிலை திரிந்த தொழிற்பெயர்
வழிபாடு - முதனிலை திரிந்த தொழிற்பெயர்

6 தோட்டத்தில் மல்லிகைப்பூ பறித்த பூங்கொடி வரும்வழியில் ஆடுமாடுகளுக்குத் தண்ணீர்த் தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவள் சுவர்க்கடிகாரத்தில் மணி பார்த்தாள். இப்பத்தியில் உள்ள தொகைநிலைத்தொடர்களின் வகைகளைக் குறிப்பிட்டு விரித்து எழுதுக.

பூங்கொடி - அன்மொழித்தொகை (பூங்கொடியை அணிந்த பெண்)
ஆடுமாடுகள் - உம்மைத்தொகை (ஆடுகளும் மாடுகளும்)
தண்ணீர்த்தொட்டி - 2-ம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை (தண்ணீரை உடைய தொட்டி)
குடிநீர் - வினைத்தொகை (குடித்தநீர், குடிக்கின்ற நீர், குடிக்கும் நீர்)

மணி பார்த்தாள் - 2ம் வேற்றுமைத் தொகை (மணியைப் பார்த்தாள்)

7.தொடர்வகைகள் (புத்தகப்பக்கம் 66 சிறுவினா 1)

கண்ணே கண்ணுறங்கு – விளித்தொடர்.
காலையில் நீ எழும்பு - இடைச்சொல் தொடர்.
மாமழை பெய்கையிலே – உரிச்சொல் தொடர்.
மாம்பூவே கண்ணுறங்கு – வேற்றுமைத்தொடர்.
பாடினேன் தாலாட்டு – வினைமுற்றுத்தொடர்.
ஆடி ஆடி ஓய்ந்துறங்கு – அடுக்குத்தொடர்.

8.வழுவமைதி (புத்தகப்பக்கம் 94 சிறுவினா எண்: 4)

| **திணைவழுவமைதி**. | **மரபு வழுவமைதி** | **காலவழுவமைதி** |
|---|---|---|
| இலச்சுமி கூப்பிடுகிறாள் | வாழைத்தோப்பு | இதோ சென்றுவிட்டேன் |
| என்னடா விளையாட வேண்டுமா? | குட்டியுடன் நின்றிருந்த மாடு | |
| நீயும் இவனும் விளையாடுங்கள் | துள்ளிய குட்டி, | |

9 முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும் - இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள்கோளின் வகையினைச் சுட்டி விளக்குக.

முயற்சி செல்வத்தை உண்டாக்கும். முயற்சி இல்லாமை வறுமையை உண்டாக்கும்.
இக்குறட்பாவில் ஆற்றுநீர் போலத் தொடக்கம் முதல் முடிவு வரை பொருள் கொள்ளுமாறு அமைந்துள்ளது. எனவே இஃது ஆற்றுநீர்ப் பொருள்கோளாகும்.

10. வினா எத்தனை வகைப்படும்? அவை யாவை?

வினா ஆறு வகைப்படும். அவை 1.அறிவினா 2.அறியாவினா 3.ஐயவினா 4.கொளல்வினா 5.கொடைவினா 6. ஏவல்வினா

11. விடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?

விடை எட்டு வகைப்படும். அவை 1.சுட்டு விடை 2.மறைவிடை 3.நேர்விடை 4.ஏவல்விடை 5.வினா எதிர்வினாதல் விடை 6.உற்றது உரைத்தல் விடை 7.உறுவது கூறல் விடை 8.இனமொழி விடை

12. பெரும்பொழுது, சிறுபொழுது எத்தனை வகைப்படும் அவையாவை?

பெரும்பொழுது 6 வகைப்படும். அவை 1.கார்காலம் 2.குளிர்காலம் 3.முன்பனிக்காலம் 4.பின்பனிக்காலம் 5.இளவேனில் காலம் 6.முதுவேனில் காலம்

சிறுபொழுது 6 வகைப்படும். அவை 1.காலை 2.நண்பகல் 3.எற்பாடு 4.மாலை 5.யாமம் 6.வைகறை

13 அவந்தி நாட்டு மன்னன் மருத நாட்டு மன்னனுடன் போர் புரிந்து அந்நாட்டைக் கைப்பற்ற நினைக்கின்றான். அப்போர் நிகழ்வைப் புறப்பொருள் வெண்பாமாலை கூறும் இலக்கணத்தின் வழி விளக்குக.

வெட்சி: அவந்தி நாட்டார் வெட்சிப்பூச் சூடி மருதநாட்டு ஆநிரை கவர்தல்
கரந்தை: மருத நாட்டார் கரந்தைப்பூச் சூடித் தங்கள் ஆநிரை மீட்டல்
வஞ்சி: அவந்தி நாட்டார் வஞ்சிப்பூச் சூடிப் போருக்குச் செல்லுதல்
தும்பை:இருநாட்டினரும் தும்பைப்பூச் சூடிப் போரிடல்
வாகை: வெற்றிப் பெற்ற மன்னன் வாகைபபூச் சூடி மகிழல்

14. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.

அகவலோசை பெற்று வரும்
இயற்சீர் மிகுதியாகவும் காய்ச்சீர் குறைவாகவும் வரும்
ஆசிரியத்தளை மிகுதியாகவும் வெண்டளை, கலித்தளை விரவியும் வரும்.
ஏகாரத்தில் முடிவது சிறப்பு
சிற்றெல்லை 3 அடி பேரெல்லை பாடுபவர் உள்ளக் கருத்தின் அளவு

15. கடற்கரையில் உப்புக் காய்ச்சுதல் நடைபெறுகிறது. மலைப் பகுதிகளில் மலைப்பயிர்களும் நிலப்பகுதிகளில் உழவுத் தொழிலும் நடைபெறுகின்றன. காலப்போக்கில் பல மாற்றங்கள் நிகழ்ந்த போதிலும் பண்டைத் தமிழரின் திணை நிலைத் தொழில்கள் இன்றளவும் தொடர்வதையும் அவற்றின் இன்றைய வளர்ச்சியையும் எழுதுக.

குறிஞ்சி - தேன்- மருந்து பொருள்
மருத நிலம் - நெல் -பயிர்த்தொழில்
நெய்தல் - உப்பு,மீன் – மீன் பிடித்தல் இவை இன்றைய வளர்ச்சி.

**அலகிட்டு வாய்பாடு** (மாதிரி)

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்

| சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|
| ஒழுக்/கம் | நிரை + நேர் | புளிமா |
| விழுப்/பம் | நிரை + நேர் | புளிமா |
| தர/லான் | நிரை + நேர் | புளிமா |
| ஒழுக்/கம் | நிரை + நேர் | புளிமா |
| உயி/ரினும் | நிரை + நிரை | கருவிளம் |
| ஓம்/பப் | நேர் + நேர் | தேமா |
| படும் | நிரை | மலர் |

இறுதியில் இக்குறட்பா 'மலர்' என்னும் வாய்பாட்டில் முடிந்துள்ளது.

## அணிகள்

**1 கவிஞர் தாம் கூற விரும்பும் கருத்திற்கு ஏற்றவாறு தற்குறிப்பேற்ற அணி அமைவதை எடுத்துக்காட்டுடன் விளக்குக.**

இயல்பாய் நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞர் தன் குறிப்பை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணியாகும்.

எ.கா. 'போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி
வாரல் என்பனபோல் மறித்துக் கைகாட்ட'

பாடல் பொருள் : கோட்டை மதில் மேல் இருந்த கொடியானது வரவேண்டாம் எனத் தடுப்பது போலக் கை காட்டியது.

*****அணி விளக்கம்:**

இயல்பாய் நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞன் தன் குறிப்பை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்றஅணிஎனப்படும்.

(எ.கா)'போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி
'வாரல்' என்பனபோல் மறித்துக்கை காட்ட'

**பாடலின் பொருள்:**

கோட்டை மதில்மேல் இருந்த கொடியானது வரவேண்டாம் எனத் தடுப்பதுபோல, கைகாட்டியது என்பது பொருள்

**அணிப்பொருத்தம்:**

கோவலன், கண்ணகி மதுரை மாநகருக்குள் சென்றபோது மதிலின் மேலிருந்த கொடிகள் காற்றில் இயற்கையாக அசைந்தன. ஆனால் இளங்கோவடிகள் கோவலன் மதுரை மாநகருக்குள் வந்தால் பின்பு கொலை செய்யப்படுவான் எனக்கருதி 'வரவேண்டா' எனஅசைவதாகத் தன் குறிப்பை ஏற்றிக்கூறுவதால் இது தற்குறிப்பேற்ற அணி ஆயிற்று.

**2. நிரல்நிறை அணியைச் சான்றுடன் விளக்குக.**

சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி பொருள் கொள்வது நிரல்நிறை அணி எனப்படும்.

எ.கா. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது

அன்பு – பண்பு, அறம் - பயன்

***** அணிவிளக்கம்:**

நிரல் - வரிசை
நிறை - நிறுத்துதல்

சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி அவ்வரிசைப்படியே இணைத்துப் பொருள் கொள்வது நிரல்நிறை அணி எனப்படும்

எ.கா.

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது

**பாடலின் பொருள்:**

இல்வாழ்க்கை அன்பும் அறமும் உடையதாக விளங்குமானால் அந்த வாழ்க்கையின் பண்பும் பயனும் அதுவே ஆகும்.

**அணிப்பொருத்தம்:**

அன்பும், அறனும் என்னும்சொற்களை நேராக நிறுத்தி, பண்பும் பயனும் என்னும் சொற்களை நிரலாக (முறையாக)வைத்துள்ளமையால் இது நிரல்நிறை அணி ஆகும்.

**3 வேலொடு நின்றான் இடு என்றது போலும்
கோலொடு நின்றான் இரவு - இக் குறளில் பயின்று வந்துள்ள அணியை விளக்குக.**

**அணி** : உவமையணி.

**உவமை** : வேல் போன்ற ஆயுதம் காட்டி வழிப்பறி செய்வது.

**உவமேயம்** : ஆட்சி அதிகாரத்தைக் கொண்டுள்ள அரசன் வரி விதிப்பது

**உவமஉருபு** : போலும்

*****அணிவிளக்கம்:** உவமை ஒரு வாக்கியமாகவும் உவமேயம் ஒரு வாக்கியமாகவும் போல எனும் உவமஉருபு வெளிப்படையாக வருவது உவமை அணி ஆகும்.

**4 தீவக அணியை விளக்குக.**

**தீவகம் - விளக்கு** 2.விளக்கு எல்லா இடத்திற்கும் வெளிச்சம் தரும் 3. அது போல பல இடங்களுக்குச் சென்று பொருள் தரும்.

***** அணி இலக்கணம்:**

தீவகம்: விளக்கு

ஓர் இடத்தில் வைக்கப்பட்ட விளக்கு,அவ்வறையின் பல இடங்களிலும் பொருள்களுக்கு வெளிச்சம் தந்து விளக்குதல் போல, அச்செய்யுளின் ஓரிடத்தில் நின்ற ஒரு சொல் அச்செய்யுளின் பல இடங்களுக்கும்சென்று பொருந்தி பொருள் விளக்குவது தீவகஅணி எனப்படும்.

தீவகஅணி முதல்நிலை, இடைநிலை, கடைநிலை எனமூவகைப்படும்

**(எ.கா.)**

சேந்தன வேந்தன் திருநெடுங்கண், தெவ்வேந்தர்
ஏந்து தடந்தோள், இழிகுருதி – பாய்ந்து

**பாடலின் பொருள்:** சேந்தன – சிவந்தன – தோள்கள்,கண்கள்,அம்புகள்,பறவைகள்…...

**5 தன்மையணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.**

ஒரு பொருளின் உண்மைத் தன்மை மாறாமல் பிறர் மகிழுமாறு பாடுவது. எ.கா.

மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும்
கையில் தனிச்சிலம்பும் கண்ணீரும் -

*****அணிவிளக்கம்:**

இயற்கையில் அமைந்த அதன் உண்மையான இயல்புத் தன்மையினைக் கேட்பவர்களின் மனம் மகிழுமாறு உரிய சொற்களை அமைத்துப் பாடுவது தன்மையணியாகும். இவை தன்மை நவிற்சி அணி என்றும்அழைக்கப்படும்.

எ.கா. மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும்

கையில் தனிச்சிலம்பும் கண்ணீரும் -

**பாடலின் பொருள்:**

உடம்பு முழுக்கத் தூசியும் விரித்த கருமையான தலைமுடியும் கையில் ஒற்றச் சிலம்போடு வந்த தோற்றமும் அவளது கண்ணீரும் கண்டஅளவிலேயே வையை நதி பாயும் கூடல் நகரத்து அரசனான பாண்டியன் தோற்றான். அவளதுசொல், தன் செவியில் கேட்டவுடன் உயிரை நீத்தான்.

**அணிப்பொருத்தம்:**

கண்ணகியின் துயர் நிறைந்த தோற்றத்தினை இயல்பாக உரிய சொற்களின் மூலம் கூறியமையால் இது தன்மைநவிற்சியணி எனப்படும்.

## பகுதி 4
## வினா எண் 38-42 5 மதிப்பெண் வினாக்கள் கவிதைப்பேழை
## நெடுவினா

**1. மனோன்மணியம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்தையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு ஒரு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.**

அவைக்கு என் வணக்கம். மனோன்மணியம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்தையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டுப் பேச வந்துள்ளேன்.

| சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்து | பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்து |
|---|---|
| சீர் இளமைத் திறன் | மண்ணுலகப் பேரரசி |
| முகம் பாரதக் கண்டம் | திருக்குறளின் மாண்புகழ் |
| நெற்றிப் பொட்டு தமிழகம் | எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு |
| எட்டுத்திசைகளிலும் புகழ் | சிலம்பையும் மணிமேகலையையும் அணிந்துள்ள தமிழ்த்தாயை வாழ்த்துதல் |
| தமிழைத் தமிழ்த்தாயாக வாழ்த்துதல் | |

*** அவைக்கு என் வணக்கம். மனோன்மணியம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்தையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டுப் பேச வந்துள்ளேன்.

**மனோன்மணியம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்து**

1. சீர் இளமைத் திறன் கொண்டவள். 2. பாரதக் கண்டம் தமிழ்த்தாயின் முகம் 3. தமிழகமே! அவளின் நெற்றிப் பொட்டு 4. இவளது புகழ் எட்டுத் திசையிலும் பரவியுள்ளது.

இவ்வாறு சுந்தரனார் தமிழை தாயாகவே பாவித்துப் பாடியுள்ளார்.

**பெருஞ்சித்திரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்து:**

1. தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!

2.மண்ணுலகப் பேரரசியே! 3. எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு. சிலப்பதிகாரம் மணிமேகலை போன்ற நூல்களைத் தன்னகத்தே கொண்டவளே! எனத் தமிழை வாழ்த்துகிறார்.

இவ்வாறு இருவரும் தமிழைத் தாயாக வாழ்த்தி வணங்குகின்றனர். நாமும் வாழ்த்துவோம்.

**2.மலர்ந்தும் மலராத.. எனும் கவிஞர் கண்ணதாசனின் இப்பாடலில் தவழும் காற்றையும் கவிதை நயத்தையும் பாராட்டி உரைசெய்க. (பாடல் புத்தகப்பக்க எண்:44)**

.மலர்ந்தும் மலராத.. எனும் இப்பாடலில்
குழந்தையைப் பாதி மலராகவும்,
காலைப் பொழுதாகவும்,

நதியில் விளையாடும் அன்னமாகவும்,
இளம் தென்றலாகவும்,
பொதிகை மலையில் தோன்றி,
மதுரையில் வளர்ந்த தமிழாகவும் நயம்பட உரைத்துள்ளார்.

*** 1. பூ மலர்ந்தும் மலராமலும் இருக்கும் நிலை 'போது' அதைத்தான் பாதி மலர் என்கிறார்கவிஞர்.

2. குழந்தையின் முகத்தில் மகிழ்ச்சியைக் காணவிரும்பி பாதி மலராக உருவகப்படுத்தி உள்ளார்.

3. குழந்தையை அன்னப் பறவையாகவும், தென்றலாகவும் உருவகப்படுத்தி உள்ளார்.

4. பொதிகை மலையில் தவம் செய்து அகத்தியரால் உருவாக்கப்பட்ட தமிழ் பாண்டிய மன்னர்களால் வளர்க்கப்பட்டது.

5. அத்தகுத் தமிழை குழந்தையாக உருவகப்படுத்தி இருக்கிறார்.

6.இப்பாடலில் கவிஞர், தான் பெற்ற குழந்தை அழகானது, சுகமானது, அற்புதமானது, நளினமானது என ஒவ்வொரு பொருளையும் உவமையாகக் காட்டியிருப்பது கற்பனைத் திறனுக்குச் சான்று.

3. சந்தக் கவிதையில் சிறக்கும் கம்பன் என்ற தலைப்பில் இலக்கிய உரை எழுதுக.

. தேர்ந்தெடுத்த பூக்கள் போன்று வரிசை தொடுத்து அமர்ந்திருக்கும் ஆன்றோர்களே. அறிஞர் பெருமக்களே. வணக்கம். இயற்கை கொலு வீற்றிருக்கும் காட்சியைப் பெரிய கலைநிகழ்வே நடப்பதான தோற்றமாகக் கம்பன் காட்டும் கவி தண்டலை மயில்கள் ஆட...

இவ்வுரையைத் தொடர்க.

மயில்கள் - பெண்கள் போல் நடனம் மேகங்கள் - மத்தளம்
மலர்கள் - கண்கள்
வண்டின் இசை — யாழ் இசை
இராமனின் மேனி
மையோ? மரகதமோ? மறிகடலோ? மழைமுகமோ?

***அன்பும் பண்பும் கொண்ட தலைவர் அவர்களே!

1. கம்பராமாயணப் பாடல்கள் சந்த நயம் மிக்கவை.
2. கம்பனுக்கு நிகர் கம்பனே ஆவார்.
3. தாதுகுசோலை தோறும் எனத் தொடங்கும் பாடலில் இயற்கை காட்சிகளைக் கலை நிகழ்வாகக் காட்டுகிறான் கம்பன்.
4. வெய்யோன் ஒளி எனத் தொடங்கும் பாடலில் இராமனின் மாநிற மேனியை, மையோ? மரகதமோ? மறிகடலோ? மழைமுகமோ? எனப் புகழ்ந்து வியக்கிறான் கம்பன்.
5. உறங்குகின்ற கும்பகன்ன எனத் தொடங்கும் பாடலில் தூங்கும் கும்பகர்ணனை எழுப்புவதிலும் சந்த நயம் மிகுந்து சிறக்கிறான் கம்பன்.

4. பாடப்புத்தகத்தில் இடம்பெற்றுள்ள மெய்க்கீர்த்திப் பாடலின் நயத்தை விளக்குக.

இரண்டாம் இராசராசசோழனின் நாட்டின் வளம், ஆட்சிச் சிறப்பைச் சொல்கின்றது
சோழநாட்டில் உரிமைகள் பறிக்கப்படுவதில்லை
வெறுமை இல்லை
நெற்கதிர்கள் மட்டுமே போராக உள்ளன வேறு போர் இல்லை
வறுமை இருள் இல்லை
சிறப்பான சொற்கள் இடம்பெற்றுள்ளன
***

| | |
|---|---|
| யானைகள்பிணிக்கப்படும் | மக்கள் பிணிக்கப்படுவதில்லை |
| சிலம்புகள் புலம்பும் | மக்கள் புலம்புவதில்லை |
| மாங்காய் வடுப்படும் | மக்கள் வடுப்படுவதில்லை |

| | |
|---|---|
| வண்டுகள் கள் உண்ணும் | மக்கள் கள் உண்பதில்லை |
| புனல் அடைக்கப்படும் | மக்கள் அடைக்கப்படுவதில்லை |

இம்மெய்க்கீர்த்தி பாடலின் இலக்கிய நயம் நாட்டின் வளத்தையும் ஆட்சி சிறப்பையும் ஒருசேர உணர்த்துகிறது.
இப்பாடலில் இயல்பு நவிற்சிஅணி இடம்பெற்றுள்ளது.

5. சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.

| மருவூர்ப்பாக்க வணிக வீதி | இக்கால வணிக வளாகம் |
|---|---|
| தனித்தனித் தொழில், கைத்தொழில் வீதி | ஒரே வீதியில் எல்லாப் பொர்ருட்களும் இல்லை |
| கூலக்கடைத் தெருக்கள் | தனித்தனி அங்காடிகள் |
| நேரடி வணிக முறை | இடைத்தரகர் வணிக முறை |
| மனிதநேயம் மிக்கது | வணிக நோக்கம் |
| உற்பத்தியாளர், விவசாயிகள் கையில் | வியாபாரிகள் கையில் |
| தரம் உண்டு, விலை குறைவு | முறையான விலை இல்லை |

6. காலக்கணிதம் கவிதையில் பொதிந்துள்ள நயங்களைப் பாராட்டி எழுதுக.

கவிஞன் யானோர் காலக்கணிதம்
கருப்படு பொருளை உருப்பட வைப்பேன்
புவியில் நானோர் புகழுடைத் தெய்வம்
பொன்னினும் விலைமிகு பொருளென் செல்வம்
இவைசரியென்றால் இயம்புவதென் தொழில்
இவைதவ றாயின் எதிர்ப்பதென் வேலை
ஆக்கல் அளித்தல் அழித்தல் இம்மூன்றும்
அவனும் யானுமே அறிந்தவை அறிக

\- கண்ணதாசன்

திரண்ட கருத்து — கவிஞர் காலக்கணிதமாவார்
மோனை - கவிஞன், கருப்படு, இவைசரி, இவைதவறு
எதுகை - இவைசரி, இவைதவறு
அணிநயம் - உருவக அணி
சந்த நயம் - இனிய சந்தம் பாடுவதற்கு ஏற்ற வகையில் உள்ளது

*** **காலக்கணிதம் நயங்கள்**

**திரண்ட கருத்து:**
கவிஞனாகிய கண்ணதாசன் காலத்தை கணிக்கும் கணிதமாகிறார்.அவரது பாடல்களில் காணப்பெறும் கருப்பொருள்களை உருப்பெற வைப்பவர். இப்புவியில் கவிஞர் புகழ்பெற்ற தெய்வம் என்கிறார். அவரது கவிதைகள் பொன்னைவிட விலை மிகுந்தது. அவரது உள்ளத்திற்கு எது சரி என்று தோன்றுகிறதோ அதை எழுதுவதுதான் அவருடைய தொழில். இறைவனைப் போன்று முத்தொழிலையும் கவிதையில் செய்பவர்.

**சொல் நயம்:**
கவிஞர் தான் ஒரு காலக்கணிதம் என்று கம்பீரமான சொற்களால் சொல்கிறார். கணிதம் உள்ளதை உள்ளவாறு உரைக்கிறது. இவரது கவிதையில் சொல்நயத்தை அழகாக கையாண்டுள்ளார்.

எ.கா கருப்படு பொருள், பொன்னினும் விலைமிகு பொருள்

**தொடை நயம்**:

‘தொடையற்றப் பாட்டு
நடையற்றுப் போகும்’

கவிஞரின் கவிதையில் எதுகை நயம், மோனை நயம், இயைபு நயம், முரண்நயம் முதலிய நயங்கள் சிறப்புற அமைந்துள்ளன.

**எதுகை நயம்**: செய்யுளில் இரண்டாம் எழுத்து ஒன்றிவருவது எதுகை நயம் ஆகும்

‘புலவனுக்கு ‘எது கை’கொடுக்காவிட்டாலும்
‘எதுகை’ கைகொடுக்கும்’

க**வி**ஞன் - பு**வி**யில் **இவை**சரி - **இவை**தவ

**மோனை நயம்**: செய்யுளில் முதல் எழுத்து ஒன்றிவருவது எதுகை நயம் ஆகும்

‘குயவனின் கைவண்ணம் பானையிலே
புலவனின் கைவண்ணம் மோனையிலே’

**க**விஞன் - **க**ருப்படு, **இ**வைசரி - **இ**வைதவ

**இயைபு நயம்**: செய்யுளின் இறுதிச் சீரோ எழுத்தோ ஒன்றிவருவது இயைபு நயம் ஆகும்.

‘அன்னையிடம் கடைக்குட்டி ஒட்டுவது இயல்பு
கவிதையில் கடைசிச்சீர் ஒன்றுவது இயைபு’

தெய்**வம்** - செல்**வம்**

**முரண் நயம்**: செய்யுளில் எதிர்ச்சொல் அமைவது முரண் நயமாகும்

‘கோட்டைக்கு மதில் அரண்
கவிதையில் எதிர்ச்சொல் முரண்’

சரி – தவறு, ஆக்கல் - அழித்தல்

7. கருணையனின் தாய் மறைவிற்கு வீரமாமுனிவர் தம் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க.

பூமித்தாயே என் அன்னையின் உடலைக் காப்பாயாக
அன்னையின் உடலை மண் இட்டு மூடி மலர்களையும் கண்ணீரையும் பொழிந்தான்
என் மனம் பறிக்கப்பட்ட மலர்போல் உள்ளது
அம்பினால் உண்டான புண்ணின் வலி போல் மனம் வலிக்கின்றது
என்னைத் தனியே தவிக்கவிட்டுவிட்டு என்தாய் சென்றுவிட்டார்

*** **பூமித்தாயே காப்பாயாக**:

கருணையன் தன் மலர்போன்ற கைகளைக் கூப்பி பூமித்தாயே என் அன்னையின் உடலைக் காப்பாயாக! அன்னையின் உடலை மண் இட்டு மூடி மலர்களையும் கண்ணீரையும் பொழிந்தான்.

**இளம்பயிர் காய்ந்ததே!**

இளம்பயிர் முதிர்ந்து நெல்மணி ஆகும் முன் காய்ந்தது போல் தாயை இழந்து வாடுகிறேன்.

**வழிதெரியாமல் தவிக்கிறேன்:**

என் மனம் பறிக்கப்பட்ட மலர்போல் உள்ளது. சரிந்த வழுக்கு நிலத்திலே தனியே விடப்பட்டு வழிதெரியாமல் தவிக்கிறேன்.

**என் தாய் என்னைவிட்டுப் போய்விட்டாளே!**

நான் உயிர் பிழைக்கும் வழி அறியேன். அம்பினால் உண்டான புண்ணின் வலி போல் மனம் வலிக்கின்றது. என்னைத் தனியே தவிக்கவிட்டுவிட்டு என்தாய் சென்றுவிட்டார்

## வினா எண் 39 கடிதம் எழுதுதல்

1. **மாநில அளவில் நடைபெற்ற மரம் இயற்கையின் வரம் எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.**

**வாழ்த்து மடல்**

அன்பு நண்பா,

7-3-2021
சிவகங்கை

நலம் நலமறிய ஆவல். மாநில் அளவில் நடைபெற்ற மரம் இயற்கையின் வரம் எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற உன்னைப் பாராட்டுகிறேன். நீ மேலும் பல வெற்றிகள் பெற .வாழ்த்துகிறேன்.

இப்படிக்கு
அன்புடன்
அஅஅஅஅ

உறைமேல் முகவரி
ஆஆஆஆஆ
5, கம்பர் தெரு
மதுரை.

### ***“மரம் இயற்கையின் வரம்”

20.3..2021
காரைக்குடி.

அன்புள்ள நண்பா,

cd; md;G ez;gd; vOJtJ. eyk; eykwpa Mty;. khepy; mstpy; eilngw;w kuk; ,aw;ifapd; tuk; vDk; jiyg;gpyhd fl;Liug; Nghl;bapy; eP ntw;wp ngw;W Kjy; ghpR ngw;wij nra;jpj;jhspy; fz;L kfpo;e;Njd;. cd; ntw;wpia vd; ntw;wpahf vz;zp kfpo;fpd;Nwd;. eP NkYk; NkYk; ntw;wpfs; gy ngw ,iwtid Ntz;Lfpd;Nwd;. kw;wit Nehpy;

நன்றி.

இப்படிக்கு
உன் அன்புத்தோழன்,
அஅஅஅ

உறைமேல் முகவரி:
ஆஆஆஆ
5,கம்பர் தெரு
மதுரை.

www.tamilthugal.blogspot.com

2. **உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும், விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.**

அனுப்புநர்:
அஅஅஅ
5 கம்பர் தெரு
சிவகங்கை

பெறுநர்:
உணவுப் பாதுகாப்பு ஆணையர் அவர்கள்

உணவுப் பாதுகாப்பு ஆணையம்
சென்னை.

ஐயா:

பொருள்: உணவு விடுதியில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும்
இருந்தது தொடர்பாக.

மதுரை குயில் உணவு விடுதியில் உணவு உண்டேன். உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது. உணவு உண்ட ரசீது இணைத்துள்ளேன். எனவே உணவு விடுதி மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுகின்றேன்.

நன்றி

நாள்:6-3-2021 இப்படிக்கு

இடம்:சிவகங்கை தங்கள் உண்மையுள்ள

அஅஅஅ

உறைமேல்முகவரி
உணவுபாதுகாப்பு ஆணையர் அவர்கள்
உணவுபாதுகாப்பு ஆணையம்
சென்னை

***** உணவு விடுதி – விண்ணப்பம்**

mDg;Geh;:

mmmm
5 fk;gh; njU
rptfq;if

ngWeh;:
czTg; ghJfhg;G Mizah; mth;fs;
czTg; ghJfhg;G Mizak;
nrd;id.

Iah:

nghUs;: czT tpLjpapy; toq;fg;gl;l czT jukw;wjhfTk; tpiy $LjyhfTk;
,Ue;jJ njhlh;ghf.

tzf;fk; ehd; vdJ nrhe;j mYty; fhuzkhf fle;j thuk; nrd;id nrd;Nwd;. nrd;idapy; Fapy; czT tpLjpapy;; czT cz;Nld;. czT jukw;wjhfTk; nfl;Lg;NghdjhfTk; ,Ue;jJ. NkYk; czTg; nghUspd; tpiy $LjyhfTk;
,Ue;jJ. vdNt mt;TzT tpLjp kPJ chpa eltbf;if vLf;f Ntz;Lfpd;Nwd;.
,j;Jld; czT tpLjpapd; urPJ kw;Wk; chpa rhd;WfisAk; ,izj;Js;Nsd;. ed;wp

ehs;:6-3-2020 ,g;gbf;F

,lk;:rptfq;if jq;fs; cz;ikAs;s

mmmm

ciwNky; Kfthp
czTg; ghJfhg;G Mizah; mth;fs;
czTg; ghJfhg;G Mizak;
nrd;id.

3. **நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் எனும் உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.**

அனுப்புநர்:

அஅஅஅ
5 கம்பர் தெரு
சிவகங்கை

பெறுநர்:

ஆசிரியர் அவர்கள்,
தமிழ்ச்சோலைநாளிதழ்
மதுரை.

ஐயா:

பொருள்: பொங்கல் மலரில் கட்டுரை வெளியிட வேண்டுதல்.

உங்கள் நாளிதழில் பொங்கல் மலரில் உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் எனும் என் கட்டுரையை வெளியிட வேண்டுகிறேன்.

நன்றி

நாள்:6-3-2021 இப்படிக்கு
இடம்:சிவகங்கை தங்கள் உண்மையுள்ள
அஅஅஅ

உறைமேல் முகவரி
ஆசிரியர் அவர்கள்
தமிழ்ச்சோலை நாளிதழ்
சென்னை.

*** **nghq;fy; ehspjo; fbjk;**

mDg;Geh;:

mmmm
5 fk;gh; njU
rptfq;if

ngWeh;:

ஆசிரியர் அவர்கள்,
தமிழ்ச்சோலை நாளிதழ்
மதுரை .

tzf;fk;. jq;fsJ ehspjopy; jkpoh; jpUehs; nghq;fy; tpohitnahl;bg; nghq;fy; kyh; ntspapLfpd;wPh;. mk;kyh; ntw;wp ngw tho;j;Jfpd;Nwd;. coTj; njhopypd; rpwg;G Fwpj;J coTf;Fk; njhopYf;Fk; te;jid nra;Nthk; vDk; fl;Liuiaj; jq;fs; mYtyfj;jpw;F mDg;gpAs;Nsd;. mjidg; nghq;fy; kyhpy; ntspapl md;Gld; Nfl;Lf; nfhs;fpd;Nwd;.

ed;wp

ehs;:6-3-2020 ,g;gbf;F
,lk;:rptfq;if jq;fs; cz;ikAs;s mmmm

ciwNky; Kfthp Mrphpah;
mth;fs; jkpo;r;Nrhiy
ehspjo; nrd;id.

4. **நிகழ்வுகளைத் தொகுத்து அறிக்கை எழுதுக. (புத்தகத்தில் பக்க எண் 179)**

விடை:
சிவகங்கை அரசு உயர்நிலைப் பள்ளியில் மார்ச் எட்டாம் நாளன்று மாலை 4.30 மணியளவில் மகளிர் நாள் விழா கொண்டாடப்பட்டது.
தலைமையாசிரியர் அனைவரையும் வரவேற்றார்.
சிறப்பு விருந்தினர் இதழாளர் கலையரசி சிறப்புரை நிகழ்த்தினார்.
மாணவர் தலைவரின் நன்றியுரையுடன் விழா நிறைவுற்றது.

***

சிவகங்கை அரசு உயர்நிலைப் பள்ளியில் மார்ச் எட்டாம் நாளன்று மாலை 4.30 மணியளவில் மகளிர் நாள் விழா கொண்டாடப்பட்டது.
தலைமையாசிரியர் அனைவரையும் வரவேற்றார்.
சிறப்பு விருந்தினர் இதழாளர் கலையரசி சிறப்புரை நிகழ்த்தினார்.
மாணவர் தலைவர் நன்றியுரை ஆற்றினார்.
விழா நாட்டுப்பண்ணுடன் இனிதே நிறைவுற்றது.

5. **பள்ளித்திடலில் கிடைத்த பணப்பையை உரியவரிடம் ஒப்படைத்ததையும் அதற்குப் பாராட்டுப் பெற்றதையும் பற்றி வெளியூரில் இருக்கும் உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.**

சிவகங்கை
06.03.2021

அன்புள்ள மாமா,

நலம் நலமறிய ஆவல். நேற்று எனது பள்ளித்திடலில் கிடைத்த பணப்பையை உரியவரிடம் ஒப்படைத்தேன். அதற்காக எங்கள் பள்ளித் தலைமை ஆசிரியர் என்னைப் பாராட்டி பரிசு வழங்கினார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புடன்
அஅஅஅ

உறைமேல் முகவரி
ஆஆஆ
5,கம்பர் தெரு,
மதுரை.
.

*** **உறவினருக்குக்கடிதம்**

சிவகங்கை
06.03.2021

அன்புள்ள மாமா,

நலம் நலமறிய ஆவல். நேற்று எனது பள்ளியில் பெற்றோர் ஆசிரியர் கூட்டம் நடைபெற்றது. கூட்டம் முடிந்தவுடன் இருக்கைகளை எனது நண்பர்களுடன் அடுக்கிக் கொண்டிருந்தேன். அப்போது அத்திடலில்

பணப்பை ஒன்று கிடந்தது. அதனைத் தலைமையாசிரியர் மூலம் உரியவரிடம் ஒப்படைத்தேன். அதற்காக எங்கள் பள்ளித் தலைமை ஆசிரியர் என்னைப் பாராட்டி பரிசு வழங்கினார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். பிறர் பொருளுக்கு ஆசைப்படக் கூடாது என்று தாங்கள் கூறிய அறிவுரை என்றும் என் மனதில் நீங்கா இடத்தைப் பெற்றுள்ளது.

நன்றி

அன்புடன்
அஅஅ

உறைமேல் முகவரி
ஆஆஆ
5,கம்பர் தெரு, மதுரை..

**6. உங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன. ஆதனால் இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கு ஏற்படும் இடையூறுகளை எழுதி ஆவண செய்யுமாறு மின்வாரிய அலுவலருக்குக்கூட்டு விண்ணப்பம் எழுதுக.**

அனுப்புநர்:
பொதுமக்கள்
கம்பர் தெரு
சிவகங்கை

பெறுநர்:
பொறியாளர் அவர்கள்
தமிழ்நாடு மின்சார வாரியம்
சிவகங்கை.

ஐயா,

பொருள்: மின்விளக்குப் பழுதுகளைச் சரிசெய்து தர வேண்டுதல்.

சிவகங்கை கம்பர் தெருவில் 1000 பேர் உள்ளனர். எங்கள் பகுதியில் பெரும்பாலான மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன. அதனால் இரவில் சாலையில் நடந்து செல்ல முடியவில்லை.திருடர் பயம் அதிகமாக உள்ளது.. எனவே எங்கள் பகுதியில் உள்ள மின்விளக்குகளைச் சரி செய்ய வேண்டுகிறேன்.

நன்றி

நாள்:6-3-2021
இடம்:சிவகங்கை

இப்படிக்கு
தங்கள் உண்மையுள்ள
பொதுமக்கள்

உறைமேல் முகவரி
பொறியாளர் அவர்கள்
தமிழ்நாடு மின்சார வாரியம்
சிவகங்கை.

***** மின்பொறியாளருக்கு விண்ணப்பம்**

அனுப்புநர்:
பொதுமக்கள்
கம்பர் தெரு
சிவகங்கை

பெறுநர்:

பொறியாளர் அவர்கள்
தமிழ்நாடு மின்சார வாரியம்
சிவகங்கை.

ஐயா,

பொருள்: மின்விளக்குப் பழுதுகளைச் சரிசெய்து தர வேண்டுதல்.

சிவகங்கை கம்பர் தெருவில் 1000 பேர் உள்ளனர். எங்கள் பகுதியில் பெரும்பாலான மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன. அதனால் இரவில் சாலையில் நடந்து செல்ல முடியவில்லை.திருடர் பயம் அதிகமாக உள்ளது. சமூக விரோதச் செயல்கள் அதிகரித்துள்ளது. எனவே எங்கள் பகுதியில் உள்ள மின்விளக்குகளைச் சரி செய்ய வேண்டுகிறேன்.

நன்றி

நாள்:6-3-2021 இப்படிக்கு
இடம்:சிவகங்கை தங்கள் உண்மையுள்ள
பொதுமக்கள்

உறைமேல் முகவரி
பொறியாளர் அவர்கள்
தமிழ்நாடு மின்சார வாரியம்
சிவகங்கை.

7 **பள்ளி ஆண்டுவிழா மலருக்காக நீங்கள் நூலகத்தில் படித்த கதை, கட்டுரை, கவிதை நூலுக்கான மதிப்புரை எழுதுக.**

நூல் மதிப்புரை

| | |
|---|---|
| நூல் தலைப்பு | : பரமார்த்த குரு கதைகள் |
| நூல் ஆசிரியர் | : வீரமாமுனிவர் |
| நூலின் மையப்பொருள் | : விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டும் |
| மொழிநடை | : அனைவர்க்கும் புரியும் எளிய மொழிநடை |
| வெளிப்படுத்தும் கருத்து | : மூடநம்பிக்கையை அகற்றுதல் |
| நூலின் கட்டமைப்பு | : குழந்தைகள் விரும்பிப் படிக்க ஏற்ற சிறுகதை வடிவம் |
| நடை | : நகைச்சுவை கலந்த எளிய நடை |
| நூற் சிறப்பு | : எளிமையான சொற்களால் குழந்தைகளுக்கு அறிவூட்டல் |

8. **பள்ளி வளாகத்தில் நடைபெற்ற மரம் நடும் விழாவிற்கு வருகை தந்த சிறப்பு விருந்தினர்க்கும் பெற்றோர்க்கும் பள்ளியின் பசுமைப் பாதுகாப்புப் படை சார்பாக நன்றியுரை வரைக.**

நன்றியுரை

பசுமைப் பாதுகாப்புப் படை சார்பில் எம்பள்ளியில் நடைபெற்ற மரம்நடும் விழாவிற்கு வருகை தந்த சிறப்பு விருந்தினர்க்கு நன்றி.

மரங்களை நாம் வளர்த்தால்மரங்கள் நம்மை வளர்க்கும் என்பதை உணர்த்திய சிறப்பு விருந்தினருக்கு மீண்டும் நன்றி.

விழாவிற்கு வருகை புரிந்த பெற்றோர்க்கு நன்றி.

மரக்கன்றுகள் தந்து உதவிய தொண்டு நிறுவனத்தார்க்கு நன்றி.

விழா சிறப்புற நடக்க உதவிய தலைமையாசிரியர், ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர்கள்

மற்றும் விழா சிறக்க உதவிய அனைவர்க்கும் நன்றி.

**மரம் வளர்ப்போம் மழைபெறுவோம்**
நன்றி வணக்கம்.

9. **உங்கள் பகுதியில் நடைபெறும் நாட்டுநலப்பணித்திட்ட முகாமின் தொடக்க விழாவில் மாணவர்களுக்கு வாழ்த்துரை வழங்க உரை ஒன்று உருவாக்கித் தருக.**

நாட்டு நலப்பணித்திட்ட முகாமில் கலந்து கொண்ட மாணவர்களுக்கு முதற்கண் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.
நாட்டு நலப்பணித்திட்டம் என்பது மாணவர்களை நல்வழிப்படுத்தக் கூடியது.
நாட்டு நலப்பணித்திட்டத்தால் மாணவர்களுக்கு நாட்டுப்பற்று, சமூக அக்கறை, தொண்டுள்ளம் ஆகியன வளர்கின்றன.
தெருவும் ஊரும் சுத்தமாகின்றன.
சமுதாயத்தின் விடிவிளக்குகளாய் மனித
நேயம் மிக்கவர்களாய் மாறுவீர்கள்
என்பதில் ஐயமில்லை.
சிறப்பாகப் பணி செய்ய வாழ்த்துகின்றேன்.

**வினா எண்: 41**

படிவம் நிரப்புதல்

1. **தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் சேர்க்கை விண்ணப்பப் படிவம்**

| | |
|---|---|
| மாணவரின் பெயர் | : அஅஅஅ |
| பாலினம் | : ஆண் |
| பிறந்த தேதி | : 13-10-2005 |
| தேசிய இனம் | : இந்தியன் |
| இரத்தவகை | : A+ |
| உயரம் மற்றும் எடை | : 130 செ.மீ. 45 கிலோ |
| பெற்றோர் பாதுகாவலர் பெயர் | : ஆஆஆஆ |
| வீட்டு முகவரி | : 5 கம்பர் தெரு சிவகங்கை |
| தொலைபேசி அலைபேசி எண் | : 9876543210 |
| இறுதியாகப் படித்த வகுப்பு | : 10 |
| பள்ளி முகவரி | : அ.உ.நி. பள்ளி சிவகங்கை |
| சேர விரும்பும் விளையாட்டு | : கூடைப்பந்து |

சேர்க்கை எண் : மாணவரின் கையெழுத்து
அஅஅஅ
நாள்: பெற்றோர் பாதுகாவலர் கையெழுத்து
இடம் : மதுரை ஆஆஆஆ

2. **வேலை வேண்டி தன்விவரப் படிவம் நிரப்புதல்**

| | |
|---|---|
| பெயர் | : அஅஅஅ |
| பாலினம் | : ஆண் |
| பிறந்த நாள் மற்றும் வயது | : 13-10-2001 , 19 |
| தேசிய இனம் | : இந்தியன் |
| பெற்றோர் பாதுகாவலர் பெயர் | : ஆஆஆஆ |

வீட்டு முகவரி : 5 கம்பர் தெரு சிவகங்கை
தொலைபேசி அலைபேசி எண் : 9876543210
பத்தாம் வகுப்பில் பெற்ற மதிப்பெண் : 460
தாய்மொழி : தமிழ்
பயின்ற மொழிகள் : தமிழ், ஆங்கிலம்

தட்டச்சு : தமிழ், ஆங்கிலம் உயர்நிலை கணினி
: எம்.எஸ்.வேர்டு, டேலி

மேற்கண்ட விவரங்கள் அனைத்தும் உண்மையென உறுதி கூறுகின்றேன். தங்கள் நிறுவனத்தில் எழுத்தர் பணியினைத் தந்தால் என் பணியைச் சிறப்பாகவும் உண்மையாகவும் செய்வேன் என உறுதியளிக்கின்றேன்.

இப்படிக்கு
அஅஅஅ

3. **மேல்நிலை வகுப்பு சேர்க்கை விண்ணப்பப் படிவம்**

மாணவரின் பெயர் : அஅஅஅ
பிறந்த நாள் :13-10-2005
தேசிய இனம் : இந்தியன்
பெற்றோர் பாதுகாவலர் பெயர் : ஆஆஆஆ
வீட்டு முகவரி : 5 கம்பர் தெரு சிவகங்கை
இறுதியாகப் படித்த வகுப்பு : பத்தாம் வகுப்பு
பயின்ற மொழி : தமிழ்
இறுதியாகப் படித்த பள்ளி : அரசு உயர்நிலைப் பள்ளி சிவகங்கை
பத்தாம் வகுப்பில் பெற்ற மதிப்பெண் : 460

| தேர்வின்பெயர் | பதிவுஎண், ஆண்டு | பாடம் | மதிப்பெண் |
|---|---|---|---|
| இடைநிலைப் பொதுத்தேர்வு | 1234567 2019-20 | தமிழ் | 90 |
| | | ஆங்கிலம் | 85 |
| | | கணிதம் | 95 |
| | | அறிவியல் | 95 |
| | | சமூகஅறிவியல் | 95 |
| | | மொத்தம் | 460 |

மாற்றுச்சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளதா? : ஆம்
தாய்மொழி : தமிழ்
சேர விரும்பும் பாடப்பிரிவும் பயிற்று மொழியும் : 11- அ பிரிவு - தமிழ்வழி

மாணவர் கையொப்பம்
அஅஅஅ

4. **நூலக உறுப்பினர் சேர்க்கைப் படிவம்**

சிவகங்கை மாவட்ட நூலக ஆணைக்குழு
மைய கிளை ஊர்ப்புற நூலகம் : சிவகங்கை

உறுப்பினர் சேர்க்கை அட்டை

அட்டை எண்: 43 உறுப்பினர் எண்: 437

| | |
|---|---|
| பெயர் | : அஅஅஅ |
| தந்தை பெயர் | : ஆஆஆஆ |
| பிறந்த நாள் | : 13-10-2005 |
| வயது | : 15 |
| படிப்பு | : பத்தாம் வகுப்பு |
| வீட்டு முகவரி | : 5 கம்பர் தெரு சிவகங்கை |
| அஞ்சல் குறியீட்டு எண்ணுடன் | : 630 360 |
| தொலைபேசி அலைபேசி எண் | : 9876543210 |

நான் சிவகங்கை மாவட்ட கிளை நூலகத்தில் உறுப்பினராகப் பதிவு செய்ய இத்துடன் காப்புத்தொகை ரூ.500 சந்தா தொகை ரூ.100 ஆக மொத்தம் ரூ.600 செலுத்துகிறேன். நூலக நடைமுறை மற்றும் விதிகளுக்குக் கட்டுப்படுகின்றேன் என உறுதியளிக்கின்றேன்.

இடம்: சிவகங்கை தங்கள் உண்மையுள்ள

நாள் 16..3.20201

திரு/திருமதி/செல்வி/செல்வன் அஅஅஅ அவர்களை எனக்கு நன்கு தெரியும் என சான்று அளிக்கிறேன்.

அலுவலக முத்திரை பிணைப்பாளர் கையொப்பம்

(பதவி மற்றும் அலுவலகம்)

## இயல் 1 (மொழி பெயர்ப்பு) வினா எண்:42

01. Language- மொழி

1. Nelson Mondela நெல்சன் மண்டேலா
   ஒருவன் அறிந்த மொழியில் பேசினால் அது அவன் மூளைக்குச் செல்லும்.
2. Rita Mae Brown – ரீட்டா மே பிரௌன்
   கலாச்சாரத்தின் வரைபடம் மொழி. மனிதன் எங்கிருந்து வந்தான் எங்குசெல்கறான் என்பதை உணர்த்தும்

02. The Golden Sun – பொன்நிறமான சூரியன்

1. பொன்நிறமான சூரியன் உதிக்கும்
2. விடியற்காலை அழகாக இருக்கும்
3. வண்ணப் பறவைகள் பாடும்

03. Ilangovan Tenth Standard - இளங்கோவன் பத்தாம் வகுப்பு

1. நான் இளங்கோவன் பத்தாம் வகுப்புப் படிக்கின்றேன்.
2. தமிழ் நாகரிகம் பற்றிக் கூறுகிறேன்.
3. சங்ககால பண்பாடு,நாகரிகம், எல்லா நாடுகளிலும் பரவியுள்ளது.

04.Malar – மலர், Devi – தேவி உரையாடல்

1. மலர்: தேவி, மின்விளக்குகளை அணைத்துவிட்டுச் செல்லவும்.
2. தேவி: ஆம்! மின்சாரத்தைச் சேமிக்க வேண்டும்.
3. மலர்: வீதிகளுக்கு அதிக மின்சாரம் செலவாகிறது.
4. தேவி: எதிர்காலத்தில் ஒளியூட்ட செயற்கை சந்திரன் வரும்.
5. மலர்: செயற்கை சந்திரன் வெளிநாடுகளில் தயாராகிறது.
6. தேவி: நல்ல முயற்சி.

05. ஆங்கிலச் சொற்களைக் கண்டு தமிழில் எழுதுக.

1. Lute Music – யாழிசை 2. Chamber – அறை 3. To Loo Up – எட்டிப் பார்த்தேன்
4. Grand Daughter – பேத்தி 5. Rote – நெட்டுரு 6. Didactic Compilation – நீதி நூல் திரட்டு

06. Therukoothu – தெருக்கூத்து

1. தெருவில் நடத்துவது தெருக்கூத்து.
2. 15 முதல் 20 பேர் கூத்தில் நடிப்பர்.
3. முகப்பூச்சு இருக்கும்.
4. கிராமங்களில் பிரபலமானது.

07. இரண்டு பிச்சைக்காரர்கள்

1. ரோம் நாட்டில் இரண்டு பிச்சைக்காரர்கள் இருந்தனர்.
2. கடவுள் உதவி சிறந்தது என்றான் ஒருவன்:
3. மன்னன் உதவி சிறந்தது என்றான் மற்றொருவன்.
4. மன்னன் மற்றொருவனுக்குக் கொடுத்தத் தங்கக் கட்டி ஒருவனுக்குக் கிடைத்தது.
5. கடவுள் உதவியே பெரிது.

08. Albert Einstein - பள்ளியில் கற்றதை மறந்தாலும் எது நினைவில் நிற்கிறதோ அதுவே கல்வி. – ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்

Spanish Proverb – நாளை என்பது வாரத்தின் பரபரப்பான நாள் -ஸ்பானீஸ் பழமொழி

Aristotle – சோதனையில் தான் வெற்றிக்கான முயற்சி தேவை- அரிஸ்டாட்டில்

Winston Churchill – வெற்றி என்பது இறுதயல்ல: தோல்விமுடிவல்ல: தைரியம் தொடரட்டும் - வின்ஸ்டன் சர்ச்சில்

**வினா எண்: 42 நிற்க அதற்குத் தக**

| இன்சொல் | தீயசொல் |
|---|---|
| பிறர் மனம் மகிழும்<br>அறம் வளரும்<br><br>புகழ் பெருகும்<br><br>நல்ல நண்பர்கள் சேருவர்<br><br>அன்பு நிறையும் | பிறர் மனம் வாடும்<br>அறம் தேயும்<br><br>இகழ் பெருகும்<br><br>நல்ல நண்பர்கள் விலகுவர்<br><br>பகைமை நிறையும் |

இதில் நீங்கள் செல்லும் வழி யாது? உங்கள் நண்பருக்குக் காட்டும் வழி யாது?

1. நாங்கள் இன்சொல் வழியைப் பின்பற்றுவோம்
2. எங்கள் நண்பருக்கும் அவ்வழியையே காட்டுவோம்
3. அவர்களையும் அவ்வழியின்படி நடக்கச் செய்வோம்

2. **இயல் - 2 வானொலி அறிவிப்பு**

ஜல் புயல் சென்னைக்குத் தென்கிழக்கே 150 கி.மீ. தொலைவில் மையம் கொண்டுள்ளது. இன்று இரவு சென்னைக்கும் நெல்லூருக்கும் இடையே கரையைக் கடக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

| | |
|---|---|
| புயலின் போது வெளியேற வேண்டாம் | வெளியேற நேர்ந்தால் ஆரம்ப கட்ட எச்சரிக்கையின் போது வெளியேறவும் |
| தொலைபேசி, மின்சாதனங்கள் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும் | மாடியில் இருப்பதைத் தவிர்த்து தளப் பகுதியிலேயே தங்கவும் |

| | |
|---|---|
| வானொலி அறிவிப்பைக் கேட்டுப் பின்பற்றவும் | காற்று அடிப்பது நின்றாலும் எதிர்திசையிலிருந்து மறுபடி வேகமாக வீச ஆரம்பிக்கும் எனவே காற்றடிப்பது முடிந்துவிட்டதாக நினைக்க வேண்டாம் |
| மீனவர்கள் கடலுக்குச் செல்வதைத் தவிர்க்கவும் | வாகனத்தை ஓட்ட நேர்ந்தால் கடற்கரைப் பகுதிகளுக்குத் தொலைவிலும், மரங்கள் மின்கம்பிப் பாதைகள், நீர் வழிகள் ஆகியவற்றிலிருந்து விலகியும் வாகனத்தின் உள்ளேயே தங்கியிருக்கவும். |

மேற்கண்ட அறிவிப்பைக் கேட்ட நீங்கள் உங்களையும் உங்கள் குடும்பத்தாரையும் காப்பாற்றும் வகையில் செய்யும் செயல்களை வரிசைப்படுத்தி எழுதுக.

1. புயலின்போது வெளியே செல்ல மாட்டேன்.
2. தொலைபேசி, மின்சாதனங்கள் பயன்படுத்துவதைத் தவிர்ப்பேன்.
3. மாடியில் இருப்பதைத் தவிர்த்துத் தளப் பகுதியிலேயே குடும்பத்தினரோடு தங்குவேன்.
4. வானொலி அறிவிப்பைக் கேட்டுப் பின்பற்றுவேன்.

3. **இயல் - 3**

தம்பி உனக்குப் பிடிச்ச காய் சொல்லு - கேரட்
பிடிச்ச பழம் - ஆப்பிள்
பிடிச்ச காலை உணவு - நூடுல்ஸ்
மத்தியானத்துக்கு - ப்ரைடு ரைஸ்
இரவுக்கு - பீட்சா அல்லது பாஸ்தா

இது ஏதோ ஆங்கிலப் பட்த்தின் வசனம் அல்ல, சரியா சாப்பிட மாட்டேங்கிறான் டாக்டர் என்று என்னிடம் அழைத்துவரப்பட்ட ஒரு சிறுவனுடனான என் உரையாடல். ஒட்டுமொத்த இளைய தலைமுறையும் பாரம்பரிய உணவை விட்டுவிட்டு வேகமாக விலகிச் சென்றது எப்படி? இட்லியும், சாம்பார் சாதமும், கத்திரிக்காய் பொரியலும் இனி காணாமல் போய்விடுமா? அதிர்ச்சியான பதில் ஆம். காணாமல் போய்விடும். உங்கள் குழந்தைகள் ஆடு, மாடுகளைத் தவிர மனு'ங்ககூட கீரையைச் சாப்பிடுவாங்களா மம்மி? என எதிர்காலத்தில் கேட்கக்கூடும். மருத்துவர் கு.சிவராமனின் இக்கருத்திற்குச் சமூக அக்கறையுடனான உங்கள் பதில் என்னவாக இருக்கும்.

1. நாகரிகம் கருதி நம் பாரம்பரிய உணவுகளைத் தவிர்த்தல் கூடாது.
2. நம் நாட்டிற்குப் புழுங்கல் அரிசியே ஏற்றது.
3. பாரம்பரிய உணவுகளைத் தினமும் உணவாக உட்கொள்ள வேண்டும்.
4. பாரம்பரிய உணவு மிகுந்த சக்தியைக் கொடுக்கும்.
5. பாரம்பரிய உணவு பற்றி மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

**4. இயல்:4**

தொலைக்காட்சி நிகழ்வைப் பார்த்துக் கொண்டிருந்த தம்பி, திறன் பேசியில் விளையாடிக் கொண்டிருக்கும் தங்கை, காணொலி விளையாட்டுக்களில் மூழ்கியிருக்கும் தோழன், எப்போதும் சமூக ஊடகங்களில் இயங்கியபடி இருக்கும் தோழி, இவர்கள் எந்நேரமும் நடப்புலகில் இருக்காமல் கற்பனை உலகில் மிதப்பவர்களாக இருக்கிறார்கள். இவர்களை நெறிப்படுத்தி நடைமுறை உலகில் செயல்பட வைக்க நீங்கள் செய்யும் முயற்சிகளைப் பட்டியலிடுக.

**விடை:** 1. குழுமனப்பான்மை வளர்கவும் விளையாட்டுகளை விளையாடச் செய்யலாம்.
2. கோழி பம்பரம் விளையாடச் செய்யலாம்.
3. பாண்டி பல்லாங்குழி விளையாடச் செய்யலாம்.
4. சொல்விளையாட்டுகள் விளையாடலாம்.

5. இயல் - 5

| **பள்ளியில் நான்** | **வீட்டில் நான்** |
|---|---|
| நேரத்தைச் சரியாகக் கடைபிடிப்பேன் | வீட்டுப் பணிகளைப் பகிர்ந்து செய்வேன் |
| உடன் பயிலும் மாணவரின் திறமையைப் பாராட்டுவேன் | வீட்டில் பெற்றோர் சொல்படி நடப்பேன் |
| ஆசிரியரிடம் பணிவுடன் நடந்து கொள்வேன் | வீட்டுப் பாடங்களை உடனுக்குடன் முடிப்பேன் |
| ஒழுக்கத்துக்கும் கல்விக்கும் முக்கியத்துவம் கொடுப்பேன் | உறவினர்களுடன் நன்றாக நடந்து கொள்வேன் |

6. **இயல் - 6**

அரசின் பொங்கல் விழாவில் சிற்றூர்க் கலைகளைக் காட்சியாக்கியிருக்கிறார்கள். ஒருபுறம் திரைகட்டித் தோற்பாவைக் கூத்து நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இன்னொருபுறம் பொம்மலாட்டம் ஆடிக்கொண்டிருந்தனர். சற்று நடந்தால் தாரை தப்பட்டை முழங்க ஒயிலாட்டம் ஆடியவாறு மண்ணின் மக்கள். இக்கலைகளை நீங்கள் நண்பர்களுடன் பார்த்தவாறும் சுவைத்தவாறும் செல்கிறீர்கள்.
இக்கலைகளைப் பாதுகாக்கவும் வளர்க்கவும் மேன்மேலும் பரவலாக்கவும் நீங்கள் செய்யவிருப்பனவற்றை வரிசைப்படுத்துக.

1. பிறந்தநாள் விழாவில் மயிலாட்டம் முதலான கலைகளை நிகழ்த்த முனைவேன்.
2. எங்கள் குடும்ப விழாக்களில் பொம்மலாட்டம் நிகழ்த்த ஏற்பாடு செய்வேன்.
3. கோயில் திருவிழாக்களில் கரகாட்டம், காவடியாட்டம் நடத்த ஏற்பாடு செய்வேன்.
4. விடுமுறைக் காலத்தில் தெருக்கூத்து நடத்த ஏற்பாடு செய்வேன்.
5. விளையாட்டு விழாக்களில் புலியாட்டம் நடத்த ஏற்பாடு செய்வேன்.
6. திருமண விழாக்களில் பொய்க்கால் குதிரை ஆட்டம் நடத்த ஏற்பாடு செய்வேன்.

7. **இயல் - 7**

அரசால் நிறுவப்படும் கட்டடங்களிலும் சிலைகளிலும் நிறுவியவர் பெயர், நிறுவப்பட்ட காலம், நோக்கம் சார்ந்த பிற செய்திகளும் தாங்கிய கல்வெட்டுக்களைப் பார்த்து இருப்பீர்கள். இவை நமது இன்றைய வரலாற்றைப் புலப்படுத்துபவை. அதுபோலவே கோவில்களிலும் வரலாற்றுச் சின்னங்களிலும் கட்டியவர்கள் பெயர்களும் வரலாறும் இடம் பெற்றிருக்கும். அவை நம் பழம்பெருமையையும் வரலாற்றையும் அறியச் செய்யும் அரிய ஆவணங்கள் என்று அறிவீர்கள்தானே? இவற்றைப் பாதுகாக்கவும் உங்களால் இயன்றசெயல்கள் யாவை?

1. கல்வெட்டுக்களின் வழி அறியலாகும் செய்திகளை என் நண்பர்களுக்குக் கூறுவேன்.
2. அவற்றின் மதிப்பைக் குறைக்கும்படி எதுவும் கூற அனுமதிக்க மாட்டேன்.
3. கல்வெட்டுக்களைக் குறித்து அவர்களைப் பெருமிதம் அடையச் செய்வேன்.
4. அவை வரலாற்றுச் சாசனம் என்பதை உணரச் செய்வேன்.
5. கல்வெட்டு மன்னர்களைப் பின்பற்றி நாட்டுப்பற்றை வளர்க்கலாம் என்பதை உணர்த்துவேன்.
6. கல்வெட்டு கூறும் இலக்கிய கலை வரலாற்றை மக்களை அறியச் செய்வேன்.

8. **இயல் - 8**

நாம் எப்போதும் ஒரே மனநிலையில் இருப்பதில்லை. நம்மைச் சுற்றி நிகழும் செயல்களால் நாம் அலைக்கழிக்கப்படுகிறோம். உடன்பயில்பவருடனோ, உடன் பிறந்தவருடனோ எதிர்பாராமல் சச்சரவு ஏற்படுகிறது. இந்தச் சமயத்தில் சினம் கொள்ளத் தக்க சொற்களைப் பேசுகிறோம், கேட்கிறோம்,

கைகலப்பில் ஈடுபடுகிறோம், இதுகாறும் கற்ற அறங்கள் நமக்குக் கைகொடுக்க வேண்டாமா? மாணவ நிலையில் நாம் பின்பற்ற வேண்டியப அறங்களும் அதனால் ஏற்படும் நன்மைகளும்.

| நாம் செய்ய வேண்டுவன (அறங்கள்) | அறங்கள் தரும் நன்மைகள் |
|---|---|
| நல்ல சொற்களையே தேர்ந்தெடுத்துப் பேசுதல் | நல்ல நண்பர்களைப் பெறலாம், எதிரியையும் நண்பராக்கலாம் |
| ஒருவரைப் பற்றி இன்னொருவரிடம் மாற்றிப் பேசாதிருத்தல் | தேவையற்ற சண்டைகள், பகையைத் தவிர்த்து அனைவருடனும் அன்பாய் வாழலாம் |
| பழிவாங்கும் எண்ணத்தைக் கைவிடல் | மன அமைதி பெறலாம், நண்பரிடத்திலும் உறவினரிடத்திலும் நற்பெயர் பெறலாம் |
| பொய் தவிர்த்து உண்மை பேசுதல் | உண்மை நம் வாழ்வை உயர்த்தும் அச்சமின்றி ̇வாழலாம் |

9. **இயல் - 9**

ஒவ்வொரு சூழலிலும் ஒருவருக்கொருவர் உதவி செய்தபடி இருக்கிறார்கள். உதவி பெற்றபடியும் இருக்கிறார்கள். சில உதவிகள் அவர்கள் மீதுள்ள அன்பினால் செய்கிறோம். சில உதவிகள் இரக்கத்தால் செய்கிறோம். தொடர்வண்டியில் பாட்டுப் பாடிவரும் ஒருவருக்கு நம்மையறியாமல் பிச்சை போடுகிறோம். தொல்லை வேண்டாம் என்று கருதி வேண்டாவென்ற வெறுப்போடு சில இடங்களில் உதவி செய்கிறோம்.

நீங்கள் செய்த, பார்த்த உதவிகளால் எய்திய மனநிலை.

| **உதவி** | **மனநிலை** |
|---|---|
| வகுப்பறையில் எழுதுகோல் கொடுத்து உதவிய போது | இக்கட்டான சூழலில் செய்த உதவியால் எனக்கு மனநிறைவு, அவருக்கு மகிழ்ச்சி |
| உறவினருக்கு என் அம்மா பணம் கொடுத்து உதவிய போது | கல்லூரிப் படிப்பைத் தொடர முடிந்ததால் உறவினருக்கு ஏற்பட்ட நன்றியுணர்வு |
| பேருந்தில் பயணம் செய்த போது உடன் பயணம் | மனநிறைவும் அவரது முகத்தில் அமைதியும் |
| செய்த முதியவருக்குப் பயணச்சீட்டு எடுத்துக் | மகிழ்ச்சியும் என்னை மகிழச் செய்தது |
| ஒருவேளை உணவு வழங்கியபோது | பசிப்பிணி தீர்த்த மகிழ்ச்சி ஏற்பட்டது. |

**வினா எண்:40**



அன்று...
மாட்டை அடக்க
மூக்கணாங் கயிறு.
இன்று...
மனிதனை
அடக்கியது திறன்பேசி!



தப்பாமல் ஆடுவது
தப்பாட்டம்,
மயிலாய் ஆடுவது
மயிலாட்டம்
ஒயிலாய் ஆடுவது
ஒயிலாட்டம்
இதனால் அனைவருக்கும்
கொண்டாட்டம்



நமக்கு உயிர்
காற்று
காற்றுக்கு வரம்
மரம்
மரத்தை வெட்டினால்
வளி இல்லை
வலி உண்டு
மரம் வளர்ப்போம்.




இருநாட்டுப் போர்

ஈட்டியுடன் வீரர்கள்

உற்சாக நடையுடன்

நாட்டைக் காக்க

நால்வகைப் படைகள்




உலக உயிர்களுக்கு

உணவு படைக்க,

உற்சாக நடையுடன்

புறப்பட்டார் உழவர்

அரை மனிதனாய்....



வலக்கை கொடுப்பதை

இடக்கை அறியாது

அந்தக்காலம்!

அது அந்தக்காலம்!

புறமுதுகு என்றாலும்

புகைப்படம் எடுப்பது

இந்தக்காலம்!

இது இந்தக்காலம்!!



படி

நூலை படி

நல்ல தமிழ்

நூலைப்படி,


திற

அறிவைத் திற

அளவற்ற

ஆற்றல் பெற

அறிவைத் திற



நமக்கு உயிர்

காற்று

காற்றுக்கு வரம்

மரம்

மரத்தை வெட்டினால்

வளி இல்லை

வலி உண்டு

மரம் வளர்ப்போம்.




பசி வந்திட

பத்தும் பறக்கும்

இங்கு

பகிர்ந்து உண்ண

பண்பு பிறக்கும்.



வறுமை கைநீட்ட

வளமை வழங்கிட

வலிமை தடுத்திட

கொடுப்பவர் சிலர்

கொள்பவர் பலர்

தடுப்பவர் யாரோ?



அடுத்தவன் துன்பம்

அதில்

உனக்கென்ன இன்பம்?

உதவாக் கைகள்

இல்லை! இல்லை!

உதவாக்கரைகள்.

## பகுதி - 5 வினாஎண்: 43 முதல் 45 உரைநடை

### நெடுவினாக்கள்

1. தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.

தமிழ்மொழி,

- சொல்வளத்தில் சிறந்தது.
- திராவிட மொழிகளில் சிறந்தது.
- தனிச்சிறப்பு உடையது.
- நாட்டின் வளத்தை அறியலாம்.
- நாகரீகத்தை அறியலாம்..
- புதிய தமிழ்ச்சொல்லாக்கம் தமிழ்மொழியை அழியாமல் பாதுகாக்கிறது.
-

*** **தமிழின் சொல் வளம்:**

கால வெள்ளத்தில் கரைந்து போன மொழிகளுக்கு இடையில் நீந்தித் தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளது தமிழ். தமிழ் சொல்வளத்தைப் பல துறைகளிலும் காணலாம்.

பயிர்வகைச் சொற்கள்:

தாவரத்தின் அடிப்பகுதியை தாள், தண்டு, கோல், தூறு, தட்டு, கழை, கழி, அடி எனப் பல சொற்களால் வழங்குகிறோம்.

**இலை கொழுந்துகளின் பெயர்கள்:**

காய்ந்த இலையைச் சருக எனவும் காய்ந்த தாளை தோகை, சண்டு எனவும் வழங்குகிறோம். நுனிப்பகுதியை துளிர் தளிா முறி கொழுந்து குருத்து கொழுந்தாடை எனவும் வழங்குகிறோம்.

**புதியசொல் ஆக்கத்திற்கான தேவை:**

இன்றைய உலகில் அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சியின் பயன்பாட்டைத தவிர்க்க இயலாது. அதற்கு இணையான தமிழ்ச் சொற்களைக் கண்டறிந்து புதிய சொல்லாக்கத்தை உருவாக்கிட வேண்டும். இத்தகைய புதிய தமிழ்ச் சொல்லாக்கம் தமிழ் மொழியை அழியாமல் பாதுகாக்கிறது.

**சொல்வளத்தின் பயன்கள்**:

மொழியே ஒரு நாட்டின் நாகரிகத்தை அறியச் செய்கிறது. ஒரு நாட்டின் வளத்தைச் சார்ந்தே மொழியின் வளம் அமையும் எனக் கூறி எனது உரையை நிறைவு செய்கிறேன்.

**2. ஒரு பக்க அளவில் உரையாடல் எழுதுக. (புத்தகம் பக்க எண்:20 நெடுவினா 3)**

**கமலா:** வணக்கம் இலக்கியா கனடாவில் இருந்து எப்ப வந்த?
**இலக்கியா**: லாஸ்ட் வீக் வந்தோம் ஹவ் ஆர் யூ

**கமலா:** நானும் நலம் ஆமா, போன மாதம் தொலைபேசியில் பேசும் போது தமிழ் பற்றிக் கேட்டாயே! என்ன தெரியவேண்டும் உனக்கு?

**இலக்கியா**: எப்ப உன்னிடம் பேசினாலும் தமிழ் இலக்கிய நூலைப் படித்துக் கொண்டிருப்பதாகக் கூறுவாயே, அப்படி என்ன இருக்கிறது அதில்?

**கமலா:** இலக்கியத்திற்கு பெயர்பெற்றவை தமிழ் இலக்கியங்களே.எத்தனை எத்தனை சுவை தெரியுமா?

**இலக்கியா**: சுவையா? கேட்கவே இனிக்கிறதே? விளக்கமாகச் சொல்.

**கமலா**: தமிழ் இலக்கியங்களில் உரைநடைக்கென்று தனித்த இடம் உண்டு. படிக்க படிக்க நமக்கும் எழுதவேண்டும் என்ற எண்ணம் தோன்றும். திருவிக, ம.பொ.சி. ரா.பி. சேதுபிள்ளை போன்ற சாதனையாளர்களின் நூல்களைச் சுவைத்தால் தெரியும் அதன் இலக்கிய இன்பம்.

**இலக்கியா**: அப்படியா? ..நம் தமிழ் மொழியின் இலக்கியக் கூறுகளில் இத்தனை சிறப்பு இருக்கா? வெளிநாட்டிற்குச் சென்ற நான் தமிழைப் பேசுவதோடு நிறுத்தி விட்டேன். எனக்கும் இலக்கிய நூல்களைத் தா! நானும் படிக்க வேண்டும்.
**கமலா:** மிக்க மகிழ்ச்சி! தருகிறேன்.

3. **நாட்டு விழாக்கள் - விடுதலைப் போராட்ட வரலாறு —நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் "மாணவப்பருவமும் நாட்டுப்பற்றும்"** என்ற தலைப்பில் மேடை உரை எழுதுக.

தாயே! தமிழே! வணக்கம்

மாணவர் பருவமும் நாட்டுப்பற்றும் என்ற தலைப்பில் பேசவந்துள்ளேன்

- இன்றைய மாணவர்களே நாளைய தலைவர்கள்
- நம் நாட்டின் தேசிய விழாக்கள் மிகவும் இன்றியமையாதன.
- நாடு நமக்கு என்ன செய்தது என்பதைவிட,
- நாட்டிற்காக நாம் என்ன செய்தோம் என எண்ணிப் பார்க்க வேண்டும்.
- நம் நாட்டுப் பொருட்களை வாங்க வேண்டும்
- விடுதலைப் போராட்ட வீரர்களை நினைத்துப் போற்ற வேண்டும்
- மாணவர்கள் நாட்டு முன்னேற்றத்தில் பங்குகொள்ள வேண்டும்.
- நாட்டின் முன்னேற்றம் என்பது மாணவர்களின் கைகளில் உள்ளது.
- இளமைப் பருவத்தை முறையான வழியில் பயனுள்ள வகையில் செலவு செய்தல் வேண்டும்.
- வாழ்க தமிழ்த் திருநாடு வளர்க தொண்டு.
-

4. **ஜெயகாந்தன் நினைவுச் சிறப்பிதழை, வார இதழ் ஒன்று வெளியிட இருக்கிறது் அதற்கான ஒரு சுவரொட்டியை வடிவமைத்து அளிக்க.**

நினைவுச் சிறப்பிதழ்
வெளியீட்டு விழா
அனைவரும் வருக! வருக!

| | | |
|---|---|---|
| நாள் | : | 13.08.2021 |
| நேரம் | : | காலை 10.00 மணி |
| இடம் | : | கம்பன் சபை - சிவகங்கை. |
| வெளியிடுபவர் | : | முனைவர். பாரதி |

முதல் பிரதியைப் பெறுபவர்

திருமிகு.தமிழன்

தலைவர்

மருதம் நாளிதழ்

இவன்,
நிர்வாகத்தினர்
மருதம்இதழ்
சிவகங்கை.

7. சங்க இலக்கியங்களில் போற்றப்பட்ட அறங்களில் உம்மைக் கவர்ந்த இரண்டு அறங்களைக் குறிப்பிட்டு, அவை நடைமுறை வாழ்வில் பொருந்துவதை விளக்குக.

**கொடை:**

- ☐ வீரம், கொடை தமிழர்களால் விரும்பப்பட்டது.
- ☐ கொடையின் சிறப்பால் வள்ளல் எழுவர் போற்றப்படுகின்றனர்.
- ☐ புலவர்களும் கொடை கொடுத்து மகிழ்ந்திருந்தனர்

**உதவி:**

- ☐ பிறருக்கு உதவுதல் என்பதைச் சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன.
- ☐ உண்மையான செல்வம் என்பது பிறர் துன்பம் தீர்ப்பது தான் என்கிறார் நல்வேட்டனர்.
- ☐ மனிதர்கள் ஒருவருக்கொருவர் உதவிக்கொள்ள வேண்டும்.
- ☐ வாய்மையைச் சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் பேசுகின்றன.
- ☐ சங்க இலக்கிய அறங்கள் இயல்பான முதல் தரமான அறங்கள் எனலாம்.

**வினாஎண் : 43**

## பா நயம் பாராட்டல்

1. மலர்ந்தும் மலராத பாதிமலர்போல
வளரும் விழி வண்ணமே — வந்து
விடிந்தும் விடியாத காலைப் பொழுதாக
விளைந்த கலை அன்னமே
நதியில் விளையாடி கொடியில் தலைசீவி
நடந்த இளந்தென்றலே — வளர்
பொதிகை மலர் தோன்றி மதுரை நகர் கண்டு
பொலிந்த தமிழ் மன்றமே!

- கவிஞர் கண்ணதாசனின் இப்பாடலில் தவழும் காற்றையும் கவிதை நயத்தையும் பாராட்டி உரை செய்க.

**திரண்ட கருத்து :**

கவிஞர் கண்ணதாசன் இப்பாடலில் தவழும் காற்றாக 'இளந்தென்றல்' காற்றைத் தனது பாடலில் குறிப்பிடுகிறார். தென்றல் காற்று மிகவும் இனிமையானது

**மோனைநயம் :**

முதலெழுத்துக்கள் ஒன்றி வருவது மோனைநயம் ஆகும்.

மலர்ந்தும் - மலராத

நதியில் - நடந்த

**எதுகைநயம் :**

இரண்டாம் எழுத்துக்கள் ஒன்றிவரத் தொடுப்பது எதுகை நயம் ஆகும்.

மலர்ந்தும் - மலராத

விடிந்தும் - விடியாத

**முரண்தொடை :**

எதிர்எதிரான சொற்கள் வருவதால் முரண் தொடை அமைந்துள்ளது.

மலர்ந்தும் மலராத

விடிந்தும் விடியாத

**இயைபுநயம் :**

கவிஞர் இப்பாடலில் இயைபுநயம் தோன்றப் பாடியுள்ளார்.

வண்ண<u>மே</u> - அன்ன<u>மே</u> - மன்ற<u>மே</u>

**அணிநயம் :**

இப்பாடல் உவமை அணியில் இடம்பெற்றுள்ளது.

**பொருள் நயம் :**

கவிஞர் இப்பாடலைப் பொருள்நயம் தோன்றப் பாடியுள்ளார்.

2. கவிஞன் யானோர் காலக்கணிதம்
கருப்படு பொருளை உருப்பட வைப்பேன் புவியில்
நானோர் புகழுடைத் தெய்வம் பொன்னினும்
விலைமிகு பொருளென் செல்வம்
இவைசரியென்றால் இயல்புவதென் தொழில்
இவை தவறாயின் எதிர்ப்பதென் வேலை
ஆக்கல் அளித்தல் அழித்தல் இம்மூன்றும்
அவனும் யானுமே அறிந்தவை அறிக!

இக்கவிதையில் பொதிந்துள்ள நயங்களைப் பாராட்டி எழுதுக.

**திரண்ட கருத்து :**

கவிஞனாகிய நான் ஓர் காலக்கணிதம் பொருள் நிறைந்த பாடல்களைப் படைப்பேன்.

**மோனை நயம்** :

முதலெழுத்துக்கள் ஒன்றி வருவது மோனைநயம் ஆகும்.

க̲விஞன்- கா̲லக்கணிதம் - க̲ருப்படுபொருள்

**எதுகை நயம் :**

இரண்டாம் எழுத்து ஒன்றி வரத்தொடுப்பது எதுகை நயமாகும்.

கரு̲ப்படு
பொரு̲ளை
உரு̲ப்பட

**முரண்தொடை :**

எதிர் எதிரான சொற்கள் வருவதால் இப்பாடல் முரண்தொடையில் அமைந்துள்ளது. சரி - தவறு ஆக்கல் - அழித்தல்

**அணி நயம் :**

கவிஞர் இப்பாடலை உயர்வுபடப் பாடியமையால் இப்பாடலில் உயர்வு நவிற்சி அணி பயின்று வந்துள்ளது. **பொருள் நயம்** :

கவிஞர் இப்பாடலைப் பொருள் நயம் தோன்றப் பாடியுள்ளார்.

3. தேனினும் இனிய நற்செந்தமிழ்மொழியே
தென்னாடு விளங்குறத் திகழுந்தென் மொழியே
ஊனினும் ஒளிர்வுறும் ஒண்டமிழ் மொழியே
உணர்வினுக்கு குணர்வதாய் ஒளிர்தமிழ் மொழியே
வானினும் ஓங்கிய வண்டமிழ் மொழியே
மாந்தருக் கிருகணா வயங்கு நன்மொழியே
தானனி சிறப்புறுந் தனித்தமிழ் மொழியே
தழைத்தினி தோங்குவாய் தண்டமிழ் மொழியே!

**திரண்ட கருத்து:**

தமிழ்மொழியானது தேனைவிட இனிமையானது. தென்னாடு புகழக்கூடிய மொழியாகும். தமிழ்மொழியின் சிறப்பு கூறப்பட்டுள்ளது.

**மோனை நயம்:**

ஊ̲னினும் - உ̲ணர்வினும்
த̲ழைத்தினி - த̲ண்டமிழ்

**எதுகை நயம்:**

இரண்டாம் எழுத்துக்கள் ஒன்றி வருவது எதுகை நயமாகும்.

தேனினும் - ஊனினும்

**அணிநயம்**:

இப்பாடலில் உவமையணி இடம் பெற்றுள்ளது.

**இயைபு நயம்:**

இப்பாடலில் 'மொழியே' என்னும் சொல் ஒவ்வொரு அடியின் இறுதியிலும் அமைந்து உள்ளது.

**பொருள் நயம்:**

கவிஞர் இப்பாடலில் பொருள் நயம் தோன்றப் பாடியுள்ளார்.

5. கத்துகடல் சூழ்நாகைக் காத்தான்தன் சத்திரத்தில்
அத்தமிக்கும் போது அரிசிவரும் - குத்தி உலையிலிட
ஊரடங்கும் ஓர் அகப்பை அன்னம்
இலையிலிட வெள்ளி எழும்.

**திரண்ட கருத்து :**

உணவுக்காக ஒரு சத்திரத்தில் மக்கள் காத்திருக்கும் நிலையை இப்பாடல் உணர்த்துகிறது.

**மோனை நயம் :**

முதலெழுத்துக்கள் ஒன்றி வருவது மோனை நயமாகும்

அத்தமிக்கும்

அரிசி வரும்

**எதுகை நயம்** :

இரண்டாம் எழுத்துக்கள் ஒன்றி வருவது எதுகை நயமாகும்.

கத்து கடல் - அத்தமிக்கும்

**அணிநயம் :**

புலவர் இப்பாடலில் சொற்களை அழகுபடுத்த "இரட்டுற மொழிதல் அணி"யை அமைத்துள்ளார்.

**பொருள் நயம்** :

கவிஞர் இப்பாடலை பொருள் நயம் தோன்றப் பாடியுள்ளார்

**சொல் நயம்** :காளமேகப்புலவர் இப்பாடலில் தரமான சொற்களை அமைத்து சொல் நயம் தோன்றப் பாடியுள்ளார்.

5. நிலாவையும் வானத்து மீனையும் காற்றையும்
குலாவும் அமுதக் குழம்பைக் குடித்தொரு
கோல வெறிபடைத்தோம்
ஓட்டி மகிழ்ந்திடுவோம்

பலாவின் கனிச்சுளை வண்டியில் ஓர்வண்டு

பாடுவதும் வியப்போ?

**திரண்டகருத்து :**

வானத்தில் நிலா, விண்மீன், காற்று ஆகியவற்றைக் கவிஞர் வியந்து பாடுகிறார்.

**மோனை நயம் :**

முதலெழுத்துக்கள் ஒன்றி வருவது மோனை நயமாகும் :

<u>கு</u>லாவும் - <u>கு</u>ழம்பு

<u>ப</u>லா - <u>பா</u>டுவது

**எதுகைநயம் :**

இரண்டாவது எழுத்துக்கள் ஒன்றி வருவது எதுகை நயமாகும்.

<u>நிலா</u> - <u>குலா</u>

<u>உலா</u> - <u>பலா</u>

**பொருள்நயம் :**

கவிஞர் இப்பாடலை பொருள் நயம் தோன்றப் பாடியுள்ளார்.

**அணிநயம் :**

புலவர் இப்பாடலில் சொற்களை அழகுபடுத்த உருவக அணியை அமைத்துள்ளார்.

**சுவைநயம் :**

இப்பாடலில் பெருமிதச்சுவை பயின்று வந்துள்ளது.

**விரிவானம் வினா எண் : 44**

1) **அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப் பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க**

**முன்னுரை:**

கிராமத்து மனிதர்கள் காட்டும் விருந்தோம்பல் பற்றிய கதை.

**அன்னமய்யா:**

1. ஏழை விவசாயி.
2. பசித்தவருக்கு உணவு தருபவர்.
3. முன் பின் தெரியாத இளைஞனுக்கு உணவு அளித்தவர்.
4. கலயத்தில் இருந்த கஞ்சியை இளைஞனுக்குக் கொடுத்தார்.

**பெயர்ப்பொருத்தம்:**

பசியாறிய இளைஞன்அவருடைய பெயரைச் சொல்லி மகிழ்ந்தான்.

**முடிவுரை:**

தமிழர் பண்பாட்டை இன்றும் காத்து வருபவர்கள் கிராமத்து மக்களே!

*** **முன்னுரை**:

தமிழக பண்பாடுகளுள் சிறந்தது விருந்தோம்பல். கிராமத்து மனிதர்கள் காட்டும் விருந்தோம்பல் பற்றிய கதையை கி.இராஜநாராயணன் நம்மிடையே பகிர்ந்துள்ள விதத்தைப் பார்ப்போம்.

**அன்னமய்யா**:

'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்பதற்கிணங்க வாழ்ந்து காட்டியவர் அன்னமய்யா. வயலில் வேலைபார்த்துக் கொண்டிருந்த அன்னமய்யா களைத்துப் போன ஒருவரைச் சாலையில் கண்டார். அவருக்கு உதவி தேவை என்பதை அறிந்து அழைத்து வந்தார்.

**அன்னமய்யாவின் செயல்**:

சாலையில் களைத்து வந்த இளைஞன் அன்னமய்யாவிடம் கொஞ்சம் குடிக்கத் தண்ணீர் கிடைக்குமா? எனக் கேட்டார். அன்னமய்யா 'இதோ நீச்சத் தண்ணீ எடுத்து வருகிறேன்.'எனக் கூறி தேங்காய் சிரட்டையில் ஊற்றித் தந்தார்.அத்துடன் தான் வைத்திருந்த துவையலையும் கொடுத்தார்.

**பெயர்ப் பொருத்தம்**:

கஞ்சியைக் குடித்த இளைஞன் அன்னமய்யாவின் பெயரைக் கேட்டான். அன்னமய்யா தன் பெயரைக்கூற வழிப்போக்கன் சிரித்தபடியே பெயருக்கேற்ற மனசு என்பதை தன் மனதிற்குள் சொல்லிக் கொண்டான்.

**முடிவுரை:**

பெயருக்கு ஏற்ற பெருந்தகையாளர் அன்னமய்யா. தமிழர் பண்பாட்டை இன்றும் காத்து வருபவர்கள் கிராமத்து மக்களே! **தர்மம் தலைகாக்கும்!**

2) **மங்கையராய்ப் பிறப்பதற்கே என்னும் தலைப்பில் இடம்பெற்றுள்ள பெண் சாதனையாளர்களைப் பற்றிக் குறிப்பு வரைக.**

**முன்னுரை:**

சாதனைப் பெண்கள் பலர். அவர்களுள் சிலரை இங்கு காண்போம்.

**சாதனைப் பெண்கள்:**

- ஐந்தாம் வகுப்பு வரை படித்த எம்.எஸ்.சுப்புலெட்சுமி. இசைத்துறையில் சிறந்து விளங்கியவர்.
- ஏழு வயதில் பரதம் கற்று அரங்கேற்றம் செய்தவர் பாலசரஸ்வதி.
- பெண்சிசு கொலைகளைக் கண்டித்து நூல் எழுதி சாதனைப்படைத்தவர் இராஜம் கிருஷ்ணன்.
- 'களஞ்சியம்' எனும் பெயரில் குழு அமைத்து பெண்களின் முன்னேற்றத்திற்குப் பாடுபட்டவர் மதுரை சின்னப்பிள்ளை.

**முடிவுரை:**

- சாதனைப்பெண்களின் புகழ் ஓங்குக! பெண்கள் நாட்டின் கண்கள்.

*** **முன்னுரை:**

"மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா" என்பதற்கிணங்க சாதனைப் படைத்த பெண்கள் பலர். அவர்களுள் சிலரைப் பற்றிக் காண்போம்.

**சாதனைப் பெண்கள்:**

1. எம்.எஸ்.சுப்புலெட்சுமி.
2. பாலசரஸ்வதி
3. இராஜம் கிருஷ்ணன்
4. கிருஷ்ணம்மாள்.
5. மதுரை சின்னப்பிள்ளை

**எம்.எஸ்.சுப்புலெட்சுமி:**

ஐந்தாம் வகுப்பு வரை படித்த எம்.எஸ்.சுப்புலெட்சுமி. இசைத்துறையில் சிறந்து விளங்கியவர். தம் இசைத்திறனால் அனைவரையும் கவர்ந்தவர். மகசேசே விருது பெற்றவர்.

**பாலசரஸ்வதி:**

ஏழு வயதில் பரதம் கற்று அரங்கேற்றம் செய்தவர் பாலசரஸ்வதி. பரதநாட்டியம் ஆன்மீக பட்டறிவை வளர்க்கும் என்றார். "ஜனகணமன" பாடலுக்கு ஆடியவர். சாகித்ய அகாதெமி விருது பெற்றவர்.

**இராஜம் கிருஷ்ணன்:**

பெண்சிசு கொலைகளைக் கண்டித்து நூல் எழுதி சாதனைப் படைத்தவர். சமூகச் சிக்கல்கள் இவரது கதைக்கரு. புதினத்தைப் புதிய பார்வையில் பார்த்தவர். தாமரைத்திரு விருது பெற்றவர்.

**கிருஷ்ணம்மாள்:**

காந்தியச் சிந்தனையால் கவரப்பட்டவர். இந்திய விடுதலைக்குப் பின 'பூதான' இயக்கத்தில் இணைந்தவர்.

**மதுரை சின்னப்பிள்ளை:**

களஞ்சியம்' எனும் பெயரில் குழு அமைத்து பெண்களின் முன்னேற்றத்திற்குப் பாடுபட்டவர் மதுரை சின்னப்பிள்ளை. படிக்காத இவர் மாற்றுத் திறனாளிகளுக்கு உதவியவர். தாமரைத்திரு விருது பெற்றவர்

**முடிவுரை:**

பெண்கள் நாட்டின் கண்கள். சாதனைப் பெண்களின் புகழ் ஓங்குக!

3) **இராமானுஜர் மக்களுக்கு உரைத்த திருமந்திர நிகழ்வை எழுதுக.**

**முன்னுரை:**

பூரணரிடம் 18 முறை முயற்சி செய்து திருமந்திரத்தைக் கற்றவர் இராமானுஜர்.

**திருமந்திரம்:**

பூரணர் சீடர்களிடம் மந்திப் பொருளை யாரிடமும் கூறக் கூடாது என்றார்

- பிறரிடம் கூறினால் நரகம் கிட்டும் என்றார்.
- ஆனால் இராமானுஜர் எளிய மக்களுக்கு மந்திரத்தைக் கூறினார்.
- தன் கொள்கையில் உயர்ந்து நின்றார்.

**முடிவுரை:**

- இந்த பரந்த உள்ளம் பூரணரைக் கவர்ந்தது.
- தன் மகனை அவருடன் அனுப்பி வைத்தார்.

*** **முன்னுரை:**

" பன்னிரண்டு ஆண்டுக்கு ஒருமுறை மலர்வது குறிஞ்சி
தலைமுறைக்கு ஒருமுறை மலர்வது மூங்கில்"

அதைப் போல் மலர்ந்த இராமானுசர் வாழ்வில் நிகழ்ந்த நிகழ்வைக் காண்போம்.

**பூரணரைச் சந்தித்தல்:**

இராமானுசரும் கூரேசரும் திருமந்திரம் வேண்டி பூரணரின் இல்லத்திற்குச் சென்றனா். பூரணரிடம் திருமந்திரத்தைப் பற்றிக் கூறவேண்டினா்.

**திருமந்திரம் பெறல்**:

பூரணா் இராமானுசரிடம், 'நான் கூறப்போகும் திருமந்திரம் திருவரங்கனின் அருளால் கிடைக்கப் பெற்றது. இது எனக்கு மட்டுமே கிடைத்த பொக்கிசம். இதை உங்கள் மூவருக்கும் மட்டுமே போதிக்கின்றேன்" என்றாா். யாரிடம் கூறினாலும் நரகம் கிட்டும் என்ற கட்டளையுடன் திருமந்திரத்தை இராமானுசா் பெற்றாா்.

**திருமந்திரம்:**

"திருமகளுடன் கூடிய நாராயணனின் திருப்பாதங்களைப் புகலிடமாகக் கொள்கிறேன். திருவுடன் சோ்ந்த நாராயணனை வணங்குகிறேன்."

**திருமந்திரம் உரைத்தல்**:

இராமானுசா், பிறவிப்பிணியைத் தீா்க்கும் அருமருந்தான திருமந்திரத்தை எளிய மக்கள் அனைவருக்கும் கூறினாா். பூரணரின் கட்டளையை மீறியதற்கு நான் மட்டுமே நரகம் எனும் தண்டணை பெறுவேன். ஆனால் மக்கள் அனைவருக்கும் நலம் கிட்டும் என்றாா் இராமானுசா்.

**முடிவுரை**:

பூரணா் இராமானுசரின் பரந்த உள்ளத்தை அறிந்து அவரை வாழ்த்தினாா். தனது மகனை இராமானுசருடன் அனுப்பி வைத்தாா்

. :

4) **அழகிரிசாமியின் "ஒருவன் இருக்கிறான்" சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தா் குறித்து எழுதுக**.

**முன்னுரை:**

கல்மனதையும் கரையச் செய்யும் கதை.

**குப்புசாமியின் நிலை:**

குப்புசாமி ஓா் அனாதை.
உறவினா்களால் ஒதுக்கப்பட்டவன்
குப்புசாமி வயிற்றுவலியால் வாடினான்.
மருத்துவமனையில் சோ்க்கப்பட்டான்.

**நண்பனின் செயல்:**

குப்புசாமியின் நண்பன் வீரப்பன்.
வீரப்பன் மூன்று ரூபாய் கடன் வாங்கி குப்புசாமிக்குக் கொடுத்து அனுப்பினான்.
கடிதமும் கொடுதது அனுப்பினான்.

**முடிவுரை:**

குப்புசாமிக்கும் இரக்கம் காட்ட **ஒருவன் இருக்கிறான்**.
அன்பின் துணையில் யாரும் அனாதை இல்லை

*****முன்னுரை:**

மனிதம் என்பது பரந்து விரிந்த வானம் போன்று எல்லையற்றது. எப்படிப்பட்டவா்ககும் ஒரு துணை உண்டு. அந்தத் துணைதான் கல்மனதையும் கரையச் செய்யும் ஒருவன் இருக்கிறான்.

**குப்புச்சாமியின் தோற்றம்:**

குப்புசாமி ஓா் அனாதை. இருபத்தைந்து வயது இளைஞன். எலும்பும் தோலுமான உடம்பு. நீண்ட நாட்களாக வயிற்று வலியால் அவதியுற்றான். தாய்மாமன் வீட்டில் வளா்ந்தான்.ஊரில் வேலை இல்லாததால் சித்தியை நம்பி சென்னைக்கு வந்தான்.

**பக்கத்து வீட்டாா் செயல்:**

சித்தி வீட்டில் படுக்க இடம் இல்லாததால் வெளியில் சன்னலுக்கு அருகில் படுத்திருந்தான். குப்புசாமியைப் பாா்த்து பக்கத்து வீட்டுக்காரா் தன் மனைவியிடம் குறை கூறினாா். மனைவி பாவம் இருக்கட்டும் என்றாள்.

**நட்பின் சிறப்பு:**

குப்புசாமியின் சித்தப்பா அவனை மருத்துவ மனையில் சோ்த்தாா். உறவினா்கள் யாரும் அவரைக் கவனிக்கவில்லை. குப்புசாமியின் நண்பன் ஆறுமுகம் அவனுக்காக மூன்று ரூபாயும் கடிதமும் கொடுத்து அனுப்பினாா். இதைப் பாா்த்த பக்கத்து வீட்டுக்காரா் வெட்கப்பட்டாா்.

**முடிவுரை:**

குப்புசாமிக்கும் இரக்கம் காட்ட **ஒருவன் இருக்கிறான்**.
அன்பின் துணையில் யாரும் அனாதை இல்லை

## வினா எண்: 45

### பொதுக்கட்டுரை

1. **குமரிக்கடல் முனையையும் வேங்கடமலை முகட்டையும் எல்லையாகக் கொண்ட தென்னவர் திருநாட்டிற்குப் புகழ் தேடித்தந்த பெருமை, தகைசால் தமிழன்னையைச் சாரும் எழில்சேர் கன்னியாய் என்று திகழும் அவ்வன்னைக்கு பிள்ளைத்தமிழ் பேசி, சதகம் சமைத்து, பரணிபாடி, கலம்பகம் உண்டு, உலாவந்து, அந்தாதி கூறி, கோவையாத்து, அணியாகப்பூட்டி, அழகூட்டி, அகம்மிக மகிழ்ந்தனர் செந்நாப்புலவர்கள் இக்கருத்தைக் கருவாகக் கொண்டு "சான்றோர் வளர்த்த தமிழ்" என்னும் தலைப்பில் கட்டுரை வரைக.**

**முன்னுரை:**

சான்றோர் வளர்த்த தமிழின் மேன்மையைத் தருவதே கட்டுரை

**அமுதமொழி:**

தமிழ்மொழி பெருமை வாய்ந்தமொழி. அமுதமொழி நம் தமிழ்மொழி.

**சங்கத்தமிழ்:**

சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்தனர் நம் தமிழர்.

**தமிழ் வளர்த்த சான்றோர்:**

அரசர்களும் புலவர்களும் தமிழைப் போற்றி வளர்த்தனர்.

**தமிழ் இலக்கிய வரலாறு:**

இலக்கியங்கள் தோன்றி காப்பியங்கள் உருவாகின.

**கன்னித்தமிழ் - கணினித்தமிழ்**

கன்னித்தமிழைக் கணினிக்கும் ஏற்றத் தமிழாக வளர்த்தனர்.

**முடிவுரை:**

சான்றோர் வளர்த்த தமிழை நாமும் வளர்பபோம்.

2. **விண்வெளியும் கல்பனா சாவ்லாவும்:**

**முன்னுரை:**

பெண்கள் நாட்டின் கண்கள். கல்பனா சாவ்லா நம் மனதில் நீங்கா இடம் பெற்றவர்.

**இளமையும் கல்வியும்:**

கல்பனா சாவ்லா 1961-ஆம் ஆண்டு ஜுலை 1-ஆம் தேதி ஹரியானா மாநிலத்தில் பிறந்தார். அரசுப்பள்ளியில் ஆரம்பக்கல்வியை முடித்தார்.

**முதல் விண்வெளிப்பயணம்:**

1995-ஆம் ஆண்டு பயிற்சிகள் முடித்து 1997-ஆம் ஆண்டு முதல் விண்வெளிப்பயணம் மேற்கொண்டார்.

**இறுதிப்பயணம்:**

கொலம்பியா விண்கலத்தில் 2003-ஆம் ஆண்டு விண்வெளி வீரர்களுடன் பயணம் செய்தார். இதுவே இறுதிப் பயணமாகும். **முடிவுரை:**

அனைவரின் உள்ளத்திலும், நட்சத்திரமாய் ஒளிர்கிறார் கல்பனா சாவ்லா.

3. **உங்கள் பகுதியில் நடைபெற்ற அரசுப் பொருட்காடசிக்குச் சென்று வந்த நிகழ்வைக் கட்டுரையாக்குக.**

**முன்னுரை:**

அனைவரின் மனதையும் கவர்ந்த ஓர் இடம் பொருட்காட்சியாகும் அங்கு சென்று வந்த அனுபவத்தைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**பொருட்காட்சியின் நோக்கம்:**

பல்வேறு விதமான அரங்குகள் மூலம் மக்களுக்குச் செய்திகளைக் கூறுகிறது. மக்களின் பொழுது போக்கு இடமாகப் பொருட்காட்சி விளங்குகின்றது.

**பொருட்காட்சிக்கான இடமும் அமைப்பும்:**

நகரத்தின் மையப் பகுதியில் அல்லது மிகப்பெரிய திடல்.

**பொருட்காட்சியின் நன்மைகள்:**

பொருட்காட்சியில் பல்வேறு பொருட்களை ஒரே இடத்தில் காணலாம். கண்டுகளிக்கலாம்.

பொருட்களை மக்களிடம் நேரடியாக விற்கலாம். சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை மகிழச்சி அடைவர்.

**முடிவுரை:**

பொருட்காட்சி மக்களுக்கான பொழுதுபோக்கு இடம்.

4. **முன்னுரை — சிக்கனமும் சிறுசேமிப்பும் - சேமிப்புப்பற்றிய பழமொழிகள் - சேமிக்கும் வழிகள் - சேமிப்பின் பயன்கள்.**

**முன்னுரை:**

சேமிப்பின் அவசியத்தையும் பயனையும் குறிப்பதே "சிறுதுளி பெருவெள்ளம்" என்ற சொற்றொடர்.

**சிக்கனமும் சிறுசேமிப்பும்:**

நாம் ஒவ்வொருவரும் பணத்தைச் சிக்கனமாகச் செலவிட வேண்டும்.

நம் பிள்ளைகளுக்கும் சிறுவயதிலிருந்தே பணத்தைச் சேமிப்பது எப்படி என்று சொல்லி வளர்த்தால் அவர்களின் எதிர்காலம் நன்றாக இருக்கும்.

**சேமிப்புப் பற்றிய பழமொழிகள்:**

1. சிக்கனம் நாட்டைக் காக்கும் சேமிப்பு வீட்டைக் காக்கும்.
2. சிறுதுளி பெருவெள்ளம்.
3. பணம் பாதாளம்வரை பாயும்

**. சேமிப்பின் பயன்கள்:**

உழைக்கும் காலத்தில் சேர்க்கும் பணம் ஓய்வுக்காலத்திலும், உடல் நலங்குன்றும் போதும் குன்றென உதவுகிறது.

**முடிவுரை:**

'சிறுதுளி பெருவெள்ளம்' ஆவது போல் சிறுகச் சிறுகச் சேமிப்போனின் வருங்காலம் செம்மையுறும்.

5. **நூலகம் - நூலகத்தின் தோற்றம் - நூலகத்தின் பல்வேறு பெயர்கள் - நூலகத்தின் பயன்கள் - முடிவுரை.**

**முன்னுரை:**

"நூலகம் இல்லா ஊருக்கு அறிவுபாழ்" என்பது பழமொழி. நூலகம் பற்றிய செய்திகளை இக்கட்டுரையின் வழி காண்போம்.

**நூலகத்தின் தோற்றம்:**

பலவித நூல்கள் சேகரிக்கப்பட்டுள்ள இடமே நூலகம். மனிதனுக்கு அறிவூட்டும் இடமாகும்.

**நூலகத்தின் பல்வேறு பெயர்கள்:**

புத்தகச்சாலை
ஏடகம்
சுவடியகம்
வாசகசாலை
படிப்பகம்

**நூலகத்தின் பயன்கள்:**

மனிதனுக்குக் கல்வியறிவு மிகவும் இன்றியமையாதது, நூலகம் மாணவர்கள் படிப்பதற்கு ஏதுவாக உள்ளது.

**முடிவுரை:**

நூல்களைப் படித்து அனைவரும் முன்னேற வேண்டும் என்பது நமது நோக்கம்.

---------------

## இயல் 1

**கூடுதல் வினாக்கள்:**

**1.**பாவலரேறு எனப்படுபவர் ----------
2. கனிச்சாறு நூலின் ஆசிரியர் ---------
3.சாகும்போதும்தமிழ்படித்துச் சாகவேண்டும் எனப் பாடியவர் -------------
4.தமிழுக்குக் கருவூலமாய் அமைந்த பெருஞ்சித்திரனாரின் நூல் --------
5. தாள், தண்டு,கோல்,தூது ஆகியவை ----------- எனும் தாவரப்பகுதி
6. திருச்சிராப்பள்ளிக்கு அருகில் அல்லூரில் "திருவள்ளுவர் தவச்சாலை" அமைத்தவர் ------
7.கொழுந்தாடை என்பது-------------
8.பூவின்நிலைகள்-------------

9.செம்மல் என்பது-------------
10 கவை, கொப்பு, சினை, போத்து என்பன தாவரத்தின் --------பிரிவுகள்
11. கவ்வை என்பது -----------பிஞ்சு
12.--------------வரகு, கேழ்வரகு முதலியவற்றின் உமி
13.உலகத்தமிழ்க்கழகத்தை நிறுவியவர் ------------
14.தனிமொழிக்கும் தொடர்மொழிக்கும்பொதுவாய்அமைவது ----------------
15. இசைநிறைஅளபெடைஎன அழைக்கப்படும் அளபெடை---------------------

**விடைகள்: 1. பெருஞ்சித்திரனார் 2. பெருஞ்சித்திரனார் 3. சச்சிதானந்தன் 4. திருக்குறள் மெய்ப்பொருளுரை 5. அடி 6.இரா.இளங்குமரனார் 7. கரும்பின் நுனி8.ஐந்து 9. பூ வாடினநிலை 10. கிளை 11. எள் பிஞ்சு 12.கொம்மை 13.தேவநேயப்பாவாணர் 14.பொதுமொழி 15.செய்யுளிசைஅளபெடை**

**இயல் 2**

1. ப்ராண- ரஸம் என்பதன்பொருள் ------
2. பாட்டுக்கொரு புலவன் எனப் பாராட்டப் பெற்றவர் ----------
3. ‘சிந்துக்குத் தந்தை’ எனப் பாராட்டப்பெற்றவர்----------
4. வேற்றுமைஉருபுகள் மறைந்து வந்துபொருள் உணர்த்துவது----------
5. அண்ணன்தம்பி, தாய்சேய்இத்தொடர்களில் வரும்தொகை---------------
6. காலம் கரந்தபெயரெச்சம் -------------
7. தொகைநிலைத்தொடர் ---------------வகைப்படும்
8. ‘செங்காந்தள்’ இடம்பெறும்தொகை-------

**விடைகள்: 1. உயிர்வளி2. பாரதியார் 3.பாரதியார் 4. வேற்றுமைத்தொகை 5. உம்மைத்தொகை 6. வினைத்தொகை 7. ஆறு 8. பண்புத்தொகை**

**இயல் 3**

1. தொகாநிலைத்தொடர் -------------- வகைப்படும்
2. எழுவாயுடன் பெயர், வினை, வினாஆகியபயனிலைகள்தொடர்வது------------தொடர்
3. முற்றுப்பெறாதவினை, பெயர்ச்சொல்லைக்கொண்டு முடிவது------------
4. ‘கேட்டபாடல்’என்றதொடர் --------------தொடர்
5. வருக!வருக! என்பது --------தொடர்
6. ‘நச்சப்படாதவன்’ செல்வம் தொடரில் உள்ள நச்சப்படாதவன் என்றசொல்லின் பொருள் ----
   **விடைகள்: 1.ஒன்பது 2. எழுவாய் 3.பெயரெச்சத்தொடர் 4. பெயரெச்சத்தொடர் 5. அடுக்குத்தொடர் 6. விரும்பப்படாதவன்**

**இயல் 4**

1. வித்துவக்கோட்டு இறைவனை குலசேகராழ்வார் ------------ஆக உருவகித்துப்பாடுகிறார்.
2. பெருமாள் திருமொழியில்˙ ------------பாடல்கள் உள்ளன.
3.உயர்திணை---------பிரிவுகளை உடையது
4.இலக்கணப் பிழையின்றிப் பேசுவதும் எழுதுவதும் -----------எனப்படும்.
5. ஒரு விரலைச்சுட்டிச் சிறியதா? பேரியதா? என்று கேட்டல்----------வழு
6. “கத்துங்குயிலோசை – சற்றே வந்து
   **காதிற் படவேணும்”-பாரதியார் -இத்தொடரில் இடம்பெறும் வழுவமைதி-----------**

**விடைகள்: 1. அன்னையாக 2. 105 3. மூன்று 4. வழாநிலை 5. வினா 6. மரபு**

**இயல் 5**

1ஒரேநேரத்தில்நூறு செயல்களைச் செய்துகாட்டுபவர்----------

2வினா வகைகள்-----------
3விடைவகைகள் --------------
4 தான் ஒரு பொருளை வாங்கிக்கொள்ளும் பொருட்டு வினவும் வினா ----------
5. இச்செயலைச்செய்தது மங்கையா? மணிமேகலையா? என வினவுவது------------
6. மறுத்துக்கூறும் விடை--------------
7. உடன்பட்டுக் கூறும் விடை------------
8. வினாவிற்கு விடையாக இன்னொரு வினாவைக் கேட்பது ------------
9. உனக்குத் கதைஎழுதத்தெரியுமா?என்ற வினாவிற்கு ‘கட்டுரைஎழுதத்தெரியும்’என்றுகூறுவது -------- விடை
10. பொருள்கோள் ----------வகைப்படும்.
11. நிரல்நிறைப் பொருள்கோள் -------------வகைப்படும்
12. “அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது” குறளில் இடம்பெறும்பொருள்கோள்----------
**13.** பாடலின் தொடக்கம் முதல் முடிவுவரைநேராகவே பொருள் கொள்ளுமாறு அமைந்தால் அது -------- ---------ஆகும்**.**

**விடைகள்:**

**1 சதாவதானி, 2ஆறு 3, எட்டு 4. கொளல் 5. ஐய வினா 6. மறை விடை 7. நேர்விடை 8. வினாஎதிர்வினாதல9. இனமொழி 10. எட்டு 11.இரண்டு 12.முறைநிரல்நிறைப்பொருள்கோள் 13. ஆற்றுநீர்ப்பொருள்கோள்.**

## இயல் 6

1. ஓர் உயிர் பல இடங்களில் பரவிஓடுவதுபோல் பாயும்ஆறு-------------------
2. ‘ஓசைதரும் இன்பம் உவமையிலாஇன்பமடா’ என்று பாடியவர் ----------
3. மை, மரகதம் போன்ற நிறங்களைஉடையவன் -------------
4. காலனுக்குத் தூதரானவர் கையில் இனி உறங்க வேண்டியவன் ------------
5. கம்பராமாயாணத்துக்கு கம்பர் இட்ட பெயர் -------------
6. கம்பராமாயாணம் -------------- காண்டங்களைஉடையது.
7. ----------வீட்டுக்கட்டுத்தறியும்கவிபாடும்.
8. ----------என்னும் ஒன்பாவிற்கு உயர் கம்பர்.
9. அகத்திணை ------------- வகைகள்
10. நண்பகலில் கால அளவு ----------முதல் --------- வகை
11. கடலும் கடல் சார்ந்த இடமும் ---------------------------
12. ஓராண்டின் ஆறு கூறுகள்-------------------
13. வைகறை எனும் சிறுபொழுதுக்குரிய நிலம்-------------------
14. பட்டினம், பாக்கம் ஆகியவை ------------- நில ஊர்கள்
15. துடிஎன்னும்இசைக்கருவி-----------நிலத்திற்குரியது.
16. ஏறுதழுவுதல் ---------நிலத்திற்குரியதொழில்
17. மருத நிலத்தெய்வம்--------------
18. கொற்றவை----------- நிலக்கடவுள்
19. ‘குன்றேறி யானைப்போர்கண்டற்றால் தன்கைதொன்
றுண்டாகச் செய்வான் வினை’ - குறட்பாவில்அமைந்துள்ள அணி----------
20. பொருளல்லவரைப் பொருளாகச்செய்யும்
பொருளல்ல தில்லை பொருள் -குறட்பாவில் பயின்று வரும் அணி ---------

21. ‘தேவரணையர் கயவர்’ என்றகுறட்பாஉணர்த்தும்அணி ------------------

**விடைகள்:**

1. **.சரயு , 2. பாரதியார், 3.இராமன் 4..கும்பகர்ணன் 5.. இராமவதாரம் 6.ஆறு. 7, கம்பன் 8.விருத்தம் 9 எழு 10.காலை 10 மணிமுதல் 2 மணிவரை 11.நெய்தல் 12பெரும்பொழுது 13 மருதம் 14.நெய்தல் 15.பாலை 16. முல்லை 17..இந்திரன் 18..பாலை 19. உவமைஅணி 20.பொருள்பின்வருநிலையணி 21. வஞ்சப்புகழ்ச்சி அணி**

**இயல் 7**

1. ‘நெடுவேள்குன்றம்’ என்றழைக்கப்படும் மலை-------------
2. கண்ணகியையும் கோவலனையும் மதுரைக்குஅழைத்துச் சென்றவர் ---------------
3. இளங்கோவடிகள் ---மரபைச்சேர்ந்தவர்
4. “அடிகள் நீரே அருளுக” என்றவர் ------------------
5. உப்பு விற்பவர் --------------
6. பாசவர் என்பவர் ---------
7. கோப்பரகேசரி எனப்பட்டவர் --------------
8. புலவர்களால் எழுதப்பட்டுக்கல்தச்சர்களால் கல்லில் பொறிக்கப்பட்டவை-------------
9. ‘தமிழா! துள்ளி எழு! ஏன்னும் தலைப்புடைய துண்டறிக்கை வழங்கியதற்காகசிறையிலிடப்பட்டவர் --------------
10. தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம் என்று முழங்கியவர் -------------
11. கன்னியாகுமரி தமிழ்நாட்டுடன் இணையபோராட்டத்தை முன்னெடுத்துச் சென்றவர் --------------
12. புறத்திணை -------------வகைப்படும்.
13. ஆநிரைகவர்தல் ------------- திணை
14. தற்போதுமுடக்கத்தான் என அழைக்கப்படும் புறத்திணை பூ-----------
15. பொருந்தாக் காமத்ததைக் குறிப்பது----------------
16. கைக்கிளைஎன்பது---------------

**விடைகள்:**

**1. சுருளி மலை 2. கவுந்தியடிகள், 3. சேர 4,சீத்தலைச்சாத்தனார் 5, உமணர் 6. வெற்றிலை விற்பவர் 7.இரண்டாம் இராசராசன் 8.மெய்க்கீர்த்தி 9. ம.பொ.சிவஞானம் 10 ம.பொ.சிவஞானம் 11. மார்ஷல்ஏ. நேசமணி 12.பன்னிரண்டு 13.வெட்சி 14. உழிஞை 15.பெருந்திணை 16 ஒருதலைக்காமம்**

**இயல் 8**

1. இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம் எனும் அறவிலை வணிகன் ஆஅய் அல்லன் - செய்யுளில் இடம்பெறும் மன்னன் யார்?
2. ‘செம்மை சான்ற காவிதி மாக்கள்’ யாவர்?
3. மதுரை அறங்கூறவையம் -----------------போல நடுநிலைமிக்கது
4. செல்வத்துப்பயனே ----------------என்கிறதுபுறநானூறு.
5. ‘பசிப்பிணி மருத்துவர்’ எனப்போற்றப்பட்டவர்கள்-------------
6. --------மறுமை நோக்கிக் கொடுக்காதவன் என்கிறார் பரணர்.
7. உறவினர் கெட வாழ்பவனின் பொலிவு அழியும் என்றவர் -------------

8. பிறருக்கு உதவுவதே----------என்கிறார் ஈழத்துப் பூதந்தேவனார்.
9. பிழையா நன்மொழி என்று நற்றினைஇதனைக்குறிப்பிடுகிறது.
10. ‘ஜென்தத்துவம்’ எந்தமதத்தின்அடிப்படை
11. ‘தாவோயியம்’ --------------- நாட்டுத் தத்துவம்
12. ‘பறம்பு மலை’ அமைந்துள்ளமாவட்டம்-------------
13. தாம் வருந்திப் பெற்ற மந்திரத்தை எளியமக்களுக்க கூறியவர்-------------
14. யாப்பின் உறுப்புகள்-------------
15. வெண்பாவின் ஓசை------------
16. ஆசிரியப்பாவின் ஓசை---------------
17. துள்ளல் ஓசை ---------பாவிற்குரியது
18. வஞ்சிப்பாவின் ஓசை-----------
19. ஈற்றடியின் ஈற்றுச்சீர் நாள்,மலர், காசு, பிறப்பஎன முடிவது-------------
20. ஈற்றடியின் ஈற்றுச்சீர் --------ல்முடிவதுஆசிரியப்பா
21. ஒருவர் பேசுவது அல்லது உரையாற்றுவது போன்ற ஓசை-----------
22. பதின்மூன்றடிக்கு மேற்பட்டு வரும் வெண்பா-------------
23. மூவசைச்சீர் ------------- வகை
24. இருவர் உரையாடுவதுபோன்ற ஓசை--------------
25. ‘அவன் மனக்கோட்டை கட்டினான’இத்தொடரில் மனக்கோட்டை என்பது-----------------
26. கவிதை வெளியீட்டுக்கு எளியபாவகை---------------

**விடைகள்: 1. ஆய் 2, அமைச்சர்கள், 3.துலாக்கோல், 4 ஈதல், 5.வள்ளல்கள், 6. பேகன், 7.பெருங்கடுக்கோ, 8. உதவியாளர்கள் 9 வாய்மை 10. பௌத்தம் 11. சீன 12.சிவகங்கை 13. இராமானுஜர் 14.ஆறு 15. செப்பலோசை 16அகவல் 17. கலிப்பா 18 தூங்கல் 19.வெண்பா 20. ஏகாரத்தில் 21.ஆசிரியப்பா 22 கலிவெண்பா 23. எட்டுவகை 24. செப்பலோசை25. மரபுத்தொடர் 26. ஆசிரியப்பா**

## இயல் 9

1. பொருத்துக பிழையானதைதேர்ந்தெடு
   அ. துணர் - மலர்கள்
   ஆ.படலை - மாலை
   இ. கான் - காடு
   ஈ. சேக்கை - கட்டி
2. தவமணிமார்பன் யார்?
3. ‘இஸ்மத்சன்னியாசி’ என அழைக்கப்பட்டவர் ------------
4. தேம்பாவணியில் காண்டங்களின் எண்ணிக்கை
5. கீழ்வருவனவற்றுள்வீரமாமுனிவர் எழுதாத நூல்
   அ. பரமார்த்த குரு கதைகள்
   ஆ. சதுரகராதி
   இ. தொன்னூல் விளக்கம்
   ஈ. நன்னூல்
6. சாகித்ய அகாதெமி விருதுபெற்ற ஜெயகாந்தனின்புதினம்--------------
7. ஜெயகாந்தனின் திரைப்படமானபடைப்பு
   அ. பாரிசுக்குப்போ ஆ. சிலநேரங்களில் சில மனிதர்கள் இ. கங்கை எங்கேபோகிறாள்.

ஈ. சுந்தரகாண்டம்

8. “நீங்கள் கதை என்று நினைத்துக்கொண்டிருக்கிறீர் அதுகாலத்தின் ஒரு வாழ்க்கையின் சாசனம்” என்ற முன்னுரை அமைந்த புதினம்
9. “எண்ணமும் எழுத்தும் உயர்ந்திருக்கும் - ஏழை கண்ணீரும் பாடலிலே கலந்திருக்கம் - என்ற வரிகளை ஜெயகாந்தன் யாருக்காக எழுதினார்?
10. ஜெயகாந்தனின் ‘தர்க்கத்திற்கு அப்பால்’சிறுகதையின் கருப்பொருள்-----------
11. ‘ஒருவன் இருக்கிறான்’ என்ற சிறுகதை வெளிவந்தஇதழ்-------------
12. “போருழந் தெடுத்தஆரெயில் நெடுங்கொடி ‘வாரல்’ என்பன போல் மறித்துக்கைகாட்ட’ இச்செய்யுளில் பயின்று வரும் அணி---------------
13. தீவகம் என்ற சொல்லுக்கு -------------- பொருள்
14. தன்மையணியின்வகைகள் -------------
15. கு. அழகிரிசாமி ---வட்டார எழுத்தாளர்
    அ. கொங்கு ஆ. கரிசல் இ. நாஞ்சில் ஈ. தஞ்சை
16. தீவக அணி ---------- வகையாகவரும்.

**விடைகள்:**

1. **ஈ. சேக்கை – கட்டி 2. கருணையன் 3. வீரமாமுனிவர் 4. மூன்று 5.நன்னூல் 6. சிலநேரங்களில் சிலமனிதர்கள் 7. சிலநேரங்களில் சிலமனிதர்கள் 8பாரீசுக்குப் போ 9 பட்டுகோட்டை கல்யாண சுந்தரம் 10. மனிதம் 11. கலைமகள் 12 தற்குறிப்பேற்ற அணி13. விளக்கு 14. நான்கு 15. ஆ. கரிசல் 16.மூன்று**

## மனப்பாடப் பாடல்

## திருக்குறள்

1. எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
   மெய்ப்பொருள் காண்ப தறிவு
2. பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே
   நல்லார் தொடர்கை விடல்
3. பண்என்னாம் பாடற் கியைபின்றேல் கண்என்னாம்
   கண்ணோட்டம் இல்லாத கண்
4. அருமை உடைத்தென் றசாவாமை வேண்டும்
   பெருமை முயற்சி தரும்
5. முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
   இன்மை புகுத்தி விடும்
6. செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்
   தியற்கை அறிந்து செயல்
7. பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
   பொருளல்ல தில்லை பொருள்
8. குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்
   றுண்டாகச் செய்வான் வினை
9. குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
   சுற்றமாச் சுற்றும் உலகு
10. இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின்
    இன்மையே இன்னாத தது.

**அன்னை மொழியே**

1. அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!
   முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!
   கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்
   மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!

2. தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!
இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!
மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!

**பெருமாள் திருமொழி**

3. வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன்பால்
மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்
மீளாத் துயர்தரினும் வித்துவக் கோட்டம்மா! நீ
ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே

**நீதி வெண்பா**

4. அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை
அருத்துவதும் ஆவிக்கு அருந்துணையாய் இன்பம்
பொருத்துவதும் கல்வியென்றே போற்று

**கம்பராமாயணம்**

5. தண்டலை மயில்களாட தாமரை விளக்கந் தாங்க
கொண்டல்கள் முழவினேங்க குவளைகண் விழித்துநோக்க
தெண்டிரை யெழினி காட்ட தேம்பிழி மகரயாழின்
வண்டுகளி னிதுபாட மருதம்வீற்றி ருக்கும்மாதோ

6. வெய்யோன் ஒளிதன் மேனியில் விரிசோதியில் மறையப்
பொய்யோ எனும் இடையாளொடும் இளையானொடும் போனான்
மையோ மரகதமோ மறிகடலோ மழைமுகிலோ
ஐயோ இவன் வடிவு என்பது ஓர் அழியா அழகு உடையான்

**சிலப்பதிகாரம்**

7. தூசும் துகிரும் ஆரமும் அகிலும்
மாசுஅறு முத்தும் மணியும் பொன்னும்
அருங்கல வெறுக்கையோடு அளந்துகடை அறியா
வளம்தலை மயங்கிய நனந்தலை மறுகும்:
பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு
கூலம் குவித்த கூல வீதியும்:

**காலக்கணிதம்**

8. மாற்றம் என்பது மானிடத் தத்துவம்:
மாறும் உலகின் மகத்துவம் அறிவேன்!
எவ்வெவை தீமை எவ்வெவை நன்மை
என்ப தறிந்து ஏகுமென் சாலை!
தலைவர் மாறுவர்: தர்பார் மாறும்:
தத்துவம் மட்டுமே அட்சய பாத்திரம்!
கொள்வோர் கொள்க: குரைப்போர் குரைக்க!
உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது:
நானே தொடக்கம்: நானே முடிவு:
நானுரைப் பதுதான் நாட்டின் சட்டம்!

**தேம்பாவணி**

9. நவமணி வடக்க யில்போல்
நல்லறப் படலைப் பூட்டும்
தவமணி மார்பன் சொன்ன
தன்னிசைக்கு இசைகள் பாடத்
துவமணி மரங்கள் தோறும்
துணர்அணிச் சுனைகள் தோறும்
உவமணி கானம்கொல் என்று
ஒலித்து அழுவ போன்றே

## முயல்க: பயிற்சி வினாக்கள்

## கவிதைப்பேழை (கூடுதல் குறு வினாக்கள்)

1. பெருஞ்சித்திரனார் தமிழ் உணர்வை பரப்பிய இதழ்கள் யாவை?
2. பெருஞ்சித்திரனார் படைத்த நூல்கள் யாவை?
3. எட்டுத்தொகை நூல்கள் யாவை?
4. பாரதியார் எழுதிய பாடல்கள் யாவை?
5. மனதை மயக்கச் செய்வது எது?
6. பாரதியார் காற்றிடம் வேண்டும் வேண்டுகோள்கள் யாவை?
7. பண்டைத்தமிழரின் மருத்துவமுறை யாது?
8. ‘வித்துவக்கோட்டம்மா’ – வித்துவக்கோட்டில் உறைந்துள்ள இறைவன் ஆணா? பெண்ணா?
9. ‘சதாவதானம்’ என்றால் என்ன?
10. கம்பராமாயாணம் - குறிப்பு வரைக.
11. கம்பர் ஆசிரியர் குறிப்பு தருக
12. இராமனின் அழகைக் கம்பர் எவ்வாறு வருணிக்கிறார்?
13. இராசராச சோழனின் பட்டங்கள் யாவை?
14. மெய்கீர்த்தி என்றால் என்ன?
15. இரட்டைக்காப்பியங்கள் யாவை?
16. ‘அடிகள் நீரே அருளுக’ என்று யார் யாரிடம் கூறியது?
17. சிலப்பதிகாரம் எவ்வாறெல்லாம் சிறப்பிக்கப்படுகிறது?
18. சிலப்பதிகாரத்தின் மூன்று காண்டங்களை எழுதுக.
19. வீரமாமுனிவரின் படைப்புகள் யாவை?
20. வந்தாசாகிப் ‘ இஸ்மத் சன்னியாசி’ என்னும் பட்டத்தை வீரமாமுனிவருக்கு அளிக்கக்காரணம் யாது?

## கவிதைப்பேழை சிறுவினா கூடுதல்

1. காற்றே வா! ஏன்னும் பாடலில் பாரதியார் பாடுவது யாது?
2. செய்குதம்பிப் பாவலர் - சிறுகுறிப்பு வரைக.
3. இரண்டாம் இராசராச சோழனின் பெருமைகளை எழுதுக.
4. கண்ணதாசன் - குறிப்பு வரைக
5. கருணையன் தன் தாயை இழந்து வாடுகின்ற துயரை எவற்றோடு ஒப்பிபட்டுக் கூறுகிறார்?

## உரைநடைஉலகம் குறுவினா (கூடுதல்)

1. தமிழ்த்திரு இரா. இளங்குமரனார் எழுதிய நூல்கள் யாவை?
2. பூவின் நிலைகளைக் குறிக்கும் சொற்களை எழுதுக.
3. சிவஞானிக்கு அன்னையார் இளமையிலே பயிற்றுவித்த பாக்கள் யாவை?
4. மத்திய சிறையில் சிவஞானி அடைக்கப்பட்டபோது அவர் கண்ட தலைவர்கள் யாவர்?
5. வடக்கெல்லைப்போராட்டங்கள் தொடங்கிய இடங்கள் யாவை?
6. வடக்கெல்லைப்போராட்டத்தில் சிறையிலிருந்த போது உயிர் துறந்தவர்கள் யாவர்?
7. அறத்தின் குறியீடுகளாகப் போற்றப்பட்டவை யாவை?
8. அரசனின் கடமை யாது?
9. கொடைப்பெருமைகளாகப் பேசப்படுபவை யாவை?
10. போர் அறம் யாரை எதிர்த்துப் போர் செய்யாமையைக் குறிக்கிறது?
11. ஜெயகாந்தன் பெற்ற விருதுகள் யாவை?
12. ஜெயகாந்தன் தான் எழுதுவதற்கான காரணம் எனக் கூறியது யாது?
13. ஜெயகாந்தன் எழுதிய குறும்புதினங்களில் சிலவற்றை எழுதுக.
14. ஜெயகாந்தன் பார்வையில் சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனை எது? மிகப்பெரிய சவால் எது?
15. ஜெயகாந்தனின் திரைப்படமான படைப்புகள் யாவை?

### உரைநடைஉலகம் சிறுவினா (கூடுதல்)

1. போர் அறம் குறித்து எழுதுக?
2. வாய்மை குறித்து இலக்கியங்கள் கூறும் செய்திகளை எழுதுக.
3. ம.பொ.சிவஞானம் - குறிப்பு வரைக
4. மார்ஷல் ஏ. நேசமணி – குறிப்பு எழுதுக.
5. தாவரங்களின் இலை வகைகளைக் குறிக்கும் சொற்களை எழுதுக.
6. தேவநேயப்பாவாணர் பற்றி எழுதுக.
7. கெட்டுப்போன காய்கனி வகைகளைக் குறிக்கும் சொற்கள் யாவை?
8. பழங்களின் மேற்பகுதியினைக் குறிக்க வழங்கும் சொற்கள் யாவை?

## உரைநடைஉலகம் நெடுவினா (கூடுதல்)

1. தமிழ்ச்சொல் வளத்தை பயிர்வகைச் சொற்கள் வழிநின்று எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.
2. கொடை குறித்து சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ள செய்திகளைத் தொகுத்து எழுதுக.

~~~~~~~~~~~
~~~~~~~~~~~